
www.tamilarangam.net


Canada................1.25$
France................12.00F
Germany................3.00DM
India......................12.00Rs
Norway................ 14.00Kr
Srilanka...............20.00Rs
Switzerland............2.50SF
United Kingdom.......... 90p




# நாழிகை


AUGUST, 1993

The International Tamil Newsmagazine



## சோதனைகள் மிகும் தலைவர்கள்







**செவ்வி: சித்திரா விஸ்வேஸ்வரன்**

"அரங்கேற்றத்தில் மாணவியின் விடைத்தாளை எல்லோருமே பார்க்கிறார்களே!"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

அழகொளிரும்
எவர்சில்வர் பாத்திரங்கள்
உபகரணங்கள்

அவை
உங்களுக்கும் 'அவர்களுக்கும்'
மன நிறைவான
**பரிசுப் பொருள்கள்**

**குமரன்ஸ்**

KUMARANS



**142 HOE STREET**
**WALTHAMSTOW**
**LONDON E17 4QR**
**TEL: 081 - 5214955**
**FAX: 081 - 521 9482**

**69 HOLLOWAY ROAD**
**HIGHBURY & ISLINGTON**
**LONDON N7 8JZ**
**TEL: 071 - 609 1912**
**FAX: 071 - 609 0501**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**4 உலக விவகாரம்**

பொஸ்னியாவில் இரண்டு வருடங்களாகத் தொடரும் துன்பியல் நாடகம்.



**13 இந்தியா**

ஊழலோ இல்லையோ ராவ் பதவி விலகத் தேவையில்லை.



**28தமிழ்நாடும் தலைநகரும்**

ஜெயலலிதா காய்களை நன்றாகவே நகர்த்துகிறார்.



**21 செவ்வி: சித்திரா விஸ்வேஸ்வரன்**

*கமலாவின் வாத்தியாரிடம் கற்க விழைந்த ஆசை!*


எண்ணம் .......................... 5

நூறாண்டில் தவசீலர் .......................... 8

இலங்கை:

கலங்கிய குட்டையில் திமிங்கில வேட்டை 9

ஜெர்மனி:

அகதிகளைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் 18

பிரான்ஸ்:

பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரம் ..... 26

தமிழ்நாடும் தலைநகரும்:

தி.மு.க. உடைகிறதா? .......................... 29


சிறுகதை:

இன்னும் சில அரங்கேற்றங்கள் .......... 30

கவிதை .......................... 33

பிரிட்டனில் வாழவிரும்பாத பிரிட்டிஷார் .. 34

ஜன்னல் .......................... 36

**35 பக்கிங்ஹாம் மாளிகை**

ஆகஸ்டிலிருந்து பொதுமக்கள் பார்வைக்கு விடப்படுகிறது.



**20 சினிமா**

சுரேஷ் மேனன் தாமே தயாரித்து இயக்கி கதாநாயகனாகவும் நடித்த 'புதிய முகம்'.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Nazhikai**
The International Tamil Newsmagazine

**EDITOR:**
S. Mahalingasivam

**CONTRIBUTING EDITORS:**
S. Swaminathan, Wimal Sockanathan, M. Pushparajan, Dharshini Somasundaram, Jamuna Rajendran

**LAYOUT ARTIST:**
K. Krishnarajah

**TECHNICAL ASST:**
K. Nagasothy

**EDITORIAL OFFICE:**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
U.K.
Tel: 081 - 961 5962
Fax: 081 - 961 5962

**PUBLISHERS:**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
U.K.

**PRINTERS:**
Goodhead Press Ltd
Bicester
Oxon

**SUBSCRIPTION FOR 12 ISSUES**
UK: £14.00
Europe / India / Sri Lanka: £15.00
All other countries: £20.00
Cheque payable to Newsmedia International Limited

அன்புள்ள வாசக நேயர்களுக்கு,

உங்கள் கைகளிலே 'நாழிகை'யின் முதலாவது இதழ்.

நீங்கள் என்ன நினைத்தாலும், உங்கள் நினைவிலே நியாயம் இருக்கலாம்.

'அசட்டுத் துணிச்சல்' என்று சில சமயங்களில் எண்ணலாம். ஆனால், அதற்குத் தேவை இருக்கிறது. அந்த தேவையை நியாயமாக நிறைவுபடுத்த வேண்டும். அப்போது அது இயல்பானதாகிவிடலாம்.

தமிழர்கள் இன்று உலகின் எல்லாப் பகுதிகளிலுமே வாழ்கிறார்கள். தமது தனித்துவத்தைப் பேணி வாழ்கிறார்கள். அந்த நிலையிலே, ஆங்கிலத்திலே வெளிவருவன போன்ற ஒரு சர்வதேச செய்திச் சஞ்சிகை யாகவே 'நாழிகை' பிறக்கிறது. ஆனால், அந்த வடிவத்தை அது முழுமையாகப்பெற சற்று காலங்கள் ஆகலாம்.

பொதுவான சர்வதேச விவகாரங்களோடு, நம்முடைய சிறப்பான ஈடுபாடுகளை நோக்குவோம். அந்தவிதத்தில், பாரம்பரிய தமிழ் நாடுகளுக்கும் ஏனைய தமிழர் வாழிடங்களுக்குமிடையே ஒரு பரிமாற்றத்தைக் காண்போம். அவர்கள் தொடர்பானவற்றில் அவ்வப்போது எமது எண்ணத்தைக் குவிப்போம்.

செய்தித் துறையிலே லண்டனின் தனித்துவமும், கீர்த்தியும் சிறப்பானதென்றாலும், அச்சேற்றுவது என்பது இங்கு அவ்வளவு எளிதானதல்ல. அதுவே சில கட்டுப்பாடுகளைத் திணிக்கிறது. அவற்றை மெல்ல மெல்ல விடுவிப்போம்.

முதலாவது இதழ் ஜூனிலே வெளிவருவதற்கு ஏற்ற விதத்தில் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தபோது, ஏற்பட்ட சில தொழில்நுட்ப சிக்கல்கள் விஞ்சின. சில இடங்களிலே அந்த 'கால இடைவெளி'யை முற்றாக நிவர்த்திசெய்துவிட இயலவில்லை.

உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

எல்லா நாடுகளிலும் நிருபர்கள் தேவை; விபரங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

விற்பனையாளர்கள், விளம்பரதாரர்களும் தொடர்புகொள்க.

வணக்கம்.

ஆசிரியர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையில் புதிய ஜனாதிபதியும் தமிழர் பிரச்னையும்

இலங்கையிலே திடீரென்று ஆட்சிப் பீடத்தில் ஒரு மாற்றம் ஜனாதிபதி பிரேமதாச கொலை செய்யப் பட்டதையடுத்து ஏற்பட்டிருக்கிறது. ஜே.ஆர்.ஜயவர்த் தன, பிரேமதாச ஆகியோரது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.) ஆட்சி தானென்றாலும், ஜனாதிபதியாகியிருக்கும் டி.பி. விஜேதுங்க, மக்கள் மாத்திரமன்றி, அவரேகூட எதிர்பாத்திராத விதத்தில் அப் பதவிக்கு வந்தவர்.

முக்கியமான அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சராகவும், பிரதமராகவும் இருந்தவேளைகளில், 'அமைதியான - நல்ல மனிதர்' என்று அறியப்பட்டிருந்தாலும், ஆட்சிப் பொறுப்புமிக்க ஜனாதிபதியாக அவருடைய நடவடிக்கைகள் - ஆட்சித் திறன் - போக்கு எப்படியிருக்குமென்பதுபற்றி ஆருடமெதனையும் கூற முடியாமலே இருந்தது. பதவியேற் றதும் ஐ.தே.க.வில் அதன் பெருமளவிலான ஆதரவாளர்களின் மனத்தாங்கலை - நாடித்துடிப்பை நன்குணர்ந்து, அதற்கான பரிகார நடவடிக்கைகளை உடனடி யாகவே மேற்கொண்டார்; மேற்கொள்கிறார். அப்படி, அதன் மொத்த ஒரு வெளிப் பாடுதான் பிரேமதாச ஆட்சியில் பிடி ஆணைவிடுத்துத் தேடப்பட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடகம்பொல இன்று நாடு திரும்பியுள்ளமை.

ஆனால், ஐ.தே.க. உள்ளிட்ட பெரும்பான்மைச் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த, அல்லது அவர்களின் ஆதரவைத் தேட, அங்குள்ள தமிழ் மக்களின் பிரச்னையை வழக்கம் போலவே அரசியற் பகடைக்காயாக்க விஜேதுங்கவும் முனைகிறாரா? இந்தக் கேள்வி இப்போது எழுப்பப் படவேண்டியதாகவே இருக்கிறது.

தமிழர் பிரச்னைக்கு நியாயமான தீர்வொன்றைக் காண்பதற்கென்று நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரி வுக்குழு, இரண்டாண்டு காலமாக ஒரு கண்துடைப்பு நட வடிக்கையாகவே அமைந்தது. தமிழ்க் கட்சிகளனைத்தும் அதிலிருந்து வெளியேறிவிட, வடக்கு, கிழக்கு இணைப்பைத் தீர்மானிப்பதற்கு கிழக்கில் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நான்கு மாதங்களில் நிகழ்த்த அது தீர்மானித்தது. அத் தீர்மானத்தை இத் தெரிவுக்குழுமுன் தங்களது ஆலோ சனைகள் எதனையுமே தெரிவிக்காத ஆளும் ஐ.தே.க.வும், பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வரவேற்று தமது 'வேஷத்தை' வெளிப்படுத்தின. இது முற்றிலும் தற்காலிக அரசியல் லாபங்கருதிய ஒரு நோக்கே தவிர, நாட்டின் இனப் பிரச்னைக்கான ஒரு தீர்வைக் காணும் சிந்தை அல்ல.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு முன்னதாக, ஓரளவுக்கு அந்த ஒப்பந்தத்துக்கு ஆதாரமானவை என்று கருதக்கூடிய, இலங்கை அரசுக்கும் இலங்கைத் தமிழ்க் கட்சிகளுக்கு மிடையே, இந்திய அரசின் அநுசரணைகளோடு நடந்த பல கட்ட பேச்சுவார்த்தைகளில் ஒருதடவை, இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ஜயவர்த்தன, "நான் எது வேண்டுமானாலும் தருகிறேன்; ஆனால், வட-கிழக்கு இணைப்பை மாத்திரம் விட்டுவிடுங்கள்" என்று கூறியதையும், அதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் காலஞ்சென்ற தலைவர் அமிர்தலிங்கம், "எதை வேண்டுமானாலும் நாம் விட்டுத்தருகிறோம்; ஆனால், வட-கிழக்கு இணைப்பைத் தவிர" என்று பதிலளித்திருந்ததையும் இங்கு நினைவுகூர்ந்தால் இந்தப் பிரச்னையின் தாத்பரியம் நன்கு புரியும்.

ஆக, இத்தகைய ஒரு பிரச்னைக்கு தெரிவுக்குழு தீர்வுகாண விழைந்த விதமும், அந்த ஒருபட்சத் தீர்மானத்தை பிரதான இரு பெரும்பான்மைக் கட்சிகளும் ஆதரித்தமையும், அது சாத்தியப்படாதென்பதை காலங்கடந்தாவது உணர்ந்து கைவிட்டாலும், அங்கு வாழ்கின்ற தமிழ் மக்களின் அபிலாஷைகளை அவை இன்னமும் புரிந்துகொள்ள மறுக்கின்றன என்பதைத் துல்லியமாகக் காட்டுகின்றன.

இலங்கையிலே தமிழ் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள பிரச்னைகள் முற்றிலும் அரசியல்வாதிகளால் ஏற்படுத் தப்பட்டவையே. அதன் விளைவாக, தங்களது அரசியல் உரிமைகளுக்காகப் போராட வெளிப்பட்ட தமிழ் மக்கள், இன்று அரசியல் உரிமைகள் மாத்திரமன்றி, அடிப்படை மனித உரிமைகளையுமே இழந்து நிற்கின்றனர். இந்த நிலையிலே, ஜனாதிபதி விஜேதுங்கவும் 'சில்லறை' அரசியல்தான் நடத்தப்போகிறாரா?

இப்போதைய அரசின் ஸ்திரத்தையும், வெளிநாடுகளின் கண்டன தளர்வையும், தடையின்றிக் கிடைக்கும் நிதி உதவியையும் கண்டு, தமிழர் பிரச்னையில் மீண்டும் அரசியல் நடத்த ஜனாதிபதியும், அரசும், மற்றைய கட்சிகளும் முனைந்தால், அது நீடிக்காத ஒன்றாகவே இருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


THAMPA
SOLICITORS

ZAMBIA HOUSE
8A SOUTHHILL AVENUE
SOUTH HARROW
MIDDX HA2 ONQ
TEL:081-426 6562
HOME:081-422 8248
FAX:081-426 8307

* CONVEYANCING
* LITIGATION
* IMMIGRATION MATTERS
* WILLS & PROBATE
* LANDLORD & TENANT
* MATRIMONIAL MATTERS
* PERSONAL INJURY
* LIQUOR LICENSING

LEGAL AID WORK UNDERTAKEN


# சொன்னார்கள்

■ "என் முதுகில் குத்தும் நண்பனைவிட நேருக்கு நேர் மோதும் எதிரி மேல்." -ஜெயலலிதா.
(ஜெயலலிதா இல்லம்மீதுவான்தாக்குதல் அபாயம்பற்றி மத்திய அரசுபரிசீலிக்கவேண்டும்என்று தி.மு.க. அறிக்கைவிட்டதையடுத்து)


■ "இளமையில் நான் மரியுவானா உள்ளெடுத்துப் பார்த்தேன். அரசியல்வாதிகளிடமிருந்து கனடியர்களுக்கு நேர்மையான பேச்சு வேண்டும்; நாம் யார்? என்பது அவர்களுக்குத் தெரியவேண்டும்."-கனடாவின் புதிய பிரதமர் கிம் காம்ப்பெல்.

■ "விஷயம் அற்ற வெறும் அரசியல் வசீகரம் ஆபத்தானது."-கிம் காம்ப்பெல்

■ "ஆச்சரியமாக இருக்கிறது; நான் அதிகம் பிழைவிடவில்லை. அந்த வினாக்கள் மிகவும் குழப்பமானவை."-இத்தாலி போக்குவரத்து அமைச்சர் ஆர். கொஸ்தா.
(இத்தாலியின் புதியஎழுத்துமூலமானவாகனசாரதிதேர்வில் அவர் சித்திஎய்தாதபோது)

■ "சில சமயங்களில் செல்வாக்கிழந்துபோவதை நேர்மையின் சின்னமாகக் கொள்ளவேண்டும். கிளின்டனுக்கு இதை நான் சொல்லியிருக்கிறேன்." -முன்னாள் கனடிய பிரதமர் மல்றோனி.
(அபிப்பிராயவாக்கெடுப்பு ஒன்றுபற்றி)

■ "எல்லா வேளைகளிலும் சமாளித்துக்கொள்ள முடியாது போவது இயற்கையானதில்லையா? ஆணைப்போலவே பெண்ணுக்கும் வாழ்வில் சலிப்பேற்படுவது இயற்கையானதில்லையா? மனதை உறுத்தும் ஒரு நிலையில் கோபம் கொள்வதும், அந்த நிலைமையை மாற்ற முனைவதும் இயற்கையானதில்லையா?"-இளவரசி டயானா.
(பெண்களும்மனநலமும்பற்றியகருத்தரங்குஒன்றில்)



சென்னை 'இந்து'





'ந யூரோப்பியன்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







இந்திய அரசியலமைப்பின் அதிகாரம் 356, மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியை விதிப்பதற்கான அதிகாரங்களை மத்திய அரசுக்கு வழங்குகிறது.

# அறிவிலே புதியன

## பாஸ்போர்ட் வேண்டாம்

அமெரிக்காவில் அடிக்கடி வெளிநாட்டுப்பயணம் செய்யும் வர்த்தகர்களுக்கு வசதியாகப் புதிய முறை ஒன்று அமலாக்கப்பட்டுள்ளது. இனிமேல் அவர்கள் குடியேற்ற அதிகாரிகளின் அனுமதிக்காக ஏனைய பயணிகளுடன் நீண்ட வரிசையில் நிற்கவேண்டாம். நாட்டிற்குள் நுழைய அல்லது நாட்டிலிருந்து வெளியேற பாஸ்போர்ட்டும் தேவையில்லை.

அடிக்கடி வெளிநாட்டுப் பயணம் செய்வோரின் பாஸ்போர்ட்டிலுள்ள விவரங்கள் அனைத்தும் கம்ப்யூட்டரில்பதிவு செய்யப்படும். அவர்களுடைய கைவிரல் ரேகைகளும் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்படும். இதற்குப் பின்னர் அவர்களுக்கு அடையாள கார்டு ஒன்று கொடுக்கப்படும். அது 'கிராடிட் கார்ட்' ( CREDIT CARD ) போல இருப்பதால் எப்பொழுதும் பையிலுள்ள பர்சில் வைத்திருக்கலாம்.

ஒவ்வொருமுறை வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும்பொழுதும் விமான நிலையத்திலுள்ள கருவியில் கையை வைத்து அதற்குள் அட்டையைச் சொருகினால் போதும். அது எல்லா விவரங்களையும் சரிபார்த்து தானாகக் கதவைத் திறந்து வழிவிடும். இதற்கு 'இன்பாஸ்' (INPASS) என்று பெயர் சூட்டியுள்ளார்கள்.

டெலிவிஷனில் காட்டப்படும் 'ஸ்டார் ட்ரெக்' என்ற படத்தில் விண்வெளிக்கலத்தில் நுழைய இப்படி ஒரு 'கார்ட்' பயன்படுத்தப்படுவதை டெலிவிஷன் ரசிகர்கள் பார்த்திருக்கலாம். விஞ்ஞானப் புனைகதையில் வேடிக்கையாகக் காட்டப்பட்ட விஷயம், இன்று உண்மையாகிவிட்டது!

பிரிட்டனைச் சேர்ந்த வேர்ஜின் அட்லாண்டிக் விமான நிறுவன உரிமையாளர் ரிச்சர்ட் பிரான்சன் இந்த 'இன்பாஸ்' முறையை அமெரிக்காவுக்குச் செல்லும் பயணிகளுக்குப் பயன்படுத்தப்போகிறார். விரைவில் லண்டன் போன்ற முக்கிய நகரங்களிலும் 'இன்பாஸ்' முறை செயல்படுத்தப்படும்.

இனி வெளிநாட்டிற்குச் செல்ல பால்போர்ட்டும் வேண்டாம், பணமும் வேண்டாம். கிரெடிட் கார்டும், பாஸபோர்ட் கார்டும் உள்ள கையடக்கமான 'பர்ஸ்'இருந்தால் போதும்!

## புற்றுநோய்க்கு மருந்து


புற்றுநோய் என்பது மனிதஉடலில் உள்ள உயிர்க்கலங்கள் இறப்பதால் உண்டானது என்பது நாம் அறிந்தது. ஓர் உறுப்பில் ஏற்படும் புற்று பரவாமல் தடுக்க கதிரியக்கம் பயன்படுத்தப்படுகிறது. சில சமயங்களில் அறுவை சிகிச்சையும் செய்யப்படுகிறது. ஆனால் வெற்றி மிகக் குறைவு.

லண்டன் மருத்துவ ஆராய்ச்சிக்கூடம் ஒன்றில் எலிகள் மீது பரிசோதனை நடத்தப்பட்டபோது புற்றுநோய்க் கிருமிகள் எலிகள் மீது ஏற்ற ப்பட்டன. அம்மைநோய் வராமல் தடுக்க நம் உடம்பில் அம்மைக்கிருமிகள் ஏற்றப்படுவது போன்ற இந்த ஆராய்ச்சி வெற்றிகண்டிருக்கிறது. எலிகளுக்கு ஏற்பட்டிருந்த புற்றுநோய் பரவாமல் தடுக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி, மனிதர்கள் மீது பயன்படுத்தப்பட இன்னும் ஓரிருவருடங்கள் பிடிக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







இந்திய அரசியலமைப்பின் அதிகாரம் 356, மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியை விதிப்பதற்கான அதிகாரங்களை மத்திய அரசுக்கு வழங்குகிறது.

# அறிவிலே புதியன

## பாஸ்போர்ட் வேண்டாம்

அமெரிக்காவில் அடிக்கடி வெளிநாட்டுப்பயணம் செய்யும் வர்த்தகர்களுக்கு வசதியாகப் புதிய முறை ஒன்று அமலாக்கப்பட்டுள்ளது. இனிமேல் அவர்கள் குடியேற்ற அதிகாரிகளின் அனுமதிக்காக ஏனைய பயணிகளுடன் நீண்ட வரிசையில் நிற்கவேண்டாம். நாட்டிற்குள் நுழைய அல்லது நாட்டிலிருந்து வெளியேற பாஸ்போர்ட்டும் தேவையில்லை.

அடிக்கடி வெளிநாட்டுப் பயணம் செய்வோரின் பாஸ்போர்ட்டிலுள்ள விவரங்கள் அனைத்தும் கம்ப்யூட்டரில்பதிவு செய்யப்படும். அவர்களுடைய கைவிரல் ரேகைகளும் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்படும். இதற்குப் பின்னர் அவர்களுக்கு அடையாள கார்டு ஒன்று கொடுக்கப்படும். அது 'கிரெடிட் கார்ட்' ( CREDIT CARD ) போல இருப்பதால் எப்பொழுதும் பையிலுள்ள பர்சில் வைத்திருக்கலாம்.

ஒவ்வொருமுறை வெளிநாட்டிற்குப் பயணம் செய்யும்பொழுதும் விமான நிலையத்திலுள்ள கருவியில் கையை வைத்து அதற்குள் அட்டையைச் சொருகினால் போதும். அது எல்லா விவரங்களையும் சரிபார்த்து தானாகக் கதவைத் திறந்து வழிவிடும். இதற்கு 'இன்பாஸ்' (INPASS) என்று பெயர் சூட்டியுள்ளார்கள்.

டெலிவிஷனில் காட்டப்படும் 'ஸ்டார் ட்ரெக்' என்ற படத்தில் விண்வெளிக்கலத்தில் நுழைய இப்படி ஒரு 'கார்ட்' பயன்படுத்தப்படுவதை டெலிவிஷன் ரசிகர்கள் பார்த்திருக்கலாம். விஞ்ஞானப் புனைகதையில் வேடிக்கையாகக் காட்டப்பட்ட விஷயம், இன்று உண்மையாகிவிட்டது!

பிரிட்டனைச் சேர்ந்த வேர்ஜின் அட்லாண்டிக் விமான நிறுவன உரிமையாளர் ரிச்சர்ட் பிரான்சன் இந்த 'இன்பாஸ்' முறையை அமெரிக்காவுக்குச் செல்லும் பயணிகளுக்குப் பயன்படுத்தப்போகிறார். விரைவில் லண்டன் போன்ற முக்கிய நகரங்களிலும் 'இன்பாஸ்' முறை செயல்படுத்தப்படும்.

இனி வெளிநாட்டிற்குச் செல்ல பாஸ்போர்ட்டும் வேண்டாம், பணமும் வேண்டாம். கிரெடிட் கார்டும், பாஸ போர்ட் கார்டும் உள்ள கையடக்கமான 'பர்ஸ்'இருந்தால் போதும்!

## புற்றுநோய்க்கு மருந்து

புற்றுநோய் என்பது மனிதஉடலில் உள்ள உயிர்க்கலங்கள் இறப்பதால் உண்டானது என்பது நாம் அறிந்தது. ஓர் உறுப்பில் ஏற்படும் புற்று பரவாமல் தடுக்க கதிரியக்கம் பயன்படுத்தப்படுகிறது. சில சமயங்களில் அறுவை சிகிச்சையும் செய்யப்படுகிறது. ஆனால் வெற்றி மிகக் குறைவு.

லண்டன் மருத்துவ ஆராய்ச்சிக்கூடம் ஒன்றில் எலிகள் மீது பரிசோதனை நடத்தப்பட்டபோது புற்றுநோய்க் கிருமிகள் எலிகள் மீது ஏற்றப்பட்டன. அம்மைநோய் வராமல் தடுக்க நம் உடம்பில் அம்மைக்கிருமிகள் ஏற்றப்படுவது போன்ற இந்த ஆராய்ச்சி வெற்றிகண்டிருக்கிறது. எலிகளுக்கு ஏற்பட்டிருந்த புற்றுநோய் பரவாமல் தடுக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி, மனிதர்கள் மீது பயன்படுத்தப்பட இன்னும் ஓரிருவருடங்கள் பிடிக்கலாம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூறாண்டில் தவசீலர்

இந்தியாவில் தற்போது வாழ்ந்து வருகின்ற மகான்களில் மிக மூத்தவராக ,கருதப்படுபவர் காஞ்சிப் பெரியவர் என எல்லோராலும் அழைக்கப்படும் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள். அவருக்கு 100 ஆவது வயது ஆரம்பித்திருக்கிறது. இது தொடர்பான புனிதவிழா காஞ்சியில் மிகவும் கோலாகலமாக நடைபெறுகிறது. மே 7ஆம் தேதி காஞ்சியில் ஆரம்பித்த இந்த நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களை பாரதப் பிரதமர் திரு நரசிம்ம ராவ் தொடக்கி வைத்தார்.



விழாவில் தமிழகம் மட்டுமன்றி, நாட்டின் பல்வேறு மாநிலங்களி லிருந்தும் பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில் கலந்துகொண்டார்கள். நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாகவும், முக்கிய நிகழ்ச்சியாகவும் சிறப்பம்சமாகவும் மே மாதம் 26 ஆம் தேதியன்று பரமாச்சாரியாருக்கு கனகாபிஷேகம் வெகு விமரிசையாக நடந்து முடிந்தது.

இந்த கனகாபிஷேகத்துக்காக இங்கிலாந்திலிருந்து பக்தர்கள் 85 கிலோ தங்கம் அனுப்பியிருந்தார்கள். இதுதவிர, தொழிலதிபர் திரு ஏ சி முத்தையா தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு துணைக்கமிட்டி 15 கிலோ தங்கத்தை பக்தர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றது.

நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களை சிறப்பாக நடாத்த அமைக்கப்பட்ட குழுவின் தலைவராக பாரதத்தின் முன்னாள் ஜனாதிபதி திரு ஆர் வெங்கட்ராமன் பொறுப்பேற்றிருக்கிறார்.

காஞ்சி சங்கராச்சாரியார் தென் ஆற்காடு மாவட்டம் விழுப்புரம் நகரில் சுப்பிரமணிய சாஸ்திரி -மகாலட்சுமி அம்மாள் தம்பதிக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர். இயற்பெயர் சுவாமிநாதன். பிறந்த நாள் 20.5.1894. அனுஷம் நட்சத்திரம். தாய்மொழி கன்னடம்.

சுவாமிநாதன் பள்ளியில் சேர்ந்ததே ஏழாம் வகுப்பில்தான். அதுவரை படிப்பையும், சங்கீதத்தையும் வீட்டிலேயே கற்றுக் கொண்டார். படிப்பில் மிகவும் திறமைசாலியாக முதல் மாணவராக திகழ்ந்தார். ஒன்பதாவது வகுப்பு படித்தபோது பள்ளிக்கூட ஆண்டுவிழாவில் ஜான் மன்னர் நாடகத்தில் ஆர்தர் இளவரசர் வேடத்தில் நடித்து பரிசும் பெற்றிருக்கிறார் சுவாமிநாதன்.

1906ல் காஞ்சி காமகோடி பீடத்தின் 66வது மடாதிபதியாக இருந்த ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளைச் சந்தித்தார். அப்போது அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியாகப் பதில்சொல்லி அவரையே வியப்பில் ஆழ்த்தினார். சுவாமிநாதனிடம் ஏதோ ஓர் அபூர்வ ஆற்றல் இருப்பதை அப்போதே உணர்ந்து கொண்டார் மடாதிபதி.

பின்னர் ஒரு வருடம் கழித்து மடாதிபதியின் அழைப்பின் பேரில் அவரைச் சந்திக்க கலவை ஊருக்குப் போய் சுவாமிநாதன் சேருமுன்பு பெரியம்மை நோயினால் பாதிக்கப்பட்டிருந்த மடாதிபதி சமாதியடைந்து விட்டார். சுவாமிநாதனை காஞ்சி காமகோடி பீடத்தில் 68ஆவது மடாதிபதி ஆக்க வேண்டும் என்று எண்ணியிருந்த அவர், தான் சமாதி அடையுமுன் தன் 18வயது சீடர் ஒருவருக்கு உபதேசம் அளித்து 67ஆவது மடாதிபதியாக்கினார். அவரோ எட்டுநாட்கள் மடாதிபதியாக இருந்து பின்னர் சமாதியடைந்துவிட்டார். அதற்குமுன்னதாகவே சுவாமிநாதனை 68ஆவது மடாதிபதியாக்கினார். அப்போது சுவாமிநாதனுக்கு வயது 13.

அன்றிலிருந்து சுவாமிநாதன் ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆனார்.

வேதங்கள், வடமொழி இலக்கியங்கள், வியாகரணம், தர்க்கம், வேதாந்தம், மீமாம்சை, சங்கீதம் போன்ற கலைகளுடன் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், பிரெஞ்சு, மராத்தி உட்பட பதினெட்டு மொழிகளையும் கற்றுத் தெளிந்தார். கர்நாடக இசையிலும் புகைப்படக் கலையிலும் காஞ்சிப் பெரியவருக்குத் தேர்ச்சியுண்டு. கணிதம், சோதிடம், வானசாஸ்திரம் ஆகிய வற்றையும் அவர் விட்டு வைக்கவில்லை.

1915 மே முதல் தேதியிலிருந்து காஞ்சி மடத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். கடுந்தவம், பூசை, தியானம் ஆகியவை இவரின் புகழ் ஓங்கிப்பரவக் காரணமாக அமைந்தன. காஞ்சிபுரம், பக்தர்கள் குழுமும் திருத்தலமாக மாறியது.

மகாத்மா காந்தியிலிருந்து இன்றைய ஜெயலலிதாவரை ஏராளமான தலைவர்கள் காஞ்சிப் பெரியவரைச் சந்தித்து ஆசி பெற்றிருக்கின்றனர். நேபாளமன்னர், கிரீக் நாட்டு இளவரசி ஆகிய வெளிநாட்டவரும் காஞ்சியில் இந்த கருணைத் தெய்வத்திடம் ஆசி பெற்றனர்.

பதின்மூன்று வயதில் துறவியாகி, அற்புதமான தவ சீலராய், ஞான குருவாய், வாழும் தெய்வமாய் திகழ்ந்து கொண்டிருக்கும் பரமாச்சாரியார் நூறு வயதை அடைந்திருப்பது இந்த நூற்றாண்டின் மிகப்புனிதமான நிகழ்ச்சிகளில் ஒன்று.

- ராணி மைந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலங்கிய குட்டையில் திமிங்கில வேட்டை!

## அரசு நடவடிக்கைகள் உள்நாட்டு யுத்தத்துக்கே வழிகோலுகின்றன


எல்லாளன்

வடபகுதியில் தொடரும் குழப்பமான நிலைமையைத் தீர்ப்பதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்கிறோம். இந்த நாடெங்கும் சமாதானத்தை நிலைநாட்டுவதே எமது குறிக்கோளாகும் என ஜனாதிபதி டி.பி விஜேதுங்க கொழும்பில் நடைபெற்ற வெளிநாட்டுத் தூதுவர்களின் சந்திப்பின் போது கூறினார். இன்றைய நிலையில் ஜனாதிபதி எடுக்கவிருக்கும் துரித நடவடிக்கை(?) இராணுவ நடவடிக்கையா அல்லது பேச்சுவார்த்தை மூலமான சமாதான முயற்சியா என்பதைத் தெளிவாகத்தீர்மானிக்க முடியாத வகை யில் காரியங்கள் நடைபெற்று வருகின் றன.

பாரிய அரசியற் படுகொலைகளும் மாகாணசபைத் தேர்தல்களும் நடந்து முடிந்துவிட்டன. இன்று ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களின் எதிரொலியாக அரசியல் தலைமைத்துவங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் எந்தத் திசையில் தேசிய இனப்பிரச்னையை அணுகவுள்ளனஎன்பதை அடுத்துவரும் மாதங்களில் தான் சரியாக அனுமானிக்க முடியும்.

லலித் அத்துலத்முதலியின் படுகொலையும் ஜனாதிபதி பிரேமதாஸவின் படுகொலையும், இலங்கையின் அரசியற் கிரகநிலையை முற்றாகவே மாற்றி அமைத்து விட்டன. திடீரென ஆற்றலும் வேகமும் அவர்களுக்கே உரிய ஆளுமையையும் கொண்ட இரு அரசியல் தலைவர்கள் மின்னாமல் முழங்காமல் அரசியல் அரங்கில் இருந்து வன்முறையால் அகற்றப்பட்டனர். இதன் எதிரொலி இன்னும் முற்றாக அடங்க வில்லை.

பாதுகாப்பு நடவடிக்கைகளை கொழும்பிலே பலப்படுத்துவது என்ற பெயரில் சோதனைகளும், விசாரணைகளும் நடைபெறுகின்றன. இதன் காரணமாகவே, கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள தமிழ் வீடுகள் எல்லாம் சோதனை இடப்படுகின்றன.



விஜேதுங்க

பிரச்னையை ஜனாதிபதி டிபி விஜேதுங்க' இது சிங்கள தமிழ் பிரச்னையல்ல. பயங்கரவாதப் பிரச்னை எனப் பூசிமெழுகி கருத்துத் தெரிவித் தமையும் தமிழ்க் குழுக்களும் கிழக்கில் வாழும் முஸ்லிம்களும் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாகத் தங்களுக்குள் இணக்கப்பாட்டுக்கு வந்து தீர்வுத் திட்டம் ஒன்றை வகுப்பதே வடக்குக்கிழக்கு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற் கான மிகச் சிறந்த வழி எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நழுவல் கதை பேசுவதும் அரசாங்கத்தின் நிலையற்ற போக்கையே இனம் காட்டுகிறது

ரணில் விக்கிரமசிங்க



கைது செய்யப்படும் இளைஞர்களையும், இளம் பெண்களையும் பொலிஸ் நிலையங்களில் மந்தை போல அடைத்து புலனாய்வுப் பிரிவு அறிக்கை பெற்ற பின்னரே விடுதலை செய்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவு கொழும்புக்கு வந்திருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவல்களை அடுத்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரியர் அட்மிரல் வால்ட்டர் பெர்னாண்டோ பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார்.

சோதனைகளும், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்வதும் கொழும்பிலும், சுற்றுப் புறங்களிலும் உள்ள தமிழ் மக்களைப் பதற்ற நிலைக்குட்படுத்தி உள்ளது. தமிழ் இளைஞர்களும், இளம்பெண்களும் பொலிஸாரின் கழுகுப் பார்வைக்கு புலிகளாகவே தென்படுகின்றனர். தேசிய அடையாளஅட்டை வைத்திருப்பவர்கள், பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்துள்ளோர் முதல் எங்கெங்கெல்லாம் இளைஞர்களைக் காண்கிறார்களோ அவர்கள் எல்லாம் பொலிஸாரின் கண்களுக்கு புலிகளாகவும், ஜனாதிபதி கொலையோடு சம்பந்தப்பட்டதெனக் கருதப்படும் பாபுவின்சகாக்களாகவுமே தெரிகின்றனர், என பேரினவாத அரசியல்வாதி ஒருவர் பொலிஸாரின் அங்கலாய்ப்பைக் குறிப் பிட்டார்.

படுகொலைகளைத் தொடர்ந்து வன்செயல்களும், இனமோதல்களும் ஏற்படக்கூடும் எனத் தமிழ் மக்கள் கலக்கம் அடைந்திருந்தனர். இந்தக் கலக்கம் தெளியமுன்னர் பொலிஸாரின் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன. கொழும்பில் இருக்கும் பெருந்தொகையான தமிழ் இளைஞர்களும், குடும்பங்களும் கொழும்பிலும், சுற்றுப் புறங்களிலும் நிரந்தரமாகத் தங்குவதற்கு வந்தவர் களல்லர். வட- கிழக்கில் அரசாங்கப் படைகள், புலிகளின் மோதல்கள், அரசபடையினரின் தாக்குதல்கள், பொருளாதாரத் தடையின் பாதிப்புக்கள் ஆகியனவற்றினால் பாதிப்படைந் தவர்கள், வெளிநாடுகளில் தஞ்சம் புகுவதற்காகவும் படிப்பதற்காகவும், உத்தியோகம் தேடுவதற்காகவும் வந்த வர்களே பெருந்தொகையான இளை ஞர்கள்.

வேலையற்றவர்களாகவும், நிரம்பிய பணவசதியற்றவர்களாவும் உறவினர் வீடுகளிலும், நண்பர்களுடனும், மலிவான விடுதிகளிலும், வெளிநாட்டு உறவினர்களின் ஆதரவுடனும் உள்ள பெருந்தொகையான இளைஞர்களை பொலிஸார் முற்றுகையிட்டு சோதனையிடுவதும் அப்பாவிகளைக் கைது செய்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டில் அடைப்பதும் அரச பயங்கரவாதமாக அமைகின்றது என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

அமைச்சரவைக் கூட்டமுடிவுகளை அறிவிப்பதற்கான பத்திரிகையாளர் மகாநாட்டில் இரகசியப் பொலிஸ் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அமரசேன ராஜபக்ஷ கலந்து கொண்டு பொலிஸார் யார் கொலையைச் செய்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாத நிலைமையையும் உயர் அதிகாரிகள் 'சுச்சரித்த'வைப்பாவித்து தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய முயன்றமையையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் 'சுச்சரித்த' இல்லத்தின் பாதுகாப்பினைப் பலப்படுத்தியும், இதர பாதுகாப்பு நடவடிக்கையினையும் உறுப்படுத்த முடியாத கையறுநிலையினையும் பாதுகாப்பு பலவீனங்களை மூடிமறைக்கவும் பொலிஸாரின் நடவடிக்கைகள் வேறுவேறு திசைகளில் செல்கின்றன.

இளைஞர்களைக் கைது செய்யும் விவகாரம் பாராளுமன்ற மட்டத்திலும், பிரதமர், ஜனாதிபதியுடனும் பாதுகாப்பு அதிகாரிகள், தமிழ்க்கட்சித் தலைவர்கள் மட்டத்திலும் விவாதிக்கப்பட்டு தமிழ் மக்களை கைது செய்து விசாரிப்பது பற்றி சில நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இவை எல்லாம் நிரந்தர அமைதிக்கான எந்த வழிவகைகளையும் காட்டுவனவாகவில்லை.

இன்றைய பிரச்னையை ஜனாதிபதி டி.பி விஜயதுங்க, இது சிங்கள தமிழ் பிரச்னையல்ல. பயங்கரவாதப் பிரச்னை எனப் பூசிமெழுகி கருத்துத் தெரிவித்தமையும் தமிழ்க் குழுக்களும் கிழக்கில் வாழும் முஸ்லிம்களும் அதிகாரப் பர-வலாக்கல் சம்பந்தமாகத் தங்களுக்குள் இணக்கப்பாட்டுக்கு வந்து தீர்வுத் திட்டம் ஒன்றை வகுப்பதே வடக்குக் கிழக்கு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான மிகச் சிறந்த வழி எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நழுவல் கதை பேசுவதும் அரசாங்கத்தின் நிலையற்ற போக்கையே இனம் காட்டுகிறது.

சிங்கள பேரினவாதிகள் அல்லது தென்னிலங்கைக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கும் எந்தத் தீர்வும் சிறுபான்மையின மக்கள் இன கௌரவத்தோடு ஒன்றுபட்டு வாழ்வதற்கு ஏற்ற தகுதியான ஒன்றாக இதுவரை எந்தத்தமிழ்கட்சிகளாலும் கருதப்படவில்லை.சிங்கள பேரினவாதக் கட்சிகள் எவையும் இதுவரை தமது நிலைப்பாட்டை வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. பாராளுமன்ற தெரிவுக்குழு என்ற கலங்கிய குட்டையில் திமிங்கிலம் பிடிப்பதாகச் செய்யும் பாசாங்காகவே சகல காரியங்களும் நடக்கின்றன. ஜனாதிபதி பிரேமதாஸ, தெரிவுக்குழு, பேச்சுவார்த்தை எனக் காலம்கடத்தி இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்த நாடகத்தின் இரண்டாவது அங்கமே இப்போது ஆரம்பித்துள்ளது.

1987ம்ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை-இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இவ்வுடன் படிக்கையின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணம் தற்காலிகமாக இணைக்கப்பட்டது. வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட வேண்டுமா?அல்லது தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டுமா? என்பதைத் தீர்மானிப்பதற்கு ஒரு வருடத்திற்குள் கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என அப்போது முடிவு செய்யப்பட்டது. ஆயினும் அரசாங்கம் 1988ம் ஆண்டு சர்வஜனவாக்கெடுப்பு நடத்துவதை ஒத்திவைத்தது.

ஜனாதிபதியாக பிரேமதாஸ தாம் பதவியேற்ற காலம் முதலாக வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு எதிராக சகலவகையிலும் இயங்கி வந்ததால், இந்திய படைகளை இலங்கை மண்ணில் இருந்து வெளியேற்றுவதில் ஆரம்பம் முதல் கண்ணும் கருத்துமாக இருந்த ஜனாதிபதி புலிகளுடன் பேச்சுவார்த்தை என ஆரம்பித்ததும் மறைமுகமாக இலங்கை-இந்திய ஒப்பந்ததிற்கு எதிராக வேலை செய்ததும் அத்துடன் இணைப்பைத் தடுக்க அத்தனை முயற்சிகளையும் மேற் கொண்டதும் வரலாறாகிப் போய்விட் டது.மாகாணசபைத் தேர்தலில் ஜனாதிபதி பிரேமதாஸ தமக்கு அளிக்கப்பட்ட வாக்குகள், வடக்குக் கிழக்கு தற்காலிக இணைப்பை நீக்கி இருமாகாணங்களாக இயங்க வைப்பதற்கு தமக்கு அளிக்கப் பட்ட மக்கள் சம்மதம் என்ற நிலைப் பாட்டை கொண்டிருந்தார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முயற்சிகளில் கருத்தொருமிப்பையோ அரசியல் வழிகாட்டலையோ மேற்கொள்ளாத ஜனாதிபதியுடன் யு.என்.பி அரசாங்கமும் இணைப்புக்கு எதிரான மறைமுக சக்தியாக இயங்கிவந்தது. மொத்தத்தில் பெரும்பான்மை இணைப்பை விரும்பாது என்ற நிலைப் பாட்டுடன் செயற்பட்டமை துரதிருஷ்டவசமானது.

இன்றைய நிலை, மீண்டும் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு, விலகிச் சென்ற தமிழ் கட்சிகளைத் தெரிவுக்குழு கூட்டங்களில் பங்கு கொள்ளச் செய்ய முயல்வதுடன் வடக்கு-கிழக்கு இணைப்பு வேண்டுமா இல்லையா என்பதை நான்கு மாதங்களுக்குள் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தீர்க்கப்படும் என்ற முடிவிற்கு வந்தது. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளமையை ஆராய்வ துடன் சர்வதேச கண்காணிப்புக்குழுவை வாக்கெடுப்பைக் கவனிக்க அழைக்கத் தீர்மானித்துள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் படி சர்வஜன வாக்கெடுப்புக்கு சில அடிப்படை முன் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. "இனக்கலவரத்தாலோ அல்லது வேறு காரணங்களாலோ இடம்பெயர்ந்த அனைவருக்கும் இப்படி-யொரு சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களிக்கும் உரிமை உண்டு. இடம்பெயர்ந்துள்ள அவர்கள், தம்பகுதிகளுக்குத் திரும்புவதற்கு அவசியமான சூழல் உருவாக்கப்பட வேண்டும்."ஒப்பந்தத்தில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஜூனில் யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கிழக்கு மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்திருக் கிறார்கள். பல்லாயிரக் கணக்கானோர் வேறு மாகாணங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். இவர்கள் பெருமளவில் தமிழரும், முஸ்லிகளுமே. கிழக்கில் பலதலைமுறைகளாக வாழ்ந்த சிங்களவரும் கூட வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். சர்வதேச மன்னிப்புசபை அறிக்கை களின்படி 3 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் 'காணாமல்' போயிருக்கி றார்கள்.

இன்னுமொரு அடிப்படையான முன்நிபந்தனை, சர்வஜனவாக் கெடுப்புக்கு முன்னதாக மாகாணசபை ஓராண்டுக்கு செயல்பட்டிருக்கவேண்டும். ஆக, இந்த இரண்டு அடிப்படை முன்நிபந்தனைகளுமற்ற-மீறப்பட்ட ஒருநிலையிலேதான் பாராளுமன்ற தெரிவுக்குழு இந்த சர்வஜனவாக்கெடுப்பை நிகழ்த்தசிபார்சு செய்திருப்பது வியப்புக்குரியது. நான்கு மாத காலத்திற்குள் கிழக்கிலிருந்து புலிகளை விரட்டி வாக்கெடுப்புக்கான சூழலை உருவாக்கக்கூடிய திடமும்,ஆற்றலும் ஆயுதப்படைகளுக்கு இருப்பதாக கிழக்குமாகாண படைத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம தெரிவுக்குழு தலைவருக்கு உறுதியளித்திருந்தார். இது உண்மையானால், பெருமளவிலான ஓர் இராணுவ நடவடிக்கைக்கு கிழக்கில் திட்டமிடப்பட்டது. அப்படியெனில் மக்கள் இன்னும் பெருமளவில் அங்கிருந்து வெளியேறுவார்கள்.

இன்றைய அரசியல் சூழலில் சரியான இலக்குகளை மையமாகக் கொண்டு பேச்சுவார்த்தைக்கான சூழலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்கி, இராணுவ நடவடிக்கைகளை குறைப்பதில் அரசு அதிக கவனம் செலுத்துவதாத் தெரியவில்லை. இதற்கு மத்தியில் ஜே.வி.பி யின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க மீண்டும் மீளமைப்பு நடவடி க்கைகளில் ஈடுபட்டுள்ளமையும் புதிய செய்தியாகும்.

உடனடியாக சமாதானத் தீர்வை இழுத்தடிப்புக்கள் இன்றி அரசு மேற்கொள்ளத் தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் எதிர்காலத்தில் இலங்கை வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல, தென்னிலங்கையிலும் கிளர்ச்சிகள் தோன்றிப் பாரிய உள்நாட்டு யுத்தத்தை எதிர்நோக்கும் அபாயத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதையே உணர்த்துகிறதென்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

### பிரேமதாச கொலைப் புலன்விசாரணை

# 'வலை' யில் சிக்கிய பாதுகாப்பாளர்கள்

பிரேமதாச படுகொலை தொடர்பான புலன் விசாரணைகளில் முக்கிய திருப்பமாக ஜனாதிபதியின் சொந்த இல்லமான 'சுச்சரித்த' வின் பாதுகாப்புக்கு பொறுப் பாகவிருந்த உதவிப் பொலிஸ் அதிபர் டக்ளஸ் பெரேரா கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். இவருடன் மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இன்னும் மூவர் மனிதக்குண்டு என்று சந்தேகிக்கப்படும் பாபு எனப்படும் குருநகரைச் சேர்ந்த குலவீரசிங்கம் வீரகுமாருடன் நெருங்கிய தொடர்பு கொண் டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப் பட்டிருக்கின்றனர்.



புலனாய்வுப் பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசேன ராஜாபக்ஷ தலைமையில் 10 உயர்அதிகாரிகள் உட்பட 50 பேர் கொண்ட விசேட புலனாய்வுப் பிரிவு ஜனாதிபதி கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. ஜனதிபதியைக் கொல்வதற்கு சதி ஏதும் இருந்ததா? சம்பந்தப்பட்டவர்கள் யார்? பாதுகாப்பில் மீறல்கள் இருந்தனவா? என்பன பற்றி இக்குழு ஆராய்கிறது. அதிகாரிகள் தொடர்ந்தும் விடுதலைப்புலிகளுக்கு இக்கொலையில் ஈடுபாடு இருப்பதாகக் கூறினாலும் புலிகள் அதனை மறுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட உதவிப் பொலிஸ்அதிபர் உட்பட்ட நால்வரும் பாபுவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார்கள் என்றும் ஒன்றாக புகைப்படங்கள் எடுத்திருந்தார்கள் என்றும் ஜனாதிபதியின் கொலையில் பாபு சம்பந்தப்படுத்தப்பட்டது தெரிந்த பின்னரும் பாபுபற்றிய தகவல்கள் எதனையும் இவர்கள் வெளியிடவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆனால் பாபு ஜனாதிபதியைக் கொலை செய்யும் தனது திட்டத்தை இவர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்திருந்தாரா என்பது தெரியவில்லை.

ஜனாதிபதி பிரேமதாச பங்குபற்றிய பல வைபவங்களுக்கு-கூட்டங்களுக்கு பாபு சென்றிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது. பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடனும் உதவியாளர்களுடனும் மிக நெருக்கமான உறவை ஏற்படுத்தி அதனால் இவ்வைபவங்களில் பங்குபற்றும் சுதந்திரத்தைப் பெற்று ஜனாதிபதியின் நடவடிக்கைகளை வெகு உன்னிப்பாக பாபு நோட்டமிட்டதாக சொல்லப்படுகிறது. இதற்காக இந்த உத்தியோகத்தர்களை மகிழ்வூட்ட பாபு பெருமளவில் பணமும் செலவிட்டுள்ளார். இதனால் பாபுவுடன் நெருக்கமானவர்களின் வங்கிக்கணக்குகளையும் பொலிசார் பரிசீலனை செய்கின்றனர்.

பாபுவுடன் இந்நால்வரும் காணப்பட்ட புகைப்படம் பத்திரிகைகளில் வெளியானதும் இவர்கள் மேலும் தடயங்களேதும் அகப்பட்டுவிடாதிருப்பதற்காக பாபு தங்கியிருந்த வீட்டை உடைத்து உட்புகுந்து அங்கு தேடுதலை நடத்தியதாகவும் ஆனால் எதுவுமே இல்லாதபடி பாபுவே அனைத்தையும் ஏற்கனவே அழித்துவிட்டே தனது முயற்சியில் ஈடுபட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஜனாதிபதி ஒருதடவை திடீரென்று வீடு திரும்பவும் அச்சமயம் அங்கு நின்ற பாபுவை இவர்கள் ஜனாதிபதிக்குத் தெரியாமல் ஓர் அறையினுள் பூட்டி ஒளித்து வைத்தார்களாம். ஜனாதிபதி இல்லாத சமயங்களில் பாபு மது, மாது உட்பட்ட சுகபோகங்களை இவர்களுக்கு அங்கு அளிப்பாராம்.

சம்பவதினம் ஜனதிபதியை நோக்கி வந்த பாபுவை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தடுத்ததாகவும் ஜனாதிபதியின் அந்தரங்க உதவியாளரான மொஹிதீன் சைகை காட்டியதையடுத்தே அவர்கள் பாபு ஜனாதிபதியை அண்மித்துச் செல்ல அநுமதித்ததாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

மொஹிதீன் சிறுபிராயத்திலிருந்தே பிரேமதாசவால் வளர்க்கப்பட்டவர். அவர் மீது மிகுந்த விசுவாசம் கொண்டவர். ஆனால் மொஹிதீன் பாபுவுடனும் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். அதனாலேயே அவரை அப்படி அநுமதிக்கச் செய்தார்.

ஜனாதிபதி விஜயம் செய்த இடங்களுக்கு பாபு சென்ற சமயங்களிலெல்லாம் பாபு ஜனாதிபதிக்குத் தெரியாமல் முன்செல்லும் பாதுகாப்பு வாகனங்களில் மறைத்தே இவர்களால் கொண்டு செல்லப்பட்டாரென ராஜபக்ஷ தெரிவிக்கிறார்.

குணசிங்கபுர டயஸ் பிளேஸில் பாபு மளிகைக்கடை ஒன்றை நடாத்தி வந்தபோதே பாபுவுடன் மொஹிதீனுக்கு நட்பு ஏற்பட்டது. மது,மாது மீதான மொஹிதீனின் மோகத்தை உணர்ந்து 'வலை'யில் அவரை சிக்கவைத்தார் பாபு. மாடி ஒன்றில் இவற்றை மொஹிதீனுக்கு கிரமமாக வழங்கினார்


இத்தகவல்களை மொஹிதீனை உல்லாசப்படுத்திய, எண்ணிக்கையிற் பலரான பெண்கள்தான் தெரிவித்திருப்பதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருக்கிறார். மொஹிதீனுக்காக பாபு இவற்றையெல்லாம் ஏற்பாடு செய்ததைத் தவிர, பாபு இவை எவற்றையுமே தீண்டுவதில்லையென்றும் 'தன் இலக்கில் சரியாகவிருந்த பாபு தன் மீதான நல்லெண்ணத்தைப் பழுதாக்கவில்லை' என்றும் ராஜபக்ஷ மேலும் தெரிவித்திருக்கிறார்.


ராஜிவ் காந்தி கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட மாதிரியான வெடிபொருளோ பாவிக்கப்பட்டதாகவும் இடுப்பில் கட்டி வைத்திருந்த குண்டை வெடிக்கவைக்கும் பொறியை வலது கையில் பாபு இணைத்திருந்தாரென்றும் ராஜபக்ஷ பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**25 வீத சலுகை!**

நீங்கள் 'நாழிகை' சந்தாதாரராகவிருந்தால்
கன்டா டிஸ்க் நிறுவனத்தின்
CD ஒவ்வொன்றின் விலையிலும் 25 வீதம் சலுகை உண்டு.
கன்டா டிஸ்க்கின் பிரத்தியேகமான
, பிரபல இசைக் கலைஞர்களி ன்
பக்திப் பாடல், கர்நாடக இசைப் பாடல்CD க்களை
அஞ்சல் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ளலாம்.
விபரங்கள் அடுத்த இதழில்

## CANDA DISK

APT.17012737 KIPLING AVENUE,ETOBICOKE M9V 4C3
CANADA
TEL:(416) 746 6908

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# நரசிம்மராவுக்கு ஒரு கோடி ரூபா? ஹர்ஷத் மேத்தா அதிர்ச்சித் தகவல்

## இந்த அக்கினிப் பரீட்சையில் ராவ் தேர்வாரா?

எஸ். சுவாமிநாதன்

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு ஒருகோடி ரூபாய் கொடுத்ததாக ஹர்ஷத் மேத்தா குற்றஞ் சாட்டியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டு இந்திய அரசியலில் பெரிய அதிர்ச்சி அலைகளை



எழுப்பியிருக்கிறது. இந்தியாவின் மிகப்பெரிய ஊழல் என்று வருணிக்கப் படும் பங்குச் சந்தை ஊழலில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஹர்ஷத் மேத்தாவின்

**'ஊழலோ, இல்லையோ ராவ் பதவி விலகத் தேவையில்லை. அவருடைய ஆட்சி நீடிக்க வேண்டும்".**

வாயிலிருந்து இது வந்ததால் எவரும் இதை அப்படியே நம்பிவிடமாட்டார்கள். ஆனால் அவர் கூறிய குற்றச்சாட்டில் ஏதேனும் ஒருசிறிது உண்மை உள்ளது என்று நிரூபிக்கப்பட்டாலும் இப்பொழுது எழுப்பட்டுள்ள தூசிப் படலம் பெரிய அரசியற் புயலாக மாறிவிடும்.

ஐயாயிரம் கோடி ரூபாய் ஸ்டாக் மார்க்கெட் ஊழலில் குற்றஞ்சாட்டப் பட்ட ஹர்ஷத் மேத்தா ஜுன் 16ல் ஓர் "அரசியல் வெடிகுண்டை"த் தூக்கிப் போட்டார். 1991ம் ஆண்டு நவம்பர் 4,5 தேதிகளில் பிரதமர் நரசிம்மராவுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்ததாகவும் பிரதமரின் ஆதரவினைப் பெறுவதற்காக இந்தத் தொகையை அளித்ததாகவும் மேத்தா கூறுகிறார்.

டில்லியிலுள்ள பிரதமர் இல்லத்திற்கு சத்பால் மித்தல் என்ற எம்.பியின் உதவியுடன் சென்றதாகவும் முதல் நாள் 67 லட்சம் ருபாய் நோட்டுக்களையும் மறுநாள் 33லட்சம் ரூபாய் நோட்டுக்களையும் கொடுத்ததாகவும் கூறு கிறார்.

ஆனால் பிரதமர் ராவ் இதை அடியோடு மறுத்து விட்டார். இது அரசியல் நோக்கம் கொண்ட குற்றச் சாட்டு என்றும் நாட்டில் குழப்பத்தையும் அரசியல் நிலையாமையையும் ஏற் படுத்துவதற்குச் சிலர் செய்த சதி என்றும் காங்கிரஸ் (ஆளும்) கட்சித் தலைவர்கள் கூறினார்கள். இந்துமத ஆதரவுக் கட்சியான பாரதீய ஜனதா கட்சியின் சதி என்றும் சிலர் கூறினர். இவ்வளவு நாட்களாக மௌனம் சாதித்த ஹர்ஷத் மேத்தா இப்பொழுது திடீரென்று இந்தக் குற்றச்சாட்டை வீசுவதன் காரணம் என்ன? என்றும் அவர்கள் கேட்கின்றார்கள்.

ஹர்ஷத் மேத்தாவின் குற்றச்சாட்டு வெளியானவுடன் நரசிம்மராவுக்கு எதிராகக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு தோன்றும். இதனால் ராவ் பதவி விலக நேரிடும் என்றும் சிலர் கணக்குப் போட்டார்கள். குறிப்பாக பிரதமர் பதவியைப் பிடிப்பதற்காகக் காத்து நிற்கும் ஷரத் பாவரும் அர்ஜுன் சிங்கும் போர்க்கொடி தூக்குவார்கள் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் காங்கிரஸ் காட்சியோ வெனின் எதிர் பார்த்ததைவிட அதிகமாக ஒன்றுபட்டு நின்றது. பிரதமருக்கு முழு மனதான ஆதரவும் தந்தது. இதற்கு முன்னர் இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி போன்றோர்மீதும் இப்படிக் குற்றம் சாட்டப்பட்டதாகவும் 108 ஆண்டுகள் பழமையான காங்கிரஸ் கட்சிக்கு இது புதிதல்ல என்றும் பலர் சுட்டிக் காட்டினர்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும், பிரதமர் ராவ் பதவிவிலகவேண்டும் என்று ஒரேகுரலில் பாடின. எந்த ஒரு பிரச்னையிலும் எதிரும் புதிருமாக நிற்கும் பாரதீய ஜனதா கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் கூட ராவின் ராஜினாமாவைக் கோரின. பிரதமர் முதலில் பதவியைத் துறக் கலாம்



மேத்தா

என்றும் பின்னர் அவர் 'நிரபராதி' என்பது நிரூபிக்கப்பட்டால் அவர் மீண்டும் கௌரவமாகப் பதவியேற்கலாம் என்றும் கூடக் கூறின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஹர்ஷத் மேத்தாவின் புகார் பல கேள்விகளை எழுப்புகின்றன. பிரதமர் ராவின் இல்லத்தில் சந்திப்பு நடத்தியிருந்தால் அதைப் பிரதமர் அலுவலகக் குறிப்புகளிலிருந்து கண்டுபிடிக்கலாம். *1991* நவம்பர் *4,5* தேதிகளில் பிரதமர் வீட்டி லிருந்து அல்லது வீட்டிற்கு செய்யப்பட்ட டெலிபோன் அழைப்புக்களின் குறிப்புக்களையும், ஏனைய தகவல்களையும் கோரிப் பெறுமாறு ஹர்ஷத் மேத்தாவின் வழக்கறிஞர் ராம் ஜெத் மலானி கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதமரின் அலுவலகம் விடுத்த மறுப்பு அறிக்கையில் அந்த இரு நாட்களில் பாகிஸ்தானிய தூதுக்குழுவுடனும் அறிஞர் குழுவுடனும் மட்டுமே பிரதமர் பேசியதாகவும் வேறு எவரையும் சந்திக்கவில்லை என்றும் கூறுகிறது.

ஹர்ஷத் மேத்தா எப்படி இவ்வளவு பணத்தைத் தூக்கிவந்திருக்க முடியும்? என்ற கேள்வியும் எழுப்பபப்படுகிறது. 67லட்சம் ரூபாவை கரன்சி நோட் டுக்களாக எடுத்துவந்தால் அவை கனமான மூட்டைகளாக இருக்கு மென்றும் அவை-களைத் தூக்கி வரமுடியாது என்றும் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால் ஹர்ஷத் மேத்தா பின்னர் அளித்த விளக்கத்தில் 4 பேர் உதவியுடன் பண மூட்டைகளை எடுத்துச் சென்றதாகக் கூறுகிறார். அவர் குறிப்பிடும் நால்வரும் 'பெரிய மனிதர்கள்' அவர்கள் மூட்டை தூக்குவார்களா? என்ற கேள்வியும் எழுப்பப் படுகிறது. இந்தக் கேள்வி களுக்கெல்லாம் விடை காண்பதற்காக பிரதமரையும் ஹர்ஷத் மேத்தாவையும் பாராளுமன்ற கூட்டுக் கமிட்டிக்குமுன் ஆஜராக அழைக்கவேண்டும் என்றும் எதர்க் கட்சிகள் கூறுகின்றன.

பல மாதங்களாக ஸ்டாக் மார்க்கெட் ஊழலை விசாரித்துவரும் மத்திய புலனாய்வு அமைப்புக்கு (C.B.I.) பிரதமரின் பணவிவகாரம் தெரியும் என்றும் கூறப்படுகிறது. இந்த விசாரணையில் அரசியல் தலையீடு இருப்பதாகக் கூறி சிறிது காலத்திற்கு முன் மகாதேவன் என்ற அதிகாரி ராஜினாமா செய்ததை இப்பொழுது பலரும் நினைவு கூருகிறார்கள்.

சத்பால் மித்தல் என்ற எம்.பி.யுடன் பிரதமர் இல்லத்திற்குச் சென்றதாக ஹர்ஷத் மேத்தா கூறினார். இப்பொழுது சத்பால் மித்தல் உயிருடனில்லை. ஆனால் அவருடைய மகன் இந்தப் புகார் அனைத்தையும் மறுத்துவிட்டார்.

ஏறத்தாழ ஈராண்டுகளுக்குப் பின்னர் இப்படிப்பட்ட பெரிய வெடிகுண்டைப் போடுகிறீர்களே என்று ஹர்ஷத் மேத்தாவிடம் நிருபர்கள் கேட்டனர். "நான் உயிருக்குப் பயந்து உண்மையை வெளியிடத் தயங்கினேன். ஆனால் என்னுடைய பழைய வாக்குமூலத்தில் பெரிய அரசியல் தலைவர்களுக்கு இதில் தொடர்பு உண்டென்று கூறியிருக் கிறேன்" என்று பதில் கூறினார்.

சி.பி.ஐ.யும், பாராளுமன்றக் கூட்டுக் குழுவும் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்து வருகின்றன. யார் தரப்பு வாதம் பொய்யானது என்பதற்கு ஒருசில தடயங்கள் கிடைத்தாலும் போதும். இந்தப் பிரச்னைக்கு முடிவு ஏற்பட்டு விடும்.

பாரதீய ஜனதா கட்சித் தலைவர் லால் கிருஷ்ண அத்வானிக்கும் ஹர்ஷத் மேத்தா பணம் கொடுத்ததாக கூறப்படுகிறது. இது பற்றிய விசாரணைக்கும் தயார் என்று மேத்தாவின் வழக்கறிஞர் ஜெத் மலானி கூறுகிறார்.

இதனிடையே பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று 'மார்க்' எனப்படும் மார்க்கெட் ஆய்வு நிறுவனம் ஒரு கருத்து வாக்கெடுப்பு நடத்தியது. 'ஊழலோ, இல்லையோ ராவ் பதவி விலகத் தேவையில்லை. அவருடைய ஆட்சி நீடிக்கவேண்டும்". என்று பெரும்பாலோர் கூறியுள்ளனர். நரசிம்மராவின் ஆட்சிக் காலத்தில் மிகப்பெரிய பொருளாதார சீர்திருத்தம்-முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை மக்கள் உணர்ந்துள்ளார்கள். ஆகையால் பாரதீய ஜனதா கட்சி கோருவதைப் போல பொதுத் தேர்தல் நடந்தாலும் யாருக்கு வெற்றி ஏற்படும் என்பதை இப்பொழுது கணிக்க முடியாது.

ராவுக்கு ஒருகோடி ரூபாய் பணம் கொடுக்கப்பட்டதை 'இந்திய வாட்டர் கேட்' என்று பாரதீய ஜனதா கூறுகிறது. ஆயினும் நிக்சன் ஆட்சியை வாட்டர் கேட் கவிழ்த்ததைப்போல இந்த விவகாரம் ராவின் ஆட்சியைக் கவிழ்க்குமா? அல்லது இந்த அக்னிப் பரீட்சையில் நரசிம்மராவ் வெற்றி பெற்று புடம்போட்ட பொன்னாக ஒளிருவாரா?

நரசிம்மராவின் தற்போதைய பலவீனமான நிலை, தமிழக அ.தி.மு.க ஆட்சிக்கு சாதகமாக வந்துள்ளது. எந்த ஒரு நிமிடத்திலும் ஜெயலலிதாவின் ஆட்சி கலைக்கப்பட்டு மத்திய அரசின் நேரடி ஆட்சி செயல்படுத்தப்படும் என்ற ஐயப்பாடு இருந்துவந்தபோது நரசிம்மராவ்மீது பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவருகின்றன. இதை இடது, வலதுசாரிக்கட்சிகள் அனைத்தும் ஆதரிப்பதால் ராவ் அரசு மாநில கட்சிகளின் ஆதரவை நம்பியிருக்கிறது. அண்ணா தி.மு.க.வுக்கு அதிகமான பலம் இருப்பதால் இதைக்கொண்டு ஜெயலலிதா மத்திய அரசுடன் பேரம்பேச முடியும்.



# பொஸ்னியா:

விமல் சொக்கநாதன்

கடந்த இரண்டு வருடங்களாக அல்லலுற்றுவரும் பொஸ்னிய முஸ்லீம் சமூகமும் அவர்களின் நாடான பொஸ்னியாவும் இப்போது நட்டாற்றில் விடப்பட்டுள்ளன. 24 மாதங்களாக உச்சி மாநாடு, உயர்மட்ட சந்திப்பு - கருத்தறியும்வாக்கெடுப்பு அது - இது என்றெல்லாம் பறந்து திரிந்து பேசித் திரிந்த ஐரோப்பிய மற்றும் அமெரிக்க ராஜதந்திரிகள் இப்போது ஒதுங்கிக் கொண்டு விட்டார்கள்.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி" என்பார்கள். அதுபோல பொஸ்னிய விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் தலையிட்டதால் விபரீதம் அதிகரித்ததே தவிர பொஸ்னிய முஸ்லீம்கள் ஏங்கிக் காத்திருக்கும் அமைதி கிடைக்கவேயில்லை.


பொஸ்னிய தகராறு ஆரம்பமான காலத்தில் உலக நாடுகள் மன்றம் ஆயுத ஏற்றுமதித்தடை உத்தரவு ஒன்றை அறிவித்தது. எந்த ஒரு நாடும் (எந்த ஒரு முஸ்லீம் நாடும்) பொஸ்னியாவுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று பொஸ்னிய முஸ்லிம்களின் கையைக் கட்டிப்போட்டன உலக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தொடரும் ஒரு துன்பியல் நாடகம்

நாடுகள். இதனால் அரபு நாடுகளோ, இரக்கமுள்ள இதர முஸ்லீம் நாடுகளோ பொஸ்னிய முஸ்லீம்களுக்கு உதவ முடியவில்லை.

முஸ்லீம்களைத் தாக்கி, முஸ்லிம் பெண்களைக் கற்பழித்து அவர்களை அகதிகளாக வெளியேற்றிவரும் பொஸ்னிய சேர்பியர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஐரோப்பிய குடும்ப நாடுகளும் அமெரிக்காவும் தயங்கிவந்தன. இப்போது முற்றாக ஒதுங்கியேவிட்டன! சிறிதோர் நாட்டின் கலவரத்தில் சம்பந்தப்பட இவை தயங்குவது தெரிந்தது.

ARMS EMBARGO என்ற பெயரில் பொஸ்னிய முஸ்லீம்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படாமல் தடுத்து நிறுத்தி- அவர்களின் கைகளைக் கட்டிப்போட்ட செய்கையும் ஒருவிதத்தில் தலையீடு தானே? சிறிதோர் நாட்டின் கலவரத்தில் ஐரோப்பிய குடும்ப நாடுகள் தலையிட மாட்டா என்ற கொள்கைக்கே இது இழுக்கல்லவா?

குவேத்திற்குள், சதாமின் படைகள் நுழைந்து அழிமதிகளை ஏற்படுத்திய போது " பாலைவனப் புயலாக"- திரண்டு சென்றது மேற்குலகப்படை! எதிரியிட-மிருந்து குவேத்தை மீட்டு குவேத் ஆட்சியாளர்களிடம் மீண்டும் வழங்கியது.

அதேபோல, பனாமா - கிறனாடா விவகாரங்களில் அகிலத்தை வியக்க வைத்த அமெரிக்க அதிரடிப்படை பொஸ்னிய முஸ்லீம்கள் விஷயத்தில் கொள்கையை காற்றில் பறக்க விட்டது. அண்மையில் சோமாலியாவில் ஜெனரல் அயிடீட் என்ற ஒரு குழப்பக்காரனின் அடாவடித்தனங்களை அடக்க ஐ.நா. படைகளுக்கு தலைமைவகித்துச் சென்ற

**"அமெரிக்க அண்ணாச்சி வருவார் என்று காத்துக் காத்து நின்று எங்கள் ஆன்மாக்கள் இறந்துவிட்டன, காத்துநிற்பதையும் இப்போது நாம் கைவிட்டுவிட்டோம், இறக்கும் போதாவது கண்ணியமாக உயிரிழக்க விரும்புகிறோம்"**

அமெரிக்க படைகள் அவனை அடித்து விரட்டின. ஆனால், பொஸ்னியாவிலோ, ஒருவேளை பழைய நன்றி உணர்ச்சிகளின் காரணமாகவோ என்னவோ சேர்பியர்களைத் தண்டிக்க அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் தயங்குகின்றன.

அமெரிக்க வாரசஞ்சிகை ஒன்று இந்தக் கேவலமான நிலைமையை கேலிச்சித்திரம் போட்டு நகையாடியிருக்கிறது. பொஸ்னிய சேர்பியர்களின் இனச்சுத்திகரிப்பு கொள்கையை கண்டனம் செய்ய மேற்குலக நாடுகள் காலம் தாழ்த்தின. ஆயுத ஏற்றுமதி மீதான தடையை நீக்குவதில் மேற்குலக நாடுகள் காலம் தாழ்த்தின. எனவே இன்று எஞ்சியிருப்பது: "காலம் சென்ற பொஸ்னியா தான். .." என்று கேலிச்சித்திரம் தீட்டியுள்ளது அச்சஞ் சிகை !

உலகப்போருக்குப் பின் சின்னாபின்னமாக சிதறுண்டு கிடந்த சிறிய நாடுகளை ஒன்றுதிரட்டி யூகோஸ்லாவியா என்ற தனிநாட்டை உருவாக்கினார் "அணிசாரா நாடுகள்" இயக்கத்தின் தந்தை அமரர் டீட்டோ. சேர்பியர்கள், முஸ்லீம்கள், குறோயற்றுகள் இப்படி அனைவரையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்த அதிபர் டீட்டோ "தேசியவாதம்" பேசுவது சட்டவிரோதமான செயல் என்று பிரகடனம் செய்தார். பல வருடங்களாக அடக்கிவைக்கப்பட்டிருந்த தேசியவாத உணர்ச்சிகளே, டீட்டோவின் மறைவுக்குப் பிறகு வெடித்துக் கிளம்பின.

தனி ஒரு சேர்பி யாவை - பெரிய ஒரு நாட்டை - உருவாக்க வேண்டும் என்ற ஆசைத்தீ பொஸ்னிய சேர்பியர்கள் மனதில் கொழுந்து விட்டெரிந்தது. "இனச் சுத்திகரிப்பு" என்ற பெயரில் முஸ்லிம்களிடமிருந்த வீடுகளைத் திருடி அவர்களை அகதிகளாக வெளியேற்றினார்கள் பொஸ்னிய சேர்பியர்கள். இவர்களுக்கு தலைமை தாங்கி வழிநடத்தியவர் சேர்பியாவின் தலைவர் - சுலோபடான் மிலசோவிச். சேர்பியாவின் கசாப்புக் கடைக்காரன் (BUTCHER)என்று பெயர் வாங்கியவர்! முஸ்லீம்களை பொஸ்னியாவிலிருந்து வெளியேற்றும்படி - பொஸ்னிய சேர்பியர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கி உத்தரவிட்டதே இந்த தலைமைச் சேர்பியர் மிலசோவிச் தான்.

பொஸ்னிய நாட்டில் ஒரு அதிபர் - ஒரு நாடாளுமன்றம் என்றெல்லாம் இயங்கிவர - அவற்றையெல்லாம் அலட்சியம் செய்துவிட்டு தனக்கென ஒரு "நாடாளுமன்றத்தை" தாமாக உருவாக்கினார்கள் பொஸ்னிய சேர்பியர்கள். இந்த "இமிடேஷன்" நாடாளுமன்றத்தின் தலைவர் இசட் பேகோவிச். அவருக்கு ஒரு தனியான முஸ்லிம் துவேஷம் கொண்ட ராணுவம்! அந்த ராணுவப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படையின் தளபதி ஜெனரல் மிலாடிச். இத்தனை கதாபாத்திரங்களும் சேர்ந்து உலக அரங்கில் ஆடியதுதான் "பொஸ்னியா" என்ற துன்பியல் நாடகம்.

கடந்த இரண்டரை வருடங்களாக உலகநாடுகளின் பத்திரிகைகளில்- ரெலிவிஷனில் - வானொலியில் - பொஸ்னியா என்ற சோக நாடகம் தொடர்கதையாக - பல அத்தியாயங்களாக அரங்கேறியது. இடையில் கௌரவ நடிகர்கள் இருவர்! ஒருவர் பிரிட்டனின் முன்னாள் அமைச்சர், அரசியல்வாதி டாக்டர் டேவிட் ஓயன் பிரபு! மற்றவர் அமெரிக்காவில் ரேகன் காலத்தில் அமைச்சராக இருந்த சைரஸ் வான்ஸ். ஐ.நா, மன்றத்தின் விசேஷ தூதர்களாக இந்த இருவரும் மேடையில் வந்து போனார்கள். பல நாடுகளுக்கும் பறந்து திரிந்தார்கள். அவர்கள் பிரேரித்த சண்டை நிறுத்தம் சண்டையை முற்றாக நிரந்தரமாக நிறுத்தவேயில்லை. அவர்கள் தயாரித்த சமாதானத் திட்டத்திற்கு "வான்ஸ் - ஓயன் திட்டம்" என்று பெயரும் சூட்டப்ப ட்டது. நீண்ட இழுபறிக்கு பின் வான்ஸ் ஓயன் திட்டத்தில் அதாவது ஐ.நா.மன்றமும் ஐரோப்பிய குடும்ப நாடுகளும் இணைந்து உருவாக்கிய இத்திட்டத்தில் பொஸ்னியாவின் முஸ்லீம் தலைவரும் பொஸ்னிய சேர்பிய கிளர்ச்சிக்காரரான கரடிச்சும் கைச்சாத் திட்டார்கள்.

தனது கும்பலைக் கட்டுப் படுத்த முடியாத, கட்டுப்படுத்தத் தெரியாத ஒரு அரை வேக்காட்டுத்தலைவன் - அரை மனதுடன் ஒரு சமாதான உடன்படிக் கையில் கைச்சாத் திட்டால் அங்கு சமாதானம் உருவாகாது - சாவுகள்தான் அதிகரிக்கும் என்பது பல நாடுகளின் வரலாறுகள் காட்டிய உண்மை. அதேபோல உலக ஒழுங்கை, உலகநாடுகள் மன்றமான ஐ.நா.வின் ஆணைகளை அலட்சியம் செய்து வந்த பொஸ்னிய சேர்பியர்கள், தமது தலைவர் கைச்சாத்திட்ட சமாதான உடன்படிக் கையை ஏற்க மறுத்தார்கள்.இதனால் பொஸ்னிய சேர்பியர்கள் மத்தியில் கருத்துக்கணிப்பு ஒன்று நடத்தப்பட வேண்டியதாயிற்று. 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பொஸ்னிய சேர்ப்பியர்கள் வான்ஸ் - ஓயன் திட்டத்தை நிராகரித்தார்கள்!

நிராகரிக்க மாட்டார்களா - என்ன? பொஸ்னியாவில் முஸ்லிம்களிடமிருந்து இவர்கள் கைப்பற்றிய நிலத்தில் 40 சதவிகிதத்தை முஸ்லீம்களிடம் திருப்பிப்கொடுக்க வேண்டும் என்றல்லவா வான்ஸ் - ஓயன் சமாதானத் திட்டம் சொல்கிறது. முன்னைய பொஸ்னியாவில் சுமார் 10 வட்டாரங்களை முஸ்லீம்களுக்கு ஒதுக்குவது இத்திட்டத்தில் முக்கிய அம்சம்.ஆனால் பொஸ்னிய சேர்பியர்கள் இந்த சமாதானத் திட்டத்திற்கு சாவுமணி அடித்து அனுப்பி வைத்தார்கள். மேற்குலக நாடுகள்; அமெரிக்கா; ஐ.நா.மன்றம் அனைத்துமே கையைப்பிசைந்தபடி நின்றன. ஐ.நா. பிரகடனங்களை உதாசீனம் செய்து நடக்கும் பொஸ்னிய சேர்பியர்கள் மீது விமானத்தாக்குதல் நடத்தப்போவதாக மேற்குலக நாடுகள் எச்சரித்தும் பார்த்தன. ஆனால் பொஸ்னிய சேர்பியர்களின் ராணுவத் தளபதி ஜெனரல் ரட்கோ மிலாடிச் வெகுண்டெழுந்து பதில் எச்சரிக்கை விடுத்தார்!

".. எங்கள் மீது தாக்குதல் நடத்திப் பாருங்கள். அடுத்த நாளே லண்டனிலும் வாஷிங்டனிலும் குண்டுகளை வெடிப்போம்!" என்று அச்சுறுத்தி உலகநாடுகளில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் பண்புள்ள மக்களின் அருவருப்பை சம்பாதித்தார் - பொஸ்னிய சேர்பிய ஜெனரல் அடாவடித்தனம் மிக்க ரட்கோ மிலாடிச்!

அமெரிக்க ஐ.நா. சமாதானத் திட்டமான "வான்ஸ் ஓயன் திட்டம்" இப்போது இறந்துவிட்டது! புதைக்கப் பட்டுவிட்டது.பொஸ்னியாவில் எஞ்சியுள்ள 10 ஆயிரம் முஸ்லிம்களையும் வெளியேற்றுங்கள்!" என்று பொஸ்னிய சேர்பியத் தலைவர் கரடிச் பிரேரித்திருக்கிறார்.பொஸ்னிய முஸ்லீம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனங்கள், இனக்கொலை, கொள்ளை கற்பழிப்பு இவற்றை தட்டிக்கேட்க இன்று யாருமே இல்லை. பொஸ்னிய அழிமதி மற்றப்பகுதிகளுக்கும் சிந்திப் பரவாமல் தடுப்பது; இந்தச் சண்டைகளை இயன்ற அளவில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் மட்டும் நடக்க அனுமதித்தல்; இவைதான் இன்றைய புதிய அமெரிக்க ஐ.நா. கொள்கைகள். சுருங்கச் சொன்னால், பொஸ்னிய முஸ்லீம்களிடமிருந்து, பொஸ்னிய சேர்பியர்கள் பறித்தெடுத்த நிலப் பகுதியை - மண்ணை மீட்க இன்று யாருமே முன்வர வில்லை. அவர்கள் கைப்பற்றிய நிலப்பகுதி அவர்களுக்கு இனி உரிமை என்பது போல ஆகிவிட்டது. பழைய வான்ஸ் ஓயன்ஸ் திட்டத்தில்கூட முஸ்லீம்களுக்கு 10 வட்டாரங்கள் வழங்கப்பட்டன. இப்போது நாடற்ற பொஸ்னிய முஸ்லிம்களுக்கு வழங்கப்படுவதோ வெறும் பாதுகாப்பு வலயங்கள்தான்.

தாங்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த வீடுகளைவிட்டு விரட்டப்பட்ட முஸ்லிம் மக்கள், அகதிகளாக பொஸ்னியாவின் பல நகரங்களில்-குறிப்பாக 6 இடங்களில் அகதி முகாமில்போல திரண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு 'முகாமிலும்' சுமார் 20 ஆயிரம் மக்கள் நியாயமான வாழ்க்கைத்தரத்திலும் குறைந்த - கேவலமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.



ஜெனிவாவில் கரடிச் (இடது), மிலோசேவிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணவுக்கும் மருந்துக்கும் ஐ.நா. வண்டித் தொகுதிகளை இவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

உணவு கொண்டுவரும்போது அதற்குத் தடையாக நிற்கும் சேர்பிய போராளிகள். இவர்களையும் மீறி உணவு முகாமை அடைந்துவிட்டால் அந்த உணவுக்குப் போட்டி. முந்திப் பெறுவதில் போராட்டம்; கைகலப்பு. குடிநீர்ப் பற்றாக்குறை. இதனால் பரவும் தொற்றுநோய். பரிதாபகரமான நிலையில் உயிரிழக்கும் பச்சிளம் குழந்தைகள். விரக்தி மேலிட்டுக் கதறும் பெற்றோர். ' "அரையும் குறையுமான ஐ.நா.உதவி எங்களுக்கு வேண்டவே வேண்டாம்; எம்மைச் சாகவிட்டால் போதும். 15 மாதங்களாக நடைபெறும் இந்தப் போரில் எமக்கு உதவ அமெரிக்க அண்ணாச்சி வருவார் என்று காத்துக் காத்து நின்று எங்கள் ஆன்மாக்கள் இறந்துவிட்டன, காத்துநிற்பதையும் இப்போது நாம் கைவிட்டுவிட்டோம், இறக்கும் போதாவது கண்ணியமாக உயிரிழக்க விரும்புகிறோம் " என்று புலம்பும் அவர்கள்.

வாஷிங்டனில் உருவாக்கப்பட்டு, ஐ.நா. மன்றத்தில் ஜோடிக்கப்பட்ட இந்த புளுகுக் கதை, போலி ஆறுதல், நொண்டிச்சாட்டின் மற்றொரு பெயர் "பாதுகாப்பு வலயம்!"

பொஸ்னியாவின் மொத்த சனத்தொகையில் வெறும் 31 சதவிகிதத்தினரான சேர்பியர்கள் நாட்டின் நிலப்பகுதியில் 70 சதவிகிதத்தைக் கைப்பற்றியிருப்பது - சுமார் 2 லட்சம்பேரின் உயிரைக்குடித்திருப்பது அமெரிக்காவின் கண்ணில் படவில்லை. ஐரோப்பிய குடும்பத்தின் காதுகளில் எட்டவில்லை. முழு நாட்டிலும் பெரும்பான்மை மக்களான முஸ்லிம்கள் இன்று அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்க 3 பகுதிகளை பாதுகாப்பு வலயங்களாக முஸ்லிம்களுக்கு வழங்கி விட்டு, எஞ்சிய 70 சதவிகித நிலப்பகுதியையும் தமக்குள் பங்கு போட்டுக்கொள்ள பொஸ்னிய சேர்பியர்களும் குறோயற்றுகளும் தமக்குள் சதித்திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இச்செய்தி அச்சுக்குப் போகும் நேரத்தில் இந்த சேர்பிய-குறோ யற் சதித்திட்டத்தின் சகுனி மாமாக்கள் ஜெனிவா நகரில் ஒரு மாநாடு நடத்தியிருக்கிறார்கள். பொஸ்னியாவை மூன்றாகப் பிரிப்பதென்றும் முடிவு செய்திருக்கிறார்கள். பொஸ்னிய முஸ்லிம் தலைவர் இஸட் பேகோவிச் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள மறுத்திருக்கிறார். ஆனால் அவரது அணியிலிருந்து ஓர் எட்டப்பர் முஸ்லிம் பிரதிநிதியாக சேர்பியர்களுடன் உரையாடியிருக்கிறார்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் அரபு இஸ்ரேல் போரில் இஸ்ரேல் கைப்பற்றிய GAZA நிலப்பகுதியை திருப்பிக் கொடுக்க இஸ்ரேல் மறுத்து வருவது போல - பொஸ்னிய முஸ்லீம்களின் மண் பறிக்கப்பட்டிருக்கிறது.அவர்களுக்கு இப்போது உலகநாடுகள் வழங்கும் பாதுகாப்பு வலயம்ஐரோப்பிய வட்டாரத்தில் பொஸ்னிய முஸ்லீம்கள் வாழும் ஒரு GAZA பகுதியாக இன்னும் பல வருடங்களுக்கு தீர்க்கப்படாத ஒரு பிரச்னையாக இருக்கப் போகிறது என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

# பெண் பிரதமர்கள்



கிம் காம்ப்பெல்

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே ....."

ஆண்களுக்குப் பெண்கள் சளைத்தவர்களல்லர் என்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட விஷயம் தான்.

இலங்கையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், இந்தியாவில் திருமதி இந்திரா காந்தி, இஸ்ரேலில் திருமதி கோல்டா மெயரும் பிரதமர் பதவி வகித்துப் புகழ்க்கொடி நாட்டினார்கள். பின்னர் பிலிப்பைன்ஸின் திருமதி அகினோவையும் பிரிட்டனின் இரும்பு நங்கை (Iron Lady) திருமதி மார்கரெட் தாட்சரையும், பாகிஸ்தான் பெனாசிர் பூட்டொவையும் மறக்க முடியாது. பங்களாதேஷில் கலிதா ஷியாவும் நார்வே நாட்டில் திருமதி பிரன்ட்லான்டும் அயர்லாந்தில் திருமதி ராபின்சனும் உயர்பதவி வகிக்கிறார்கள்.

இப்பொழுது கனடாவிலும், துருக்கியிலும் பெண்கள் பிரதமர்களாகப் பதவி ஏற்றிருக்கிறார்கள்.

கனடியப் பிரதமராகப் பதவியேற்கும் கிம் காம்பெல்லுக்கு (MS KIM CAMBELL) வயது 46. வழக்கறிஞராகி ஏழு ஆண்டுகளில் அட்டர்ணி ஜெனரலாக பதவி வகித்தவர். பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றிய இவர், பிரதமர் மல்றோனி பதவி விலக இருந்ததால் ஆளும்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தன்னைவிட வயதில் மிக மூத்தவர்களை இரு தடவைகள் மணந்து விவாகரத்துச் செய்த இவர் துணிச்சலான - நேருக்குநேரான போக்குடையவர். கனடாவின் 'இரும்பு நங்கை' ஆவார் இவர் என்கிறார்கள்.



சில்லர்

இஸ்லாமிய நாடுகளில் பெண்கள் அரசியல் தலைவராவது அபூர்வம். பாகிஸ்தான் (பெனாசீர் பூட்டோ), பங்களாதேஷ் (திருமதி கலீதா ஷியா) ஆகிய இரண்டு நாடுகளில் மட்டுமே இவ்வாறு பெண்கள் உயர்பதவிக்கு வரமுடிந்தது. இப்பொழுது இஸ்லாமிய நாடான துருக்கியில் பிரதமராகப் பதவியேற்றிருக்கும் டான்சு சில்லருக்கு (TANSU CILLER) வயது 47. அவர் அமெரிக்காவில் கல்வி பயின்று பொருளாதாரப் பேராசிரியையாகப் பணியாற்றினார். அரசியலில் நுழைந்த ஒரு சில ஆண்டுகளுக்குள் உயர்பதவி கிடைத்துவிட்டது. அவரது கட்சியின் பெயர் உண்மை வழிக்கட்சி (TRUE PATH PARTY) துருக்கியின் பிரதமர் டெமிரல் அந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதால் ஆளும் கட்சித் தலைவராகச் சில்லர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அகதிகளை கட்டுப்படுத்த புதிய சட்டம்

## மூன்றாம் உலகநாடுகளே பெரிதும் பாதிப்படையும்

குமரன்

அரசியல் தஞ்சம் கோரி ஜேர்மனிக்குச் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை இனிமேல் குறையப் போகிறது. அகதிகளின் தொகையைக் கட்டுப்படுத்துவது என்று ஜேர்மன் நாடாளுமன்றம் தீர்மானித்துவிட்டது. ஜூலை முதல் தேதியிலிருந்து இதற்கான புதிய சட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

இதுவரை காலமும் தஞ்சம் தேடி ஓடிவரும் மக்களுக்கு, இளகிய நெஞ்சத்தோடு தங்க இடம்கொடுத் துவரும் ஐரோப்பிய நாடுகளில் முதலிடம் வகித்துவந்தது ஜேர்மனி. இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் ஹிட்லரின் ஆட்சியின் கீழ் ஜேர்மனியிலே வெகுஜன படுகொலை, சித்திர வதை, நாடுகடத்தல், இனவெறி, யூதவெறி ஆகியவை தலைவிரித்தாடின. இவற்றுக்குப் பரிகாரம் தேடும் வகையில் போரை அடுத்துவந்த புதிய ஜேர்மனியில், ஏனைய ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் கருணையும் தாராளப்போக்கு முள்ள "தஞ்சம் ஏற்கும்" சட்டம் வகுக்கப்பட்டது. அரசியல் அச்சுறுத்தல் காரணமாக, தனது நாட்டில் வாழமுடியாத எவரும் ஜேர்மனிக்குச் செல்லக்கூடிய வகையில் ஜேர்மனியின் "தஞ்ச" சட்டம் வரவேற்புக்கரம் விரித்திருந்தது. தஞ்சம் கோரும் நடைமுறை மிகவும் எளிதாக இருந்தது. ஜேர்மன் மண்ணில் காலடிவைத்த எவரும் "தஞ்சம்" என்ற மந்திரச் சொல்லை உச்சரித்தால் போதும்; உடனே சட்டத்தின் பிடி தளரும்! இதற்காக, உடனே அவருக்கு அரசியல் தஞ்சம் கிடைத்துவிடும் என்பதல்ல. ஆனால் அவருடைய தஞ்சக் கோரிக்கை மீது விசாரணை முடியும் வரைக்கும் ஜேர்மனியிலே தங்கியிருக்க அவருக்கு அனுமதி கிடைத்துவிடும். விசாரணை நடைபெற பொதுவாக, மாதங்கள் பல செல்லும். ஆண்டுக் கணக்கில் இந்தக் "காத்திருக்கும் காலம்" இழுபட்டுச்செல்வதும் உண்டு.

"தஞ்சம் கோரி ஓடிவருபவர்களில் உண்மையிலே தங்கள் நாட்டில் அரசியல் பாதிப்புக்கு உள்ளானவர்கள் ஐந்து சதவிகிதத்தினரே! மிகுதிப்பேர் "அக்கரைப்பச்சையை" நாடி, பொருளாதார மேம்பாட்டுக்காக வருபவர்கள்" என்று ஜேர்மன் அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

புதிய சட்டம் நடைமுறைக்கு வரும்போது, தஞ்சம் கோரி ஜேர்மனிக்கு வருபவர்கள் மட்டில் புதிய நடைமுறைகள் கையாளப்படும். இன்னொரு ஐரோப்பிய நாட்டிலிருந்து அல்லது ஜெனிவா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஏதாவது ஒரு நாட்டிலிருந்து அவர்கள் வந்திருந்தால், அவர்கள் உடனே திருப்பி அனுப்பப்படுவார்கள். போர் நடந்து கொண்டிருக்கும் ஒரு நாட்டிலிருந்து அல்லது சர்வாதிகார ஆட்சி நடைபெறும் நாட்டிலிருந்து வந்தால் மட்டுமே அவர்கள் உள்ளே அனுமதிக்கப் படுவார்கள். இல்லையெனில் எல்லையில் மறித்து, விசாரித்தவுடனேயே திருப்பி அனுப்பப்பட்டு விடுவார்கள். இதுவே பெரும்பாலும் நடைபெறப் போகிறது. தவிர, தஞ்சம்கோரி, முடிவுக்காக காத்திருக்கும் அகதிகளுக்கு வழங்கப்படும் ஊதியப் படிகளிலும் துண்டுவிழப் போகிறது.

> 'ஐரோப்பா தன்னை ஒரு கோட்டையாக மாற்றிக் கொண்டு, அகதிச் சட்ட அகழியை அகலமாக வெட்டி, தஞ்சம் என்று வருபவர்களைத் திருப்பி விரட்டக் கங்கணம் பூண்டுவிட்டதோ'

கடந்த ஆண்டில் மட்டும் வெளிநாட்டார் 440 ஆயிரம் பேர் தஞ்சம் தேடி ஜேர்மனி வந்தார்கள். இந்த ஆண்டு முதல் நான்கு மாதத்தில் 160 ஆயிரம்பேர் வந்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் கிழக்கு ஐரோப்பிய முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகளிலிருந்து வந்தவர்கள். மீதிப்பேர் மூன்றாவது உலக நாட்டினர். 1989 இலிருந்து இந்த அகதிப் பாய்ச்சல் பல லட்சமாக ஜேர்மனிக்குள் பெருக்கெடுத் திருக்கிறது. கிழக்கு ஐரோப்பாவிலே கம்யூனிச ஆட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக கவிழ, அங்கிருந்த மக்கள் பலர் பொருளாதாரப் பொலிவு தேடி மேற்கு நாடுகளுக்குப் படையெடுக்கத் தொடங்கினார்கள். கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே நாடாக ஆகியதும், அதை அடுத்து வந்திருக்கும் பொருளாதாரப் பின்னிடைவு ஜேர்மானியர் பலரையும் திடுக்கிட்டு விழிப்படையச் செய்திருக்கிறது.

செல்வம் கொழித்த நாட்டில் இன்று நிதித்தளர்வு ஏற்பட்டதென்றால் தஞ்சம் கோருவோர், அகதிகளாய் வருவோர், தொழில் தேடிச் சொரியும் அயல் நாட்டு வாசிகள் இவர்களே காரணர் என்று, உள்நாட்டில் அர்த்தம் கற்பிக்கத் தொடங்கினார்கள்; வந்தவர்களுக்கு வழங்கப்படும் எண்ணற்ற வீட்டு வசதிகளும், தாபரிப்பு நலன் உதவிகளும் பலர் கண்களை உறுத்தத் துவங்கின. இவையெல்லாம் வலதுசாரி இனவெறி 'நாஸிச' போக்கு மீண்டும் ஜேர்மனியிலே தலைதூக்க வழிகோலியிருக்கின்றன.

வெளிநாட்டவர்களை கண்ட கண்ட இடங்களில் தாக்குவது, அவர்கள் வீடுகளைச் சேதப்படுத்துவது கொழுத்துவது, ஆட்களை வீட்டுக் குள்ளே வைத்து உயிருடன் தீமூட்டுவது இவையெல்லாம் முளைவிட்டு, கிளைத்துப் பரவத் துவங்கின. இந்தக் கொடுமைகளைப் பார்த்தும் பாராதவர் போல பொதுமக்கள் பலரும் நடக்க - தீய சக்திகள் மேலும் உற்சாகம் பெற்றன.

1992 நவம்பரில் வீதிகளில் வெளிவெளியாக நின்று, இனக் காழ்ப்புச் சுலோகங்களுக்கு சுருதி கூட்டி, வீடுகளுக்குள் அகதிகள் இருக்க தீ மூட்டத் தொடங்கினார்கள். வீடுகளில் தூங்காது விழித்திருந்த அகதிகள் தப்பி வெளியே ஓடக்கூடியதாயிற்று. வாழ்நாள் முழுவதும் கருகிய சருமத்தோடு உலாவ ரவேண்டிய பாலகியர் இன்னமும் துயரக்கதை சொல்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இன தாக்குதல்களைக் கண்டித்து ஹம்பர்க்கில் நடைபெற்ற ஊர்வலமொன்றில் ஜேர்மன் கொடியை எரிக்கும் ஒருவர்

இவ்வாண்டு ஏப்ரல் மாத இறுதியில் வீட்டோடு கருகிய துருக்கி அகதிகளின் மரணங்கள், ஆயிரமாயிரம் துருக்கிய அகதிகளை ஜேர்மன் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்யச் செய்தன. ஆயினும் தீவிரவாத இனவெறி ஜேர்மன் குழுக்கள் மேலும் மேலும் பெருகுகின்றன. கடந்த 18 மாதங்களில் இந்தத் தீவிர வலதுசாரிகள் தேர்தல் களத்திலும் மெல்ல மெல்லச் சாதனைகளை புரியத் தொடங்கியிருக்கிறார்கள். அண்மையிலே கிறிஸ்தவ ஜனநாயக கட்சி நாடாழுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்சி மாறி, இந்தப் புதிய தீவிர வலதுசாரிக் குடியரசுப் பிரிவினரின் குரலாக ஒலிக்கப் போவதாகக் கூறிவிட்டார். இனி பவேரியா அரசிலும் இவர்களுடைய பலம் தூக்கலாகப் படியத் தொடங்கியிருக்கிறது. இப்படியான நிலையிலே, பொருளாதார மலர்ச்சியை மீண்டும் புகுத்தாவிட்டால், அடுத்த ஆண்டு நடைபெறப்போகும் வெவ்வேறு மட்டத் தேர்தல்களில் தீவிர வலதுசாரிக் குடியரசுப் பிரிவு ஆதரவு பெறும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

இப்படியான நிலையிலே அதிபர் கோல், தமது "தஞ்ச உரிமை" சட்டத்திலே பாரதூர மாற்றம் ஒன்றைக் கொண்டுவரத் துணிந்தார். அவருடைய கட்சி அவருக்கு ஆதரவைத் தந்தது. கூட்டணிக்கட்சியான லிபரல் அணியினர் "ஆம்" என்றனர். அகதிகள் மட்டில் அனுதாபம் மிகக் கொண்ட எதிர்க் கட்சியான சோஷல் ஜனநாயக அணியின் உறுப்பினர் பலரும் சட்டமாற்றத்துக்கு ஆதரவு தந்திருக் கிறார்கள்.

இதைவிட ஐரோப்பிய நாடுகளும் தங்கள் அகதிச்சட்டச் சட்டியில் அனல் மூட்டத் தொடங்கியிருக்கின்றன. பிரிட்டனில் பலத்த கெடுபிடி. பிரான்சிலும் போர்த்துக்கல்லிலும் கெடுபிடி நெருக்கடிகள் மூட்டம் கட்டத் துவங்கியிருக்கின்றன. இத்தாலியிலும் இதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஐரோப்பா தன்னை ஒரு கோட்டையாக மாற்றிக்கொண்டு, அகதிச் சட்ட அகழியை அகலமாக வெட்டி, தஞ்சம் என்று வருபவர்களைத் திருப்பி விரட்டக் கங்கணம்பூண்டுவிட்டதோ என்று அங்கலாய்க்காதவர்களும் இல்லாமலில்லை!

ஜேர்மனியில் இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வேளை பத்தாயிரம் ஜேர்மனிய மனிதாபிமானிகள் தடை மறியல் செய்தார்கள். இரவு முழுவதும் விழித்து, வீதியில் நின்று, ஜேர்மானிய மனிதாபிமானத்தை நசித்துவிடக்கூடாது என்று ஓங்கிக் குரல் கொடுத்தார்கள். ஐ.நா. அகதி உயர் ஆணையாளரும் "இந்தச் சட்டம் வேண்டாம்" என்று விதந்துரைத்திருக்கிறார். ஆனாலும் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஜூலை முதலாம் தேதியிலிருந்து சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளபோது என்ன நடக்கப் போகிறது? அகதிகள் வருவது தொடக்கத்தில் சிறிது குறையலாம். ஆனால் அது முற்றாக வற்றிவிடாது. குறிப்பாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருபவர்களை எவ்வாறு கட்டுப் படுத்தலாம்?

இனி, "றூமேனியா இன்று கம்யூனிச சர்வாதிகார நாடு அல்ல; ஜனநாயக நீரோட்டதிலே கலந்துவிட்டது." என்று கூறி அங்கிருந்து வருபவர்களைக் கட்டுப்படுத்த முடியுமா? இன்னமும் அங்கு நாடோடிக் குறவர்கள் நசுக்கப்படுகிறார்கள் என்று சர்வதேச மன்னிப்புச்சபை கூறுகிறது. கடந்த ஆண்டில் அபயம்கோரி ஜெர்மனிக்கு வந்த அகதிகளில் மிகப் பெரும்பாலானவர்கள் இந்த றூமேனிய நாடோடிக் குறவர்களே! பல்லாயிரம் பேர் இந்த ஆண்டிலும் வந்துவிட்டார்கள். இனியும் தொடர்ந்து வருவார்கள். "நசுக்கப் படுகிறோம் " என்று கூவி வரும் இவர்களை ஜெர்மனி ஏற்றுத் தாபரிக்க வேண்டும். சட்டம் அதையே கூறுகிறது. இந்த நிலையிலே தஞ்சத் தடைச்சட்டம் செயல் இழந்து நிற்கும். மூன்றாவது உலக நாடுகளிலிருந்து கசிந்து வரும் சில ஆயிரங்களை, புதிய சட்டம் மெழுகு வைத்து அடைக்கலாம். ஆனால், புனலாகப் பாய்ந்து வரும் றூமேனிய நாடோடிக் குறவரைக் கட்டுப்படுத்தாவிட்டால் - சட்டம், சத்திழந்துவிடும்! எனவே சட்டத்தின் நோக்கம் ஒன்று சரிந்துவிடும். இதன் அடுத்த நோக்கம் வலதுசாரித் தீவிரவாத இனவெறிக் குரோத அமைப்புக்களுக்குக் கடிவாளம் இடலாமென்றால், றூமேனிய அகதிகள் வரவர, சட்டம் மேலும் சத்திழக்கப்போகிறது; வெறியர்களின் பலமும் அதிகரிக்கப் போகிறது. எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, மூன்றாவது உலக நாடுகளில் இருந்துவரும் அகதிகளின் நிலையே மேலும் இக்கட்டுக்கு உள்ளாகப் போகிறது, எனலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையில் வளர்ந்த புதிய முகம்



நடிகை ரேவதியின் கணவர் சுரேஷ் மேனன். தொடரும் உறவு, அண்ணி, காவல், பிரேம பாசம், மருமகள், போன்ற பல படங்களுக்கு ஒளிப்பதிவாளராகப் பணியாற்றியவர் தற்போது இயக்குனராகவும், தயாரிப்பாளராகவும் வடிவ மெடுத்திருக்கிறார். இவர் தயாரித்து இயக்கிய படம்தான் 'புதிய முகம்'. சினிமாஸ்கோப்பில் எடுக்கப்பட்டிருக்கிறது.

சுரேஷ்மேனனே படத்தின் கதாநாயகனாகவும் நடித்திருக்கிறார். (ஏற்கனவே இவர் 'இரவில் ஒரு பகல்' என்ற தொலைக்காட்சித் தொடரில் கதாநாயகனாக நடித்திருக்கிறார்.) இவருக்கு ஜோடி........வேறு யார்? ரேவதியே தான்.

ஆரம்பக்காட்சிகளில் காதலர்களாகவும், பிற்பகுதிக் காட்சிகளில் ஐம்பது வயது நிறைந்த தம்பதிகளாகவும் நடிக்கிறார்கள்.

இரண்டாவது கதாநாயகனாக வினீத் நடிக்கிறார்.(ஆவாரம் பூ பட கதாநாயகன் இவர்.) முற்றிலும் மாறுபட்ட ( வில்லனாக அல்ல) பாத்திரத்தில் நாசர்.

ஒரே ஒரு காட்சியில் வந்தாலும், பெயர் தட்டிச் செல்லும் பாத்திரத்தில் ரகுவரன்.

இப்படத்தின் மிகப்பெரிய ப்ளஸ் பாயின்ட்-ஏ.ஆர். ரகுமானின் இசை. 'ரோஜா' படத்தின்மூலம் 'ஓகோ' என்ற பெயரைப் பெற்ற ரகுமானுக்கு இந்தப் படமும் நல்ல ஒரு பெயரைப் பெற்றுத் தருமென்பதற்கு அத்தாட்சியாக வந்த ஒரே மாதத்தில் இப்படத்தின் பாடல் கேசட் விற்பனையில் ஒரு லட்சத்தைத் தாண்டியது. இதில் மொத்தம் ஆறு பாடல்கள். எல்லாப் பாடல்களையும் எழுதியிருப்பவர் வைரமுத்து.

"கண்ணுக்கு மை அழகு
கவிதைக்குப் பொய் அழகு
அவரைக்குப் பூ அழகு
அவருக்கு நான் அழகு."

-வைரமுத்துவின் பாடல்களில் இதுவும் ஒன்று.

திரைப்படக் கல்லூரி மாணவர் முத்து கணேஷ் ஒளிப்பதிவு செய்ய கே.எஸ்.அதியமான் வசனம் எழுதியிருக்கிறார்.

சுரேஷ் மேனன் கதை, திரைக்கதை எழுதியுள்ளார்.

'புதியமுகம்' படத்தின் சிறப்பம்சங்கள்; இது ஒரு அருமையான குடும்பக்கதை. அடியோட்டமான ஆக்ஷன் இருக்கிறது. படத்தின் பிற்பகுதியில் சுரேஷ் மேனன் 55 வயது பாத்திரத்தில் வருகிறார். ரேவதி 50 வயது. வினீத்தின் பெற்றோர்களாக வருகிறார்கள். 25 வயது இளைஞனின் தாயாக ரேவதி நடிப்பது இதுவே முதல் முறை.

இப்படத்தின் சில காட்சிகள் இங்கையில் கொழும்பு, கண்டி, நுவரேலியா ஆகியஇடங்களில் படமாக்கப்பட்டிருக்கிறன. ஆறு ப ாடல்களில் ஐந்து பாடல்காட்சிகள் இலங்கையிலேயே படமாக்கப்பட்டிருக்கின்றன.



# தயரிப்பாளர் பார்த்திராத நடிகை

ஏ.ஜி.எஸ். மூவிஸ் 'தங்கக்கிளி' முற்றிலும் ஊட்டியிலே படமாக்கப் பட்டது.

கதாநாயகி மிகப்பெரிய கோடீஸ்வரர் ஒருவரின் மகள்; கல்லூரி மாணவி. பார்க்க நவநாகாரீகமாக இருக்க வேண்டும். இதற்கென முதலில் தொடர்பு கொள்ளப்பட்டவர் ரோஜா. தெலுங்கில் அவர் மிகவும் பிஸியாக இருந்ததால், அவரிடம் கால்ஷீட் இல்லை. அடுத்து, தயாரிப்பாளர் போய்ப்பார்த்தது திவ்யபாரதி. இந்தி, தெலுங்கில் நிறையப் படங்களில் நடித்துக் கொண்டிருந்த அவருக்கு எங்கே தமிழ்ப் படத்தில் நடிக்க நேரம்? ரோஜா சொன்ன அதே பதில்தான். அப்போது தயாரிப்பாளர், இயக்குனரின் ஞாபகத்தில் வந்தவர்தான் ஷாலி! 'வசந்த காலப் பறவை'யில் கதாநாயகியாக நடித்ததன்மூலம் கல்லூரி மாணவர்கள் மத்தியில் நன்கு பரிச்சயமாயிருந்த இவரையே போடலாம் என்றுபார்த்தால், இவர் இருப்பது பெங்களூரில். அங்கு தொலைபேசியில் தொடர்புகொண்டால், கன்னடப்பட சூட்டிங்குக்காக ஷாலி மைசூர் போயிருப்பது தெரிந்தது.

கடைசியில் ஒருவாரம் காத்திருந்து தொலைபேசியிலேயே இவரைக் கதாநாயகியாக பேசி ஒப்பந்தம் செய்தார்கள். அந்த நிம்ஷம்வரை தயாரிப்பாளரோ, இயக்குனரோ ஷாலியையும் பார்த்ததில்லை; ஷாலி நடித்த படத்தையும் பார்த்ததில்லை.

படத்தின் ஒவ்வொரு காட்சியிலும் கண்கவரும் உடைகள் அணிந்து இளம் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டிருக்கிறார் ஷாலி என்பது உண்மை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செவ்வி: சித்திரா விஸ்வேஸ்வரன்



இன்று இந்தியாவின் மிகச் சிறந்த பரதநாட்டியக் கலைஞர்களில் ஒருவர் திருமதி சித்திரா விஸ்வேஸ்வரன். திருவிடைமருதூர் திருமதி ரி. ஏ. ராஜலக்ஷ்மியிடம் (ஸ்ரீ ராஜேஸ்வரி பரதநாட்டிய கலா மந்திர்) 11 ஆண்டுகள் கற்ற இவர், பின்னர், இந்திய அரசு புலமைப்பரிசில் பெற்று வழுவூர் திரு பி. ராமையாபிள்ளையிடம் நான்கு ஆண்டுகள் கற்றவர்.

மணிப்புரி, கதக் ஆகிய நடன வகைகளோடு மேலைத்தேய 'பாலே' நடனத்தையும் கற்றிருக்கிறார். ஆங்கில இலக்கியத்தில் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர்.

சர்வதேச அரங்கிலும் அறியப்பட்ட இவரின் நடனத்தில் ரி. ஏ. ராஜலக்ஷ்மியிடம் அவர் கற்ற தாசி அபிநயத்தின் செழுமை, அந்த தஞ்சாவூர்ப் பாணியின் தூய்மையான- திட்டமான பாத வேலைகள், வழுவூர்ப் பாணியின் நளினம், அவர் ஆய்ந்து கற்ற பந்தணைநல்லூர்ப் பாணியின் நுட்பமான கணக்கு விவகாரங்கள், மேலைத்தேய நடனத்தின் மேடை ஆளுகை என்ற இவற்றோடிணைந்து, ஓர் இசைப்பாங்கையும் ரம்மியத்தையும் காணலாம்.

சென்னை ஆழ்வார் பேட்டையில் 'சிதம்பரம்' என்ற நாட்டிய நிறுவனத்தை இயக்கிவரும் திருமதி சித்திரா, அங்கு நடனத்தோடு இந்திய கலை, கலாச்சார பாரம்பரியங்கள் பற்றிய அறிவையும் எல்லா மாணவர்களும் அவசியமாக தெரிந்துகொள்ள வைக்கிறார்.

சித்திராவின் கணவர் திரு ஆர். விஸ்வேஸ்வரனும் ஓர் இசைக் கலைஞர். பண்டிற் சிவகுமார் சர்மாவின் சிஷ்யரான இவர், காலஞ்சென்ற இசைமேதை திரு ஜி. என். பாலசுப்பிரமணியத்தின் மருகன்.

கடந்த ஆண்டில் 'பத்ம ஸ்ரீ' விருதையும் பெற்றார் திருமதி சித்திரா விஸ்வேஸ்வரன். அவர் அளித்த செவ்வி இது:

- மாலி

புகைப்படங்கள்: கிருஷ்ணராஜா

# நர்த்தகியின் உடல் இசையின் உருவ வெளிப்பாடாகவேண்டும்

**வழுவூராரை உங்கள் குருவாக நீங்கள் தேர்ந்தெடுத்ததில் ஏதாவது சிறப்பான காரணங்கள் உண்டா?**

சின்ன வயதிலிருந்தே குமாரி கமலாவின் நடனத்தில் எனக்கு அலாதியான பிரியம். எனது அம்மாவுக்கும்கூட அப்படித்தான். அந்தப் பெரிய நடனமணியின் குருவிடம் நானும் கற்கவேண்டும் என்ற எண்ணம் அப்போதிருந்தே ஏற்பட்டது. "பாணிகள்" பற்றியெல்லாம் அப்போது அறிந்திருக்கவில்லை. வழுவூராரிடம் போனபின்னர் அவரே சொல்லுவார், "இந்த பாணிதான் உயர்ந்தது; இந்த பாணி மட்டம் என்று அப்படியேதுமே கிடையாது. ஒவ்வொரு பாணியிலும் அழகு உண்டு" என்று. மிகவும் பரந்த சிந்தை கொண்டவர் அவர்.

**வழுவூர்ப்பாணியைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற- கொண்டுசெல்கின்ற ஒருவர் நீங்கள் என்று சொல்லலாமா?**

இல்லை; சொல்லமுடியாது. நான் வழுவூர்ப் பாணியை ஆதாரபூர்வமாக பிரதிநிதித்துவம்செய்யவில்லை. அடிப்படையில் நான் தஞ்சாவூர்ப் பாணியையே கற்றேன். பின்னர் நான்கு ஆண்டுகள் வழுவூர்ப் பாணியைக் கற்றதும் எனக்கு ஏற்பட்ட ஓர் உந்தலால் பல அம்சங்களையும் ஒப்பிட்டு ஒன்றிணைத்து எனக்காக ஒரு பாணியை உருவாக்கிக் கொண்டிருக்கிறேன். வழுவூரார் போன்ற ஆக்கத்திறன்மிக்க ஒரு குருவின் அணுகுமுறைகூட மாறிக்கொண்டே செல்கிறது. அத்தகைய ஒரு குரு 25 வருடத்துக்கு ஒன்றையே திரும்ப திரும்ப சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கமாட்டார். அப்படி வழுவூராரிடம் காணப்பட்ட ஒரு மாற்றம்தான் எனக்கு பல ஆண்டுகள் முன்னதாக அவரிடம் கற்ற ராதாவின் கருத்துக்களுக்கும் என்னுடைய கருத்துக்களுக்குமிடையே வழுவூர்ப்பாணிபற்றி சில முரண்பாடுகள் சில ஆண்டுகளுக்கு முன்னர் 'சுருதி' சஞ்சிகையிலே எழுந்ததற்கு காரணம்.

வழுவூரார் ஒவ்வொருவரினதும் உடல்வாகுக்கு - கிரகிக்கும் ஆற்றலுக்கு ஏற்ப அடவுகளைச் சொல்லிக்கொடுப்பார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழுவூராருஞ்சரி, பந்தணைநல்லூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையுஞ்சரி , கிட்டப்பாபிள்ளை போன்றவர்களுஞ்சரி அவர்கள் எல்லோரதும் ஆக்கத்திறன் எல்லையற்றதே.

**வழுவூர்ப்பாணியை மற்றைய பாணிகளிலிருந்து எப்படி நீங்கள் வேறுபடுத்துவீர்கள்?**

வழுவூர்ப்பாணியில் நளினமுண்டு. அழகான கண் அசைவுகள். அவையை ஈர்த்துவைத்திருக்கின்ற ஒரு சக்தி வழுவூராரிடமிருந்தது. மிகவும் லாஸ்யமாக இருக்கும். சிலசமயங்களில் ஆடுகிறவர்கள் மீது தான் தப்பு; கைகளை இலேசாக வைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் அவர் நளினத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் சொல்லிக் கொடுக்கும்போது



அங்க சுத்தத்தோடுதான் சொல்லிக் கொடுப்பார். அத்துடன் துள்ளல், பாய்தல், மேடையை முற்றாக பயன் படுத்தல் இவை எல்லாவற்றிலுமே அவர் ஒரு புரட்சியாளர் என்றுதான் சொல்வேன். அரண்மனைகளிலே, கோவில்களிலே அந்நாள்களில் ஆடிக்கொண்டிருந்தமையால் இட வசதிக்கேற்ப குறுகிய மேடையில் அதிக அசைவுகள் இன்றி அப்போது ஆடினார்கள். பின்னர் பெரிய மேடைகளிலே ஆடத்தொடங்கியதும் வழுவூரார் அதற்கேற்ப முழுமேடையையும் பயன்படுத்தும் விதத்தில் மாற்றங்களை அழகோடு புகுத்தினார்.

பந்தணைநல்லூர் பாணியில் கணக்கு விவகாரங்கள் மிக உயர்ந்தனவாக இருக்கும்; நுட்பமானவையாக இருக்கும். தஞ்சாவூர்ப்பாணியில் பாத வேலைகள் மிக அழகாக இருக்கும். அழுத்தம் இருக்கும்; ஆனால் ஓசை ஏற்படாது. அத்துடன், தாசி அபிநயம் என்பதால் அபிநயமும் மிக மிக அழகாக இருக்கும்.

வழுவூராரிடம் நான் சென்ற வேளையில் எனக்கு ஒரு பலமான அஸ்திவாரமிருந்தது. தஞ்சாவூர்ப்பாணியில் நான் கற்றிருந்ததால் அங்கசுத்தம், பாத வேலைகள், அபிநயம் எல்லாமே வலுவாக இருந்தன. வழுவூரார் என்னைத் தன் மாணவியாக ஏற்றுக்கொண்டபோது நான் முன்னர் கற்றிருந்த எதையுமே அவர் மாற்றச் சொல்லவில்லை. மாறாக ஒரு சிற்பியைப்போல எனக்கு மெருகூட்டினார். என் மனதிலே அதை ஏற்படுத்தினார்.

> "அரங்கேற்றத்தில் மாணவியின் விடைத்தாளை எல்லோருமே பார்க்கிறார்களே"


இயற்கையின் அழகை எப்போதுமே ரசித்தவண்ணம் இருப்பார் அவர். எங்கோ சும்மா பார்த்துக்கொண்டிருப்பது போலத்தெரியும்; ஆனால், அவர் ஏதோ ஒன்றை ரசித்துக்கொண்டிருப்பார். கற்பிக்கும்போதுகூட, "உடம்பை வளைத்து ஆடு" என்று சொல்லமாட்டார்; "கொடி போல்வளை" என்பார். "இந்த அடவைப் பாய்ந்து போடு; ஜம் பண்ணு" என்று சொல்லமாட்டார்."மான் மாதிரி துள்ளு" என்பார். அவர் ஒரு பெரும் அநுபவம். தக்கதொரு தருணத்தில் அவரிடம் போய்ச் சேர்ந்ததில் மிகவும் அதிருஷ்டசாலி நான். அவர் தன்னை அறிந்துகொண்டிருந்த நேரத்தில் அல்ல, பூரணத்துவமான ஒரு குருவாக, சிந்தனையாளராக, தத்துவவாதியாக, எல்லாம் ஒன்றிணைந்து தன்னை அவர் அறிந்துவிட்ட நிலையில் சேர்ந்தேன்.

**வழுவூரார் நட்டுவாங்கமும் சொல்லித்தருவாரா?**

அந்தக்காலத்தில் நட்டுவாங்கம் யார்தான் சொல்லிக்கொடுத்தார்கள்? திஸ்ரத்துக்கும் மிஸ்ரத்துக்குமே வித்தியாசம் சொல்லிக்கொடுக்க மாட்டார்கள். வழுவூரார் மாத்திரமல்ல, கிட்டப்பா பிள்ளையோ, முத்துசாமிப்பிள்ளை-யோ எவருமே நட்டுவாங்கமோ, கணக்கு விவகாரமோ சொல்லிக்கொடுக்கமாட்டார்கள்.

**இதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இரண்டு விதமாக இதைப்பார்க்கலாம். நாமெல்லாம் மாணவர்களுக்கு இப்போ இதைச் சொல்லிக் கொடுக்கிறோம். ஏனெனில் பயிற்சி முடிந்து, நம்முடைய நிறுவனத்தைவிட்டு அவர்கள் செல்லும்போது சுயமாக இதை அவர்கள் தொழிலாக செய்யக்கூடியதாக இருக்கவேண்டும் என்று எண்ணுகிறோம். ஆனால் அந்தக்காலத்தில் இப்படிப் பெருமளவிலானோர் நடனம் கற்கவில்லை. சிலரே கற்றார்கள். அப்படி கற்பவர்கள் தங்களை விட்டுச் சென்றுவிடுவார்கள்; அதனால் தமது வாழ்க்கை வருமானம் பாதிக்கப்பட்டுவிடும் என்பதாலும் அவர்கள் அதைத் தம் குடும்பத்துள்ளேயே வைத்துக் கொண்டார்கள் என்று கொள்ளலாம்; அதிலும் ஒரு நியாயம் உண்டு.



ராஜலக்ஷ்மி ரீச்சர் ஓரளவுக்கு எனக்கு நட்டுவாங்கம் சொல்லித்தந்தார். அதுதவிர 'தியறி' யைப்போல நட்டுவாங்கத்தையும் மிருதங்க வித்வானிடம் சொல்லுக்கட்டெல்லாம் கற்றுக்கொண்டு நானாகவேதான் விருத்திசெய்தேன். வழுவூரார் எப்போதுமே, "தாளம் தட்டுவதைக் கேட்டால் அது ஆடுபவர் ஓர் அடவை மறந்தால்கூட அதை எடுத்துச் சொல்வதாக இருக்கவேண்டும்" என்பார். அதனால் அவர் 'அந்தந்த அடவுக்கு அழகு கொடுக்கவேண்டும்' என்பார். ஆனால் நான் என்ன செய்கிறேன் என்றால், 'இந்த அடவுக்கு அழகு கொடுக்கவேண்டும் என்றால் இப்படி தட்டவேண்டும்' என்கிறேன். அதாவது நாங்கள் கரண்டியிலே ஊட்டுகிறோம். ஆனால் அவரோ எண்ணத்தை வெளிப்படுத்திவிட்டு மாணவர்களே அதைக்கண்டறிய வைக்கிறார்; அவர்தான் உண்மையிலே பெரிய ஆசான்.

**வழுவூராரின் புகழுக்கு அவரின் நட்டுவாங்கமும் ஒரு காரணமல்லவா?**

நிச்சயமாக; மிகவும் இசை அம்சத்தோடு செய்வார். சுதியோடு சேர்ந்து, மிருதங்கமும் அவரும் நாட்டியத்துடன் ஐக்கியமாகி ...



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகவும் அழகாக இருக்கும். அதற்காகவே பலர் அவரின் நிகழ்ச்சிகளுக்குச் செல்வார்கள். இப்பொழுது சாமராஜூம் மிகவும் அழகாகச் செய்கிறார். அது அந்தக் குடும்பத்துக்கு ஒரு தனித்துவமான கொடை.

**உங்களுடைய நடனத்தை நீங்கள் எப்படி வித்தியாசப் படுத்துகிறீர்கள்?**

இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறேன். நடனம் உடலின் இசை. இசையின் வரிவடிவங்களிலிருந்து நடனத்தின் உள்ளுணர்வு வெளிப்படவேண்டும். நர்த்தகியின் உடல் சங்கீதத்தின் உருவ வெளிப்பாடாகவேண்டும். இந்த விதத்திலேதான் என்னுடைய நடனம் அமைகிறது. நடனம் வெறுமனே உடல் ஒழுக்கமாக மாத்திரம் அமைந்ததல்ல. முத்திரை, கை, கால் அசைவுகளில் மாத்திரம் நாம் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தால் அது உடற் பயிற்சி போன்றதேதான். அவ்வாறன்றி, நடனம் மனோரீதியான ஒழுக்கம் நிறைந்ததாகவேண்டும்.

நடனத்துக்கும் இசைக்குமிடையே ஓர் உடன்பாட்டுத் தாக்கம் இருக்கவேண்டும். அப்போது அது புதுப்புதுத் தூண்டலுக்கு வாய்ப்பாகிறது. பாடுபவர் எப்போதும் ஒரே மாதிரியே பாடுவதில்லை. எனின், அதற்கேற்றதான உள்ளுணர்வின் வெளிப் பாடு அப்போது தெரியும்.

**குமுதினி லாகியா, சந்திரலேகா போன்றவர்கள் பற்றி என்ன**



**சொல்கிறீர்கள்?**

அவர்களும் அவர்களுடைய வழியிலேவித்தியாசமான ஒரு வெளிப்பாட்டுடன் தங்களைக் கண்டுகொள்கிறார்கள்.

**இசை முக்கியத்துவம் பெறும் உங்கள் நடனத்திலே உங்கள் கணவர்தான் உங்களுக்கு இந்தியாவிலும் பாடுகிறாரா?**

ஆம்.

**மேடையில் இருவரிடையேயுமான ஒத்துழைப்பு எப்படி?**

எல்லாமே உடனுக்குடன்! ஒருவரையொருவர் பரஸ்பரம் நன்கு புரிந்துகொண்டிருப்பதால் அவ்வப்போதைய உடல்நிலை, மனோநிலைக்கேற்ப எதையும் உடனுக்குடன் தீர்மானித்துவிட - செயல்பட முடிகிறது. தாளத்திலுங்கூட நாம் வியவகாரங்கள் செய்வோம். அந்த அளவுக்கு எனக்கு மிருதங்கம் வாசிப்பவர்கள் கூட புரிந்துணர்வோடு இருக்கிறார்கள். அப்படிச் செய்கின்றபோதுதான் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அநுபவமாகிறது.

**நீங்கள் ஆடும்பொழுது நேராக பார்க்காது, முகத்தை சற்று திருப்பிவைத்துக்கொண்டு பார்ப்பதும் அசைவுகளின்போது அவை யோரைப் பார்த்துச் செய்வதும் வழுவூராரின் முத்திரைகள்?**

ஆம். முகத்தை ஒரு கோணமாக வைத்துக்கொண்டு பார்ப்பது அழகாக இருக்கும் என்பார். அவையோரைப்பார்த்துச் செய்கின்றபோது ஓர் உள்ளுணர்வு உருவாகும் என்பார். புராதன சிற்பங்களும் மொனலீசா ஓவியமும் இவை இரண்டுக்குமான சிறந்த எடுத்துக்காட்டுகள். ஆனால் இவைபற்றி அறியாமலே - சாதாரண கல்வியே கற்காமல் அவர் இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டிருந்தார். உன்னதமான ஒருவர் அவர். என்னுடைய அதிருஷ்டம் ராஜலக்ஷ்மி ரீச்சரிடம் பழைமையையும் வழுவூராரிடம் புதுமையையும் கற்றேன். அத்துடன் வழுவூராரிடம் நான் கற்கச் சென்றபோது எனக்கும் ஒரு கலை உணர்வும் மன முதிர்ச்சியும் ஏற்பட்டிருந்ததால் அவர் கற்பிப்பவற்றை என்னால் உணர்ந்து செயல்பட முடிந்தது. 19 வயதிலன்றி 8 வயதில் அவரிடம் சென்றிருந்தேனென்றால் அந்த அளவுக்கு நான் புரிந்துகொண்டிருக்கமாட்டேன்.



ராஜலக்ஷ்மி

**நீங்கள், பத்மா சுப்ரமண்யம், சுதாராணி ரகுபதி, ஆகிய மூவரும் இணைந்து தொலைக்காட்சியிலளித்த அந்த விராலி மலைக் குறவஞ்சி பற்றி...**

ஆமா, அதற்கு ஒரு சுவாரஸ்யமான பின்னணி உண்டு. புதுடில்லியிலே பாலசரஸ்வதிக்கு ஓர் அஞ்சலி நிகழ்ச்சி ஏற்பாடுசெய்தார்கள். அதிலே ஜாமினி கிருஷ்ணமூர்த்தி, சோனால் மான்சிங், உமா சர்மா ஆகியோர் பங்குபற்றுவதாக இருந்தது. ஏதோ சில கசப்பான சூழலில் இவர்கள் அதில் வெளிநடப்புச் செய்துகொண்டார்கள். இது இந்தியா முழுவதும் மிகுந்த பரபரப்பான செய்தியாகியது. கலைஞர்களிடையே ஒற்றுமை இல்லை என்ற இதை முறியடிக்க தூர்தர்ஷன் சென்னை இயக்குநர் எங்கள் மூவரையும் தொடர்புகொண்டார். நான் அப்போது ஊரில் இல்லை. நானும் நிச்சயமாக ஒப்புக்கொள்வேனென்று பத்மாவே அவரிடம் சொல்லிவிட்டாராம். சுதாராணியும் உடன்பட்டுவிட்டார். நான் ஊர் திரும்பியதும் மூவருமாக சேர்ந்து இதனைத் தயாரித்தோம். எப்படியெனில், ஒவ்வொருவரும் தனித்து வரும் பகுதிகளை அவரவராகவும் சேர்ந்துவரும் பகுதிகளை சேர்ந்து மூவரும் ஆலோசித்தும் அமைத்தோம். மூன்று நர்த்தகிகள் ஒன்றுசேர்ந்து ஒன்றைத் தயாரிப்பது முக்கியமானதுதான். ஆனால் மூன்று நர்த்தகிகளிடையே ஏற்பட்ட சச்சரவு பெற்ற பிரபல்யத்தை அந்த ஒன்றுசேரல் பெறவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பத்மாவுடன் எனக்கு ஏற்கனவே பழக்கமுண்டு; மிகுந்த மதிப்பு உண்டு. சுதாராணியை அவ்வளவாகத் தெரியாது. ஆனால் இந்த நிகழ்ச்சியின் பின்னர் நாம் மூவரும் மிக நெருக்கமானவர்களானோம். 'மும்மூர்த்திகள்' என்று சிலர் சொல்வார்கள் இப்போது!



சுதாராணி, சித்திரா, பத்மா

**இது ஏனைய கலைஞர்களிடையே ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தியதா?**

ஆம். அதன்பின்னர் பல ஒன்றுசேரல்கள் ஏற்பட்டிருக்கின்றன. சர்வதேச நடன அணி சார்பில் பின்னர் அடையார் லக்ஷ்மன் நடன அமைப்புச் செய்ய கிருஷ்ணவேணி, சாந்தா, தனஞ்சயன், நரசிம்மாச்சாரி, நான் இப்படி ஏழு பேர் சேர்ந்து ஆடினோம். விஸ்வேஸ்வரனும் அரவிந்தாக்ஷனும் பாடினர்! இதே அமைப்பில் கனிஷ்ட பிரிவொன்றை உருவாக்கி எமது சிரேஷ்ட மாணவிகள் சுதாராணி நடன அமைப்புச் செய்த உருப்படி ஒன்றை ஆடினார்கள். இதுதவிர இந்திய பரதநாட்டிய கலைஞர் சங்கம் (Association of Bharatanatyam Artists of India -ABHAI)என்று ஒன்றை தண்டாயுதபாணி பிள்ளையின் சகோதரர் பக்கிரிசாமி பிள்ளையின் முயற்சியில் உருவாக்கியிருக்கிறோம்.

**பொதுவாக, சோனால் மான்சிங், பிர்ஜு மகராஜ் போன்ற வட இந்திய கலைஞர்களின் நிகழ்ச்சிகளுக்கும் ஆர்வத்தோடு செல்கின்ற வழக்கம் தமிழ் ரசிகர்களுக்கு இருக்கிறது. ஆனால் தென்னாட்டுக் கலைஞர்களுக்குஅப்படி ஒரு வரவேற்பு வட இந்தியர் மத்தியில் இருக்கிறதா....?**

உண்மைதான். நானும் அதை உணர்ந்திருக்கிறேன். அவர்களுக்கு அது மொழி புரியாது என்ற மனோ ரீதியான ஒரு தடை. பொதுவாகப் பார்த்தால் தென்னிந்தியர்கள் பலர் பல மொழி பேசுவார்கள். நானே பல மொழிகள் பேசுவேன். எதையும் ஏற்றுக்கொள்கின்ற பரந்த உள்ளம் எங்களுக்கு. எதையும் கற்றுக்கொள்வோம். ஆனால் அவர்கள் அப்படியல்ல. ஹிந்தியையே பிடித்துக்கொண்டிருப்பார்கள்; மனோரீதியான ஒரு தடைதான் இது. இளம் சந்ததியிடையே இதை இல்லாமல் செய்வதற்காக இப்போது SPIC-MACAY என்ற நிறுவனம் முன்னணி கலைஞர்கள் பலரதும் நிகழ்ச்சிகளை சிறுவர்கள் மத்தியிலே நடாத்தி வருகின்றது.

**அரங்கேற்றங்கள் பற்றி....**

இது இப்போது முக்கியமான ஒரு விடயந்தான். ABHAI கருத்தரங்கு ஒன்றிலும் இதுபற்றி ஆராய்ந்தோம். ஆனால், உண்மையான ஒரு குரு ஒருவர் நன்றாக ஆடாதவரைக்கும் அவரை அரங்கேற்றம் செய்யமாட்டார். பொதுவாக ஒருவரை அரங்கேற்ற நிலைக்கு தயார் செய்ய 5 முதல் 7 ஆண்டுகள்வரை ஆகும். மிகவும் பிரத்தியேகமான ஓர் ஆற்றல் இருந்து, ஒரு கலைப் பின்னணியு மிருந்தால் இந்த கால எல்லைக்குள்ளாகவும் சில சமயங்களில் அரங்கேற்றலாம். ஆனால் அம்மாதிரி ஆற்றல் மிக அரிதானதே. அரங் கேற்றத்தை மனதில் கொண்டு வருகின்ற எவரையும் நான் எனது நிறுவனத்தில் ஏற்றுக்கொள்வதில்லை. பாடசாலையில் ஒரு பிள்ளை பரீக்ஷை எழுதினால் அதைத் திருத்துகின்ற ஆசிரியருக்கு மாத்திரம்தான் அது என்ன எழுதியிருக்கிறது என்பது தெரியும். ஆனால் அரங்கேற்றத்தில் விடைத்தாள் முழுவதையும் அவையில் எல்லோருமே பார்க்கிறார்கள். அந்த நிலையிலே, எனது பிள்ளை எல்லோரிடமும் - முதலிலே குருவிடம் - நல்ல பெயர் வாங்கவேண்டும் என்ற எண்ணம் பெற்றோருக்கும் நாம் கலைக்கு துரோகம் செய்யக்கூடாது என்ற எண்ணம் குருவுக்கும் ஏற்பட வேண்டும்.

அரங்கேற்றம் செய்ததிலோ, அல்லது ஆயிரம் நிகழ்ச்சிகளைச் செய்ததிலோ நான் ஒன்றையும் சாதித்துவிடவில்லை. என்னை இன்னும் ஒரு மாணவியாகவே நான் கருதுகிறேன்; கற்கவேண்டியது எவ்வளவோ உண்டு. 60 வயது ஆனபோதுகூட கடைசியாக சென்னையில் கமலாவின் நடனத்தைக்கண்டு வியந்து போனேன். அதை நான் அவரிடம் கூறவும், "நான் என்னதான் அப்படி செய்துவிட்டேன்; இன்னும் எவ்வளவெல்லாம் உண்டு?" என்றார். அப்படியே எம். எஸ்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்கிறார். இப்படியாக இந்த மேதைகள் எல்லோரும் நினைக்கின்றபோது அதை நாம் சிந்திக்கவேண்டும். 'நான், நான்' என்பதை மறந்து, நம்மைவிட கலை முக்கியம் என்பதை உணரவேண்டும்.

**இந்திய நடனங்கள் தொடர்பில் மேலைத்தேய ரசிகர்கள் பற்றி என்ன சொல்வீர்கள்?**

சுவாரஷ்யமும் ஈடுபாடும் கொண்டிருக்கிறார்கள். அடிப்படையில் வாழ்க்கை வேகமாக இருப்பதால் அவர்களுக்குள் அமைதிஎல்லாவிதத்திலும் தேவைப்படுகிறது. அதை அவர்கள் நமது கலைகளிலே காண்கிறார்கள் என்றே எண்ணுகிறேன்.



கணவருடன் சித்திரா

# கலாஷேத்ராவில் கொடூரம்


சென்னை திருவான்மியூர் கலாஷேத்ரா வளாகத்துக்குள் மே மாதம் 4ஆம் தேதி இரவு ஒரு மணிக்கு கத்தி, பொல்லுகள் சகிதம் புகுந்த இனந் தெரியாத கோஷ்டி ஒன்று, அங்கு உறக்கத்திலாழ்ந்திருந்த கலாஷேத்ராவின் தலைவர் திரு.கே.சங்கர மேனனையும் (86 வயது), ஆரம்பகாலம் முதலே கலாஷேத்ராவுடன் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட 80 வயதுக்கும் மேற்பட்டவர்களான திருமதிகள் கமலா, பத்மாசனி ஆகியோரையும் கொடூரமான முறையில் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றிருக்கிறது.

திரு.மேனனின் காதுகள் இரண்டையும் அக்கோஷ்டியினர் வெட்டியதோடு நெற்றியிலும் அவருக்கு பலத்த காயத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். திருமதி கமலாவின் வலது கையில் முறிவு ஏற்பட்டதுடன் அவரது வலது தோள் மூட்டும் இடம் பெயர்ந்துள்ளது. திருமதி பத்மாசனியின் நாடி எலும்புகள் உடைந்துபோயுள்ளன.

அப்போலோ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட இவர்களில், பத்மாசனிக்கு உடன் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மேனனின் காதுகளையும் டாக்டர்கள் இணைத்துள்ளனர். பத்மாசனியைத் தவிர மற்றைய இருவரும் தேறி வருகிறார்கள். இதேவேளை, இச்செயலைப் புரிந்தவர்கள் யார் என்பதோ, எதற்காக இதைச் செய்தார்கள் என்பதோ புரியாததாகவே இருக்கிறது.

திருமதி ருக்மிணிதேவி அருண்டேலினால் நிறுவப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு நடன நிறுவனமாக மாத்திரமன்றி, இந்திய கலாசாரத்தின் எடுத்துக்காட்டாக சர்வதேச புகழோடு இயங்கிவரும் இக் கலைக்கூடத்தில், ருக்மிணி அருண்டேலின் மறைவுக்கு முன்னதாகவே நிர்வாக முறையில் சில சர்ச்சைகள் உருவாகியிருந்தன. அங்கு பணிபுரிபவர்களுக்கு போதுமான வேதனம் கொடுக்க இயலாத நிலையிலும் அரசிடமிருந்து நிதியுதவி பெறுவது அரசின் தலையீட்டை ஏற்படுத்தும் என்று ருக்மிணி அருண்டேல் கருதினார். ஆனால், நிர்வாகத்தில் சிலர், கலாஷேத்ரா ஒரு 'டீம்ட்' பல்கலைக் கழகமாக மாறவேண்டும் என்று விரும்பினார்கள்.

அந்நேரத்தில் நோயுற்றிருந்த ருக்மிணி அருண்டேல் அவரது மிக நெருங்கிய நண்பர்கள் சிலரின் ஆலோசனையில் நிர்வாகக்குழுவுக்குத் தெரியாமலே 'ட்ரஸ்ற்' ஒன்றை அமைத்தார். அதில் எல்லோருமே 70 வயதுக்கு மேற்பட்டவர்கள். சங்கர மேனனுடன் முன்னாள் ஜனாதிபதி திரு ஆர்.வெங்கட்ராமனும் அதன் உறுப்பினர்களில் ஒருவர். நீதிமன்ற அங்கீகாரத்தையும் அவர்கள் பெற்றார்கள்.



சங்கர மேனன்

ருக்மிணி அருண்டேலின் இச்செயல் பலரை அதிர்ச்சிக்கும் ஆத்திரத்துக்கும் உள்ளாக்கியது. ஏற்கனவே செயற்குழு உறுப்பினர்களாகவிருந்த மூவர் இந்த புதிய அமைப்பு சட்டவிரோதமானது என்றும் அதற்கான நீதிமன்ற அங்கீகாரத்தை ரத்துச் செய்யவேண்டும் என்றும் மேல் நீதிமன்றத்தில் முறையீடு செய்தார்கள்.(இம்மூவரில் திருமதி கிருஷ்ண வேணியின் கணவர் காலஞ்சென்ற திரு.எஸ். லக்ஷ்மணன், திருமதி எஸ்.(பெரிய)சாரதா ஆகியோரும் அடங்குவர்.)இவர்களுக்குச் சாதகமாகவே நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவும், அதனை எதிர்த்து 'ட்ரஸ்ற்' உயர்நீதி மன்றத்தில் மேன்முறையீடு செய்தது. 87ஆம் ஆண்டிலிருந்து அந்த வழக்கு இன்னமும் உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்காக காத்திருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## புதிய குடிவரவு சட்டம்

# பொலிசாருக்கு கூடுதல் அதிகாரம்

**செந்தூரன்**

பிரான்ஸில் வலதுசாரி அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து வெளிநாட்டவர்கள் தொடர்பாக மூன்று சட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

வெளிநாட்டாரை சோதனையிடுவதற்கு முதலாவது சட்டம் பொலிசாருக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கியது.

பிரான்ஸில் பிறந்தோர் அனைவருக்கும் பிரெஞ்சு பிரஜாவுரிமை தானாகவே கிடைக்கும் என்ற நடைமுறையை இரண்டாவது சட்டம் மாற்றியது. இங்கு பிறந்த வெளிநாட்டாரின் பிள்ளைகள் 10-21 வயதுக்கு இடையில் பிரஜாவுரிமையை கேட்டுப் பெற வேண்டும். பிள்ளைகள் சார்பில் பெற்றோர் கோரமுடியாது.

வெளிநாட்டவரின் வரவைக் கட்டுப்படுத்தும் மூன்றாவது சட்டம்அரசியல் புகலிடம் கோருபவரை, அவரது கோரிக்கை ஆதாரமற்றது என்ற அடிப்படையில், அவர் அகதிகள் பாதுகாப்பு அலுவலகமான 'ஒவ்ரா'வுக்கு மனுச் செய்வதை தடுக்கவும் நாட்டிலிருந்து திருப்பியனுப்பவும் பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குகிறது. வெளிநாட்டவர் தமது மனைவி பிள்ளைகளை வரவழைப்பது சுலபமாயிராது. போதிய வருமானம் இருக்கிறது என்பதை அவர்கள் நிரூபிக்க வேண்டும். மேயர் (மேரி) அனுமதி வழங்கவேண்டும். பிரெஞ்சுக்காரர் வெளிநாட்டவரை விவாகம் செய்யும் போதும் உரிய பத்திரங்களை பெறுவதில் புதிய கட்டுப்பாடுகள் இருக்கும். விசா வழங்கும்போது அல்லது புதுப்பிக்கும்போது அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்தால் மேன்முறையீடுசெய்யமுடியாது. விசா மேன்முறையீட்டுக் கமிஷன் இல்லாதொழிக்கப்படும். அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வெளிநாட்டவரை நாட்டிலிருந்து வெளியேற்றவும், போதைவஸ்து கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடும்போது அவர்கள் நாட்டின் எல்லைக்குள் வசிப்பதற்கு தடைவிதிக்கவும் சட்டம் அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குகிறது.

கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதகுருமாரும் மனித உரிமை இயக்கத்தினரும் இந்தச் சட்டத்துக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டார் தொடர்பான கமிஷனின் தலைவர் தாம் இந்த சட்டத் தின் அம்சங்களை அறிந்து அதிர்ச்சி அடைந்ததாக தெரிவித்து பதவியை இராஜினாமாச் செய்தார். மனித உரிமைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கும் கமிஷனும் இந்த சட்டத்தை எதிர்த்தே ஆலோசனை வழங்கியி ருக்கிறது.

நாட்டின் பிரச்சனைகள் அனைத்திற்கும் வெளிநாட்டாரே காரணம் என்ற அபிப்பிராயத்தை வளர்ப்து இனவாதிகளுக்கு வாய்ப்பாகும். ஜேர்மனியில் போன்று வன்முறைகளை அவர்கள் தூண்டலாம் என்று அரசியல் விமர்சகர்கள் அச்சம் தெரிவித்திருக்கின்றனர்.

பெரும்பாலான பிரெஞ்சு மக்கள் இந்த சட்டங்களை ஆதரிப்பதாக கருத்துக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஆனால் வெளிநாட்டார் வருகையை இவற்றால் குறைக்கலாம் என்பதில் அவர்களில் பெரும்பான்மையானோருக்கு நம்பிக்கையில்லை.

வெளிநாட்டார் வரவை பூஜ்யம் ஆக்குவேன் என்று தெரிவித்த உள்விவகார அமைச்சர் பஸ்குவா பின்னர் அதைத் திருத்தி சட்டவிரோத குடிவரவை பூஜ்யம் ஆக்கப்போவதாக கூறியிருக்கிறார். 1974ம் ஆண்டில் வெளிநாட்டாரை வேலைக்கு வரவழைப்பதை நிறுத்திய போதிலும் வருடாந்தம் ஒரு லட்சம் பேர் வருகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கும் நிலையில் இதை அனுமதிக்க முடியாது என்கிறார் அவர்.

ஏற்கனவே இங்கு சட்டப்படி வசிக்கும் - சட்டங்களை மதித்து நடக்கும் வெளிநாட்டாருக்கு பாதிப்பு இராது. உண்மையான அகதிகளுக்கு புகலிடம் வழங்கும் நாட்டின் பாரம்பரியத்திலும் மாற்றம் இருக்காது என்று அவர் விமர்சனங்களுக்கு பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார். இனவாதம் தலைதூக்காதபடி இனவாதிகளின் நடவடிக்கைகளை கண்காணித்து வருவதாகவும் அவர் உறுதியளித்திருக்கிறார்.

---

பிரதமர் ஜான் மேஜரின் தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையுடன் போயிற்று! மாஸ்ட்ரிக் உடன்படிக்கையின் தொழிலாளர் உரிமை, ஊதியம் குறித்த சமூக நிலை அத்தியாயம்மீது பாராளுமன்றத்தில்நடந்த வாக்கெடுப்பில் அரசாங்க எம்.பி.களாலேயே அரசு தோற்கடிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட 'அவமானத்தை' ஈடுசெய்துவிடும் முயற்சியில் உடனடியாகவே அவர் தம்மீது நம்பிக்கை வாக்கைக் கோரினார். அளிக்கப்பட்ட 638 வாக்குகளில் 40 அதிகப்படி வாக்குகளை அவர் பெற்றார். தற்போதைக்கு அவர் தப்பித்துக் கொண்டாலும் மார்கிரட் தாட்சருக்கு ஏற்பட்ட 'கதி'யே இவருக்கும் ஏற்படும் என்று அவதானிகள் உறுதியாக நம்புகின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கடந்த 30 ஆண்டுகளில் மிகவும் பிரசித்தமான பிரதமராகக் கணிக்கப்பட்ட ஜான் மேயர், இன்று எல்லோரையும்விட மிகவும் தாழ் நிலைக்குச் சென்றுவிட்டார். "பிரிட்டிஷ் அரசியலில் ஒரு வாரம்கூட மிக நீண்ட காலம்" என்ற முன்னாள் பிரதமர் ஹரல்ட் வில்சனின் கூற்று நிரூபணமாகியிருக்கிறது.

அண்மைக்காலமாக மேயரின் செல்வாக்கு சரிந்துகொண்டே செல்ல ஆரம்பித்தது. காரணம் பொருளாதார வீழ்ச்சி. அண்மையில் நடந்த உள்ளாட்சித் தேர்தலிலும் நியூபரி தொகுதி பாராளுமன்ற இடைத்தேர்தலிலும் ஆளும் கன்சர்வேடிவ் கட்சிக்குப் பலத்த அடி விழுந்தது. கன்சர்வேடிவ் கட்சியின் கோட்டை என்று கருதப்படும் நியூபரியைக் கைப்பற்றியதோடு பல உள்ளாட்சி மன்றங்களையும் லிபரல் ஜனநாயகக் கட்சி பிடித்தது. இப்பொழுது ஜூலை 29 ஆம் தேதிநடைபெற்ற கிறைஸ்ட்சர்ச் தொகுதி இடைத்தேர்தலிலும் எதிர்பார்த்ததற்கும் மேலாக ஆட்சியிலிருந்த எந்த அரசுமே காணாத தோல்வியை லிபரல் ஜனநாயகக்கட்சியிடம் கண்டிருக்கிறது.

ஊராட்சித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி ஒருபுறம் வதைத்துக் கொண்டிருந்த நேரத்தில், முன்னாள் நிதியமைச்சர் நார்மன் லமோன்ட் வேறு அரசுமீது வசைபாடினார். நிதியமைச்சர் பொறுப்பிலிருந்து கழற்றிவிடப்பட்டபின்னர், பாராளுமன்றத்தில் அவர் நிகழ்த்திய உரையில், "இந்த அரசு குறுக்குவழிப் போக்குகளிலேயே கவனம் செலுத்துகிறது. அரசின் பொருளாதாரக் கொள்கைகளில் கட்சிக்காரர்கள் தலையிடுகிறார்கள். இந்தப் போக்கு நீடித்தால், இந்த அரசு நீடிக்காது. இது பதவியில் நீடிப்பதற்குத் தகுதியும் இராது" என்று கூறினார். அவரது பேச்சு பெரும் தாக்கத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# செல்வாக்கை இழந்த பிரதமர்



## பதவிக்காலம் வரை நீடிப்பாரா?

ஏற்படுத்தியது. தேர்தலில் ஏற்பட்ட தோல்வி, தனது அரசுக்கு நிரந்தரமான களங்கத்தை ஏற்படுத்திவிடக்கூடாதென்பதற்காக மந்திரிசபை மாற்றத்தில் இறங்கினார் ஜான் மேஜர்.

தேர்தல் தோல்விக்குப் பொருளாதாரப் பின்னடைவுதான் காரணம் என்றும், பொருளாதாரச் சரிவுக்கு நிதியமைச்சர் நார்மன் லமோன்ட் தான் காரணம் என்றும் காரணம் கற்பித்து நார்மனின் பதவியைப் பறித்தார்.

உண்மையில் நைஜல் லாசன் நிதியமைச்சராக இருந்தகாலத்திலேயே பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. அவரைத் தொடர்ந்து நிதியமைச்சர் பொறுப்பினையேற்ற நார்மன் லமோன்ட் வட்டி விகிதத்தைக் குறைத்து, பணவீக்கத்தையும் குறைத்துக்காட்டினார். ஆனால் 'பழி ஓரிடம்-பாவம் ஓரிடம்' என்பதைப்போல தேர்தல் தோல்விக்கு அவர் 'பலிக்கடா' ஆக்கப்பட்டார். லமோன்டின் பதவி பறிக்கப்பட்ட பின்னர் அவர் வேறு பொறுப்புகளை ஏற்க மனமின்றி கசப்புணர்வுடன் வெளியேறினார்.

புதிய நிதியமைச்சராக கென்னத் கிளார்க் பதவியேற்றார். அமைச்சரவையில் வேறுசில புதுமுகங்களும் நுழைக்கப்பட்டன. ஆயினும் பெரும்பாலும் பழைய முகங்கள் புதிய பொறுப்புகளை வகிப்பதால் இது 'புதிய பாட்டிலில் பழையகள்' போன்றதே என்பது அரசியல் அவதானிகள் அறிந்த விஷயம். ஒரு சில அமைச்சர்களையோ அவர்களுடைய இலாகா பொறுப்புகளையோ மாற்றிவிடுவதால் அரசின் மதிப்பு உயர்ந்துவிடுமா என்ன?

நாட்டில் இப்பொழுது பொதுத் தேர்தல் நடந்தால் ஆளும் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியுமா என்பது கேள்விக்குறியே. பிரிட்டனில் வலதுசாரி கன்சர்வேடிவ் கட்சிக்கும் இடதுசாரி தொழிற்கட்சிக்குமிடையே நிற்கும் லிபரல் ஜனநாயகக் கட்சி கடந்த சில மாதங்களாக வலுப்பெற்று வருகிறது. இந்த சூழ்நிலையில் தொழிற்கட்சியும் லிபரல் ஜனநாயகக் கட்சியும் கூட்டு சேர்ந்தால் ஆளும் கட்சிக்குத் தோல்வி ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இதுவரை இவ்விரு கட்சிகளும் கூட்டணி சேரும் அறிகுறிகளும் இல்லை.

மேஜரின் பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் ஈராண்டுகள் உள்ளபோதிலும், கென்னத் கிளார்க் பேசிய ஒரு கூட்டத்தில் தனக்குப் பிரதமராகப் பதவியேற்க ஆசையுண்டு என்று கூறினார். அச்சமயம் ஜான் மேஜர் தாம் பிரதமர் பதவியை விடப்போவதில்லை என்று திட்டவட்டமாகக் கூறினார். "I am fit, I am well, I am here, I am staying" (இந்தப் பதவியில் நீடிக்க எனக்குத் தகுதியுண்டு, நான் நன்றாகத்தான் இருக்கிறேன், இதோ இங்கு உங்கள் முன் நிற்கிறேன், இதே போல நீடித்திருப்பேன்) என்று கூறி தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியிருந்தார்.

**எஸ் எஸ் சுவாமி**

# எச்சரிக்கையும் மீறி.....


ஹெசில்ரைன்

மாரடைப்புக்குள்ளான கைத்தொழில் அமைச்சர் மைக்கல் ஹெசில்ரைன் அவரது வைத்தியர்களினது எச்சரிக்கையும் மீறி பாராளுமன்றம் சென்று தனது வாக்கை ஜான் மேயருக்கு ஆதரவாக அளித்தார்.

ஒரு மாதத்துக்கு முன்னதாக வெனிஸில் விடுமுறையிலிருந்தபோது கடுமையான மாரடைப்புக்குள்ளான ஹெசில்ரைன் திருப்தியான முறையில் தேறிவந்தாலும் வாக்களிப்பில் அவர் கலந்துகொள்வது இரண்டாவது தாக்குதல் ஒன்றை சிலசமயங்களில் தூண்டலாமென அவர் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

ஜான் மேயரின் அமைச்சரவையில் அதி அநுபவம் வாய்ந்த ஓர் அமைச்சரான இவர், அண்மைக்காலத்தில் மிகுந்த வேலைப் பழுவைக் கொண்டிருந்ததோடு, சர்ச்சைக்குரியதாகவிருக்கும் 'பொலிபெக்' வர்த்தக சாம்ராஜ்ய பெருச்சாளி அசில் நடிர் விவகாரம் தொடர்பாகவும் மன பாதிப்புக்குள்ளாகியிருந்தார். கன்சர்வேட்டிவ் கட்சிக்கு அசில் நடிரின் 4 லட்சத்து 40 ஆயிரம் ஸ்ரேர்லிங் பவுண் நன்கொடை தொடர்பான சமாச்சாரம் தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருக்க, 1992 தேர்தலுக்கு முன்னதாக சவூதி அரேபியாவிலிருந்து 7 மில்லியன் பவுண் பணவுதவி கன்சர்வேட்டிவ் கட்சிக்கு வழங்கப்பட்டதாக புதியதொரு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டது. தேர்தலுக்கு முன்னதாக சவூதி அரச குடும்பத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரை இது தொடர்பாக சந்தித்ததாக மைக்கல் ஹெசில்ரைனையே இதிலும் தொழிற் கட்சியினர் சம்பந்தப்படுத்தினர்.

அசில் நடிர் விவகாரத்தில் அரசுக்கு மேலும் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக அதனோடு சம்பந்தப்பட்ட மற்றொருவரான வட அயர்லாந்து பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் மேற்ஸ் ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமா கூட 'பலிக்கடா திட்டமே' என்று அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

www.tamilarangam.net



# முடிவின் தொடக்கம்!

தமிழ்நாட்டு முதல்வரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளருமான ஜெயலலிதா ஜூலை 18 ஆம் தேதி காலை திடீரென்று யாருக்கும் சொல்லாமல் சென்னை மெரினா கடற்கரைக்குச் சென்று எம்.ஜி.ஆர். சமாதியில் அஞ்சலி செலுத்திவிட்டு அதன் அருகே ஒரு நாற்காலியைப் போட்டுக்கொண்டு உண்ணாவிரதம் ஆரம்பித்தார். அதற்கு அவர் சொன்ன காரணம், காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடக மாநில அரசை மத்திய அரசு நிர்ப்பந்திக்கவேண்டும் என்பதே. உண்மையில் ஜெயலலிதாவின் எண்ணம் என்ன? காவிரி தமிழ்நாட்டுக்கு எப்படியாவது வர வேண்டும் என்பதுதானா? இல்லை; இல்லவே இல்லை. உண்மையைச் சொல்லப்போனால் அவர் தனக்காகவேதான் உண்ணாவிரதமிருந்தார். ஆனால், தண்ணீருக்கு என்று சொல்கிறார் இந்த பாதிரதி- மன்னிக்கவும் பாகீரதி!

காவிரியில் தண்ணீர் வந்திருந்தால், அல்லது போன வருடம் போல இந்த வருடமும் போதிய அளவு மழை பெய்திருந்தால் ஜெயலலிதா மிகவும் வருத்தப்பட்டிருப்பார். தீரும் நோய் இருந்தால்தான் வைத்தியனுக்குப் பிழைப்பு; தீராத பிரச்னை இருந்தால்தான் அரசியல்வாதிக்குப் பிழைப்பு. மழையாகப் பொழிந்து மக்களுக்கு உதவாத இயற்கை ஜெயலலிதாவுக்கு இப்போது உதவுகிறது.

உண்ணாவிரதத்துக்கு முதல்நாள்வரை ஜெயலலிதா "சாப்பிடுகிறார்; சாப்பிடுகிறார்" என்பதே பத்திரிகைச் செய்தியாக இருந்தது. அதாவது, லஞ்சம் வாங்குகிறார் என்பது. பின்னர், அவரது உண்ணாவிரதம் பத்திரிகைகளின் தீனி. எங்கு பார்த்தாலும் மக்கள் பேச்சு அதுபற்றி ஆகியது. இதனால் ஜெ திட்டமிட்ட ஆதாயங்கள்:

1. இனி சிறிது காலத்துக்கு லஞ்சம் பற்றிய பேச்சு இராது. அதாவது, சாப்பிட்டதையெல்லாம் சாப்பிடாமல்விட்டு சரிப்படுத்த நினைந்தார்.

2. மத்திய அரசுடன் உணர்ச்சிபூர்வமான நேரடி மோதல். பேச்சுவார்த்தைகளுக்கு இத்தனை விளம்பரம் கிடைக்காது.

3. ஒரே நேரத்தில் அண்டை மாநிலத்துடனும் மத்திய அரசுடனும் மோதல். இரு இடங்களிலும் காங்கிரசே ஆட்சி புரிவதால் காங்கிரசை மக்கள் விமர்சிக்கவும், அடுத்த தேர்தலில் அதை ஒழிக்கவும் வழி.

4.நல்ல நாள்களிலேயே வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேசாதவர் நரசிம்மராவ். இன்று அவர்மீது ஊழல் குற்றச்சாட்டு. நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது. முடிவு எடுக்க இயலாத ராவைக் குறைகூறிப் பதவி விலகினால், மாநில நலம் காக்க உண்ணாவிரதமிருந்த வீரத்தாய் என்ற பட்டம் கிடைக்கும். அடுத்த தேர்தலில் போதிய வாக்குகளும் நிச்சயம்.

5. லஞ்சத்துக்கோ, வேறு எதற்குமோ பயந்து ஓடாமல் மத்திய அரசை எதிர்த்த துணிவு தேர்தல் பிரசாரத்தில் பெரிதும் பயன்படும்.

6. எடுத்துக்கொள்ளப்பட்டது பொதுக் கோரிக்கை என்பதால் எதிர்க்கட்சிகள் அல்லது எதிரிக் கட்சிகள்; முன்னாள் நண்பன், இந்நாள் பகைவனாகிய காங்கிரஸ் கூட விமர்சிக்க முடியாது.

7. எதைச் செய்தாலும் அழுது அரற்றி, அதையே நன்கு விளம்பரப்படுத்தினால் இங்கு அது அரசியலில் வெற்றிதேடித் தரும். (முன்னாள் நடிகையின் இந்த நடிப்புக்கு டைரக்ஷன் குடும்ப நண்பர் எம். நடராஜன் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையாக இருக்கலாம்)

8. தி.மு.க. பல்வேறு பிரச்னைகளால் திசை திருப்பப்பட்டிருக்கிறது. உடனே பிளவுபடாதென்றாலும், அதில் சில புதிய கோஷ்டிகள் உருவாகின்றன. அவற்றாலும் ஜெ ஆதாயம் பெறலாம்.



தன்னுடைய உண்ணாவிரதத்தை 'பிரம்மாஸ்திரம்' என்று சொல்லிக்கொண்டதால், அது கடைசி ஆயுதப் பிரயோகம்; வெற்றி நிச்சயம் என்பதனையும் ஜெ உணர்ந்திருந்தார்.

எல்லாம்போகட்டும், பிரதமர் நரசிம்மராவ் ஜெ.க்குமேல் ஒருபடிபோய், சென்னை வந்து மெரினா கடற்கரையில் அவரைப் பார்த்து ஒரு 'ஸரண்ட்' அடித்திருந்தாலும் ஜெ மசிந்திருக்கமாட்டார். உடல்நிலை மோசமாகிறது என்ற வதந்தி பெருகி, போக்குவரத்து நின்று, கட்சிக்காரர்களின் ஆரவாரக் கூச்சலுடன் மக்களின் அநுதாபமும் சேர்ந்து திரண்டதும் ஜெ செயல்பட்டிருப்பார். எப்படி?

காங்கிரஸ்காரர்கள் கடல் நீரைக் குடிநீராக்கவேண்டும் என்று சொன்னதையடுத்து வங்காள விரிகுடாக் கரையில் காவிரிக்காக உண்ணாவிரதமிருந்த இந்த வீராங்கனை மத்திய அரசை எதிர்த்து ஓர் அறிக்கை விடுத்து, கடற்கரையில் மந்திரி சபைக் கூட்டம் நடத்தி, முடிந்தால் ஸ்ட்ரெச்சரில் படுத்த படுக்கையாகவே நேரே ராஜ்பவன் சென்று தன் மந்திரிசபை ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்து, சட்டசபையைக் கலைக்கச் சிபார்சு செய்திருப்பார். மற்ற சமயம் என்றால் பழுத்த அரசியல்வாதியான சென்னா ரெட்டி மாற்று அரசாங்கம் அமைக்கத் திட்டமிடுவார். உண்ணாவிரதம் காங்கிரசின் கொல்லைப்புற வழியையும் அடைக்கும். எனவே, உடனடி சட்டசபைக் கலைப்பு, குடியரசுத் தலைவர் ஆட்சி, மறு தேர்தல், அதில் ஜெயலலிதாவுக்கு அதிகமான வெற்றிவாய்ப்புகள். நடுவே, நீதிமன்ற வழக்குகள் காலாவதியாகிவிடலாம்.

முதல்முறை பதவியேற்றதும் எம்.ஜி.ஆர். சமாதிக்கு வந்த ஜெ. எம்.ஜி.ஆர். சமாதியிலிருந்து ராஜ்பவன் சென்றால் மறுமுறை பதவியேற்க எம்.ஜி.ஆர். சமாதிக்கு வரலாம். ஒருவேளை அங்கேயே அவர் பதவிப் பிரமாணமும் ஏற்கலாம். அதேபோல, ராஜ்கட்டில் காந்தி சமாதிக்கு பதவிப் பிரமாணம் செய்தபிறகு செல்லும் வாய்ப்பு நரசிம்மராவுக்குக் கிடைக்காமல் போகலாம். சும்மா சொல்லக்கூடாது, ஜெயலலிதா மிக நன்றாகவே காய்களை நகர்த்துகிறார். எப்படியோ சமாதிகள் முடிவுகள் அல்ல; ஆட்சிகளின் ஆரம்பமே. ஜெயலலிதா அதை நிரூபிக்கக்கூடும். வாழ்க சமாதிகள்!

ஜெ தன் உண்ணாவிரதத்தை நான்காம் நாள் மத்திய பாசன அமைச்சர் வி.சி.சுக்லா முன்னிலையில் முடித்தார். இதனால், காவிரித் தண்ணீர் தமிழ்நாட்டுக்குத் தர ஏற்பாடுகள் நடந்துள்ளன. ஆனாலும் ஜெ. இன் 11 அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நரசிம்மராவ்மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து, ராவை ஆதரிக்க முன்வரவில்லை. நரசிம்மராவை அவர் ஆதரிக்காததினால் ராவ் பதவி இழந்தால் ஜெ பதவி தப்பும். ராவ் வென்றால் ஏதாவது காரணம் காட்டி ஜெ அரசு கலைக்கப்படலாம். அப்போதும் அவர் அழுது, அரற்றி, மீண்டும் ஒரு நாடகம் நடத்த ஏற்கனவே ஒத்திகை பார்த்துக்கொண்டுவிட்டார். எனவே நஷ்டப்படமாட்டார். ஜனநாயகத்தில் நஷ்டப்படுபவர்கள் எப்போதும் மக்களே!




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தி.மு.க. உடைகிறதா?

மதுரைக்கு கூடல் என்று ஒரு பெயர் உண்டு. ஆனால் அரசியலைப் பொறுத்தவரை கண்ணகி காலம் முதல் கருணாநிதி- ஜெயலலிதா காலம் வரை 'கூடல்' ஒரு பிரிதல் களமே. கண்ணகி கோவலனைப் பிரிந்தார்; கோப்பெருந்தேவி நெடுஞ்செழியனைப் பிரிந்தார்; 1972 இல் எம்.ஜி.ஆர். மாநாடு நடாத்தி கருணாநிதியை விட்டுப் பிரிந்தார். ஜெயலலிதா 1992 ஆம் வருட மதுரை மாநாட்டில் காங்கிரசை விட்டுப் பிரிவதற்கான முதல் பகைவிதைகளைத் தூவினார்; பின்னர் பிரிந்தார். தி.மு.க.வைப் பொறுத்தவரை 22 வருடங்களுக்குப்பிறகு சரித்திரம் திரும்புகிறது. ஆறு மாதங்களுக்கு முன்பு தி.மு.க.வின் இரு அணிகள் தலைவர் கருணாநிதி கண்ணெதிரேயே மோதிக்கொண்டன. அண்மையிலும் அப்படியே. முன்பெல்லாம் பாரம்பரியம் மிக்க காங்கிரஸ் கட்சியின் ஊழியர் கூட்டங்களில்தான் வேட்டி சட்டைகள் கிழியும். அவர்கள் கதர் உடுத்துவதுகூட கிழிப்பது எளிது என்பதனால்தானோ? தி.மு.க.காரர்கள் கதர் உடுத்துவதில்லை. ஆனால், கதர் அல்லாத துணிகளையும் எளிதில் கிழித்தெறியும் வன்மை அவர்களுக்கு வாய்த்திருக்கிறது. அந்த அளவுக்கு துணிமணி கிழிக்கும் அடிதடிகள் கடந்த ஆறு மாதங்களில் மதுரை மாநகரில் தி.மு.க.வினரிடையே நடந்துள்ளன. ஒவ்வொரு முறையும் புகைச்சலுக்கு ஏதாவதொரு மேலோட்டமான காரணம் சொல்லப்படுகிறது. உண்மையான காரணம் அந்தக் கட்சியின் தலைவர் திரு.மு.கருணாநிதி, தி.மு.க.வை தி.மு.கு.க. (திரு மு.கருணாநிதி குடும்பக் கழகம் ) என்று நடத்தி வருகிறார் என்பதே. அப்படியில்லாமல், அது அண்ணா விட்டுச் சென்ற திராவிட முன்னேற்றக் கழகமாகவே வளர்வதைத் தான் பலர் விரும்புகிறார்கள்.

கருணாநிதி 1989 இல் மீண்டும் பதவிக்கு வந்த பிறகு அவரது குடும்பம் கட்சியில் அதிக அளவு ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது என்பது வெளிப்படை. இரு மனைவியரின் பல்வேறு விதமான வற்புறுத்தல்களால் கட்சியின் சில முக்கிய தலைவர்களும், ஒன்று; இந்தத் தலைவி, அல்லது; அந்தத் தலைவர் என்று சாய ஆரம்பித்தார்கள். முதல் மந்திரி பதவி போனதும் மனைவியரின் ஆதிக்கம் சற்றே குறைந்தது. ஆயினும் கருணாநிதி தன் மகன் ஸ்டாலினை தனக்குப் பின்னர் கட்சியின் தலைவராகக் கொண்டுவர விரும்புகிறார்; மறைமுகமாக அதற்குப் பாடுபடுகிறார் என்பது தொண்டர்களுக்கு இப்போது வருத்தம் தருகிற விஷயம்.



நேருவுக்குப் பிறகு யார்? என்ற கேள்வி நேரு காலத்திலேயே எழுந்தது. அதற்குக் காரணம் அவர் சேர்த்துவைத்திருந்த சொத்து அல்ல. ஓர் உலகத் தலைவராக, பிரதமராக இருந்த அவரைப்போல அவருக்குப் பிறகு வரக்கூடியவர்கள் செயல்படுவார்களா? என்று முப்பது வருடங்களுக்கு முன்பு இந்திய அரசியலில் அக் கேள்வி எழுந்தது. ஆனால், கருணாநிதி விடயம் அப்படியல்ல. அவருக்குப் பிறகு யார்? என்ற கேள்வி அவர் ஆட்சியில் இல்லாத பொழுது எழுந்துள்ளது. காரணம், தி.மு.க.வுக்கு அவ்வளவு சொத்து இருக்கிறது. அந்தக் கட்சியின் அறக்கட்டளை உறுப்பினர்களாக இருப்பவர்கள் தேன் கூட்டில் கை வைக்கமுடியும். அப்படித் தேன்கூட்டில் கை வைப்பவர்கள் கருணாநிதியின் குடும்பத்தினர் மட்டுந்தானா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

அறக்கட்டளையில் தான் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படவில்லையே என்று நெடுநாள் தி.மு.க.வில் இருந்து; மூன்று வருடங்களுக்குக் குறைவாக எம்.ஜி.ஆர். ஆட்சியில் அமைச்சராகவிருந்து; மீண்டும் தி.மு.க.வுக்குத் திரும்பி துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட நாஞ்சில் கி. மனோகரன் ஏங்கினார். கருணாநிதியிடம் நேரடியாகக் கேட்டுப் பார்த்தார். ஆனால் அவரது வேண்டுகோளை கருணாநிதி அலட்சியப்படுத்தினார். பொங்கி எழுந்த நாஞ்சில் மனோகரன் 'கருவின் குற்றம்' என்ற கவிதையை தி.மு.க. ஆதரவு நாளேடாகிய 'தினகரனி'ல் எழுதினார். அதன் விளைவு, துணைச்செயலாளர் பதவி மட்டுமன்றி, அடிப்படை உறுப்பினர் தகுதியிலிருந்தும் மனோகரன் தூக்கி எறியப்பட்டார். 'ஐயையோ, நான் அப்படியெல்லாம் சொல்லவில்லை; என்னை மன்னித்துவிடுங்கள்; யார் யாரோ என்னை வஞ்சித்துவிட்டார்கள்; மீண்டும் சேர்த்துக்கொள்ளுங்கள்' என்று பொதுவிலும் நேரிலும் கெஞ்சினார் மனோகரன். அதற்கென்ன, கழகப் பொதுக்குழு செயற்குழு கூடட்டும், முடிவு செய்துவிடலாம் என்றார் கருணாநிதி. குழுக்கள் கூடின; மனோகரனைத் தூண்டியதாகச் சொல்லப்பட்ட மாவட்டச் செயலாளர்கள், மாவீரன் கோபால்சாமி உள்பட எல்லோரும் மன்னிப்புக் கடிதங்கள் கொடுத்தார்கள். ஆனால் மனோகரனைச் சேர்க்கவேண்டாம் என்று குழுக்கள் முடிவுசெய்து அவர் தனிமைப்படுத்தப்பட்டார்.

முதலில் விலக்கப்பட்டபொழுதே மனோகரன் போர்க்கொடி உயர்த்தியிருந்தால் தி.மு.க.வின் அதிருப்தி அணியைத் திருப்திப்படுத்தியிருக்கலாம். ஆனால், கெஞ்சிக் கெஞ்சி, மீண்டும் தி.மு.க.வில் நுழைய முனைந்து வழி அடைக்கப்பட்டுவிட்டதால் இப்பொழுது தி.மு.க.தலைமையை தூற்றுகிறார். அரசியலில் அவர் சரியான சந்தர்ப்பவாதி என்பது எல்லாக் கட்சிகளுக்குமே புரியும். அதனால் யாரும் இவரை ஆதரிக்கவில்லை. கருணாநிதி சிறுமைப்படுத்தியபோதும், அது சரிதான் என்றே பலரும் நினைத்தனர். தி.மு.க. பிளவுபட்டபோது, இனி எம்.ஜி.ஆர். முதல்வர் என்ற நினைப்பில் அ.இ.அ.தி.மு.க.வுக்குத் தாவிய மனோகரன், 1980 இல் எம்.ஜி.ஆர். அரசு கலைக்கப்பட்டதும் இனி எம்.ஜி.ஆருக்கு வாய்ப்பு இல்லை என்று தவறாகக் கணித்த காரணத்தினால்தான் தி.மு.க.வுக்குத் திரும்பினார். அது, கருணாநிதிக்கு மிக நன்றாகவே புரியும். அதனால்தான் அவர் மனோ கரனை ஒருபொருட்டாக மதிக்கவில்லை.

மனோகரன் என்று இல்லை; இன்று தி.மு.க.விலிருந்து வை. கோபால்சாமியோ, அண்ணா தி.மு.க.விலிருந்து வேறு யாருமோ (அங்கே அப்படி எவரும் இல்லை!) பிரிந்தாலும் கருணாநிதிக்கோ, ஜெயலலிதாவுக்கோ நஷ்டம் எதுவுமில்லை. இரு தலைவர்கள் வசமும் சொந்தத்திலும், கட்சித் தலைவர்கள் என்ற முறையிலும் கொள்ளை கொள்ளையாகப் பணம் இருக்கிறது. அனுசரித்துப் போகிறவர்கள் அதில் கொஞ்சத்தை சோளப் பொரிகளாகப் பெற்றுக்கொள்ளலாம். பிரிந்துபோகிறவர்களுக்கு எதுவும் கிடைக்காது, இருந்த இடத்திலும் நுழையுமிடத்திலும்! ஆட்சி இல்லாவிட்டாலும் கட்சி கையில் இருந்தால் லாபம், கட்சிப் பொறுப்பு இருந்தால் பணம். இந்த விஷயத்தில் திராவிடக் கட்சிகள் பணக்காரக் கட்சிகளே. தொண்டர்கள் தான் பாவம், ஏழைகள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னும் சில அரங்கேற்றங்கள்

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அவர்களின் குழந்தைகளாகிய எங்கள் மூவரிலும் கோபம். பெரியண்ணா வீட்டுக்கு வருவது குறைவு. வேலைசெய்யுமிடம் எங்கள் வீட்டுக்கு அதிகதூரத் தில் இல்லை என்றாலும் அவன் எங்களுடன் இருக்காமல் தன் சினேகிதர்களுடன் வீடு எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

எனக்கு இரவெல்லாம் சரியாகத் தூக்கமில்லை. ஆனாலும் அந்த ரெயினில் கால் வைத்ததும் வழக்கம்போல் ஒரு புத்தகத்தைக் கையில் எடுக்கிறேன். 'ஏதோ ஒரு' புத்தகமில்லை. ஒரு கொஞ்ச நாளாக Freudதியறிகளில் ஒரு விருப்பம். எனது சிநேகிதி சைகோலஜி செய்வதும் அவள் விழுந்து விழுந்து Freud ஐப் பற்றிப் படிப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். ரெயின் முழுவதும் மனித முகங்கள். ஒருத்தரை ஒருத்தருக்குத் தெரியாது. ஒவ்வொரு தரமும், அல்லது எனக்கு மனதில் சோகமான நேரங்களில் என்றாலும் என்னை இந்த மனிதர்களுடன் பிணைத்து ஏதோ ஓர் உறவைத் தேட யோசிக்கிறேன்.

நாங்கள் எல்லாம் 'வெற்று மனிதர்களாய்' அந்தரெயினில் குவிந்து கிடப்பது போன்ற பிரமை. ஒவ்வொருத்தரும் எங்கள் மனதுக்குள் ஒவ்வோர் உலகத்தில் உறவாடிக்கொண்டிருப்போம். ஒரே ஒரு உறவு, இவர்களுடன் நான் ஒவ்வொரு நாளும் காலை 7.45 ரெயின் எடுத்து 8.30 மணிக்கு யூஸ்ரன் ஸ்ரேசனுக்குப் போகிறேன். அதன் பின் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு திசைகளில் பிரிந்து போகிறோம். பின்னேரங்களில் 6.05 ரெயினுக்கு நான் ஓடிவரும்போது பெரும்பாலான மனிதர்களைமீண்டும் பார்க்கிறேன். ஒரு கூட்டத்துடன் என்னைப் பிணைத்துக் கொள்கிறேன்.

ஒருதரம் யூஸ்ரன் ஸ்ரேசனில் ஐ.ஆர்.ஏ. காரர் குண்டு வைத்திருப்பார்கள் என்ற சந்தேகத்தில் எங்களை ரெயினால் இறக்கிவிட்டபோது ஒரு அரை மணித்தியாலம் ஸ்ரேசனுக்குவெளியில் நாங்கள் காத்திருந்தோம். ஒருத்தருடன் ஒருத்தர் பேசிக்கொள்ளவில்லை. ஒரு நாடக மேடையின் ஊமை நாடகங்களா?

ரெயின் ஓடத் தொடங்கியதும் நான் Freud இன் Psychoanalysis இல் கண்களைப் பதிக்கிறேன். மனம் மட்டும் வீட்டுக்கு ஓடிப்போய்விட்டது. புத்தகத்தில் கவனம் செல்லவில்லை. முன்னிருக்கும் வெற்று மனிதர்களில் முகம் பதிக்காமல் கண்களை மூடிக் கொண்டால் அம்மாவின் கலங்கிய கண்களும் அப்பாவின் தொங்கிய முகமும் தெரிகிறது.



அக்கா ஒன்றிரண்டு நாட்களாக வீட்டுக்கு வரவில்லை. அண்ணா கிழமைக் கடைசியில் எப்போதோ எட்டிப் பார்ப்பான். என்னை மட்டும் ஹாஸ்டலில் இருந்து படிக்காமல் வீட்லிருந்து போகச்சொல்லி விட்டார்கள்.

ஒவ்வொரு நாளும் இரண்டு மணித்தியாலத்துக்கு மேல் பிரயாணத்தில் போகிறது. அந்த நேரத்தைப் படிப்பில் செலவிடலாமென்றால் அம்மாவுக்கு அது பிடிக்கவில்லை. 'படிக்கவேண்டிய பிள்ளை எப்போதும் வீட்டிலிருந்து படிக்கும்தானே'என்று சொல்லி விட்டாள்.

அம்மாவுக்கு நானும் அக்கா மாதிரிப் போய்விடுவேனோ என்ற பயம். அக்காவை அசல் தமிழ்ப் பெட்டைகள் போலத் தான் அம்மா வளர்த்தாவாம். அவள் இப்படிச் செய்யலாமோ என்று அம்மா மூக்கைச் சீறிக் கொள்கிறாள்.

'உங்களின் நல்ல வாழ்க்கைக்காக நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டோம்.' அம்மா இப்படித் தான் நேற்று என்னைப் பேசிக்கொண்டிருந்தாள். வீட்டுக்குப் போகவே சிலவேளை மனம் எரிச்சல் படுகிறது.

கொஞ்ச நாட்களாக அப்பா சரியாகச் சாப்பிடவில்லை. அது ஒரு விதத்தில் அவர் உடம்புக்குச்சரிதானே என்று சொல்லநினைக்கிறேன். அப்பாவுக்கு நல்ல உடம்பு. High Blood pressure என்று டாக்டர் சொல்லிவிட்டாராம். அதனால் அப்பா உடம்பு மெலிந்தால் நல்லதென்று நினைக்கிறேன். ஆனால் அப்பா சாப்பிடாமலிருப்பது டாக்டர் Hypertension என்று சொல்லி விட்டாரென்றல்ல. அவருக்கும் அம்மாவுக்கும் பிடிக்காத ஒருத்தனை அக்கா கல்யாணம் செய்யப் போகிறாளாம். அம்மா அடிக்கடி



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

முக்கைச் சீறி அழுதபடி எங்களைத் திட்டிக் கொண்டிருக்கிறாள். அப்பா தன் அறைக்குள் அஞ்ஞாத வாசம் செய்துகொண்டு 'எங்களைச் சரியாக வளர்க்கவில்லை' என்று அம்மாவைத் திட்டிக்கொண்டிருக்கிறார்.

அப்பாவைப் பார்க்க அவரின் சிநேகிதர்கள், அதாவது எங்கள் குடும்ப நண்பர்கள் வந்தார்கள். லண்டனில் பிள்ளைகளை வளர்க்கும் கஷ்டங்களைப்பற்றி ஒரு குட்டி மாநாடு நடத்தினார்கள். "எங்கள் குழந்தைகளுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டோம். இந்தக் குழந்தைகள் தங்களுக்கு வயது வந்ததும் எங்கள் கலாச்சாரத்தைப் பண்பாட்டை மறந்து தங்கள் விருப்பப்படி ஆட வெளிக்கிடுதுகள்." மஞ்சுளா மாமி இப்படித்தான் போன கிழமையிலிருந்து சத்தம் போட்டா. மஞ்சுளா மாமியின் ஒரு மகள் கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிவிட்டாளாம். அதற்கான காரணத்தை மஞ்சுளா மாமி போனபின் அம்மாவும் சத்தியா மாமியும் குசுகுசுத்துக் கொண்டார்கள். என்னைக் கண்டதும் பேச்சை நிறுத்திக் கொண்டார்கள். 'இதெல்லாவற்றையும்' தெரிந்து கொள்ளும் வயது எனக்கில்லையாம்.




எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. அதை நினைத்ததும் என் முகத்தில் அதன் பிரதிபலிப்புத் தெரிந்திருக்கவேண்டும். நினைவிலிருந்துகண்களைத் திறந்ததும் முன்னாலிருந்த பிரயாணி என்னை உற்றுப்பார்த்தார்.

இந்தப் பிரயாணிக்கும் அம்மாவுக்கும் என்ன வித்தியாசம்? என்னைப் பற்றி இவர்களுக்கு என்ன தெரியும்? எனக்கு இருபது வயது. லண்டன் யூனிவேர் சிற்றியில் Biology செய்கிறேன். இந்த வருட projects மிக கஷ்டமானது. Sexual Practices and HIV Injection என்ற கட்டுரை ஒன்றை போன வாரம்தான் எழுதி முடித்தேன். அந்தக் கட்டுரை எழுத நான் எவ்வளவு தூரம் ஆராய்ச்சிசெய்ய வேண்டியிருந்தது; என்னென்ன அறிந்துகொண்டேன் என்று என் தாய்க்குத் தெரியாது.

அவளுக்கு நான் அவளது செல்ல மகள். மூன்றாவது சின்ன மகள். அம்மா பாவம். நிறையச் சீதனம் கொடுத்து மிகப் படித்த அப்பாவைக் கல்யாணம் செய்திருப்பாள். லண்டனுக்கு வந்து நாங்கள் எல்லாம் பாடசாலைக்குப் போகத் தொடங்க வீட்டிலிருக்கப் பயந்து 'செயின்ஸ்பரி'யில் வேலை எடுத்துக் கொண்டாளாம்.

கவுண்டரில் ரில் அடிக்கத் தெரிந்து கொண்ட அம்மா, தன் வளரும் குழந்தைகளின் வாழ்க்கையின் மாற்றத்தை, உடல் வளர்ச்சியை எடைபோடுவதுடன் மட்டும்தானா கண்டுகொண்டாள்?

அடுத்த ஸ்ரேசனில் எனக்கு முன்னாலிருந்த பிரயாணி இறங்கிவிட இன்னொருத்தர் வந்து உட்கார்ந்து கொள்கிறார். இவ்வளவு தூரமும் பச்சைப் பசேலென்று தெரிந்த இடங்களை அடிக்கடி சந்தித்த கண்கள் இனி எதிர்வரும் லண்டன் கட்டிடங்களைச் சந்திக்கவேண்டும்.

நான் திரும்பவும் கண்களை மூடிக்கொள்கிறேன். அண்ணா வந்து சேர்கிறான் என் கண்களுக்குள். அண்ணா ராஜேந்திரன் வாட்டசாட்டமானவன். எனக்கும் அவனுக்கும் எட்டு வயது வித்தியாசம். அவனைப்பற்றிய முதல் நினைவு எனக்கு மூன்று வயதாக இருக்கும்போது என்று நினைக்கிறேன். நாங்கள் அப்போதுதான் லண்டனுக்கு வந்திருந்தோமென்று ஞாபகம். வாங்கிய வீட்டுக்குப் பின்னால் ஒரு பெரிய ஊஞ்சல் இருந்தது. அண்ணா என்னை ஊஞ்சலில் ஏற்றி ஆட்டிக்கொண்டிருந்தான். நான் தவறி விழுந்து அடிபட்டபோது ஆவென்று அலற, அப்பா அலறிப்புடைத்துக்கொண்டு ஓடிவந்தார். அப்பா அண்ணாவைத் திட்டினார்.

,அண்ணாவுக்குச் சரியான அடி. அப்பா மிகவும் பொல்லாதவர். அடியாத மாடு படிக்குமா? என்று அண்ணாவுக்கு அடிப்பார். "மாடு மாதிரி வளர்ந்திருக்கிறாய்; ஒரு சின்ன பெண் பிள்ளையைப் பார்க்கத் தெரியவில்லை?" அப்பா அண்ணாவை அடித்ததை என்னால் மறக்க முடியாது. அப்போது அண்ணாவுக்குப் பதினொரு வயது. அம்மா அளவுக்கு வளர்ந்திருந்தான். அம்மாவின் உயரம் ஐந்தடி.

அப்பா அண்ணாவை அடிக்க, நாங்கள் ஓலமிட, அம்மா இடையில் ஓடிவந்து விழ, பக்கத்து வீட்டுக்கார வெள்ளைக்காரன் வேலியால் எட்டிப் பார்க்க... .. அந்த நாடகம் என் மனதை விட்டு அகலவில்லை. "இந்தப் பேயன் என்னென்று பெண்பிள்ளைகளைப் பார்ப்பான் . அவளவை யாரோடும் ஓடினாலும் இவன் ஆலென்று நிற்கப் போறான்."

அப்பா இப்படி எத்தனையோ தரம் அண்ணாவைப் பேசியிருக்கிறார். தகப்பன், மகன் உறவை Freud தியறி மூலம் எனது சிநேகிதி றேச்சல் போன கிழமை விளங்கப்படுத்தத் தொடங்கியபோது அண்ணாவையும் அப்பாவையும் நினைத்துக்கொண்டேன்.

அண்ணா அப்பா சொன்னதுபோல் அவனின் தங்கைகள் யாரோடாவது ஓடமுதல் தானே வீட்டை விட்டுப் போய்விட்டான். யூனிவர்சிற்றியால் அண்ணா வெளிக்கிட்டு லண்டனுக்கு வெளியில் ஒரு வேலை கிடைத்த போது, எப்போது இந்தச் சந்தர்ப்பம் என்று காத்திருந்தவன்போல் தன்னோடு வேலை செய்யும் சினேகிதர்களுடன் ஒரு வீடெடுத்துக்கொண்டு போய்விட்டான். "வீட்டிலிருந்து பிரயாணம் செய்திருக்கலாம்." அப்பா உறுமினார். அண்ணா இப்போது அப்பாவை விடக் கூட வளர்ந்திருக்கிறான். அம்மா வழக்கம்போல் கண்களைத் துடைத்தாள். "சாப்பாடு எப்படியோ?" அம்மா வடையும் மீன் பொரியலும் செய்து கட்டிக் கொடுத்தாள்.

அக்கா அந்த வருடந்தான் யூனிவர்சிற்றிக்கு எடுபட்டிருந்தாள். அவள் இந்த நாடகத்தில் அதிகம் பங்கெடுக்கவில்லை. அக்காவில் அம்மாவுக்கு ஒரு பெருமை. அக்கா பார்க்க அழகாக இருப்பாள். ஒரு நல்ல தமிழ்ப்பிள்ளையாக வளர்க்க எத்தனையோ முன்னேற்பாடுகள். அந்தக்காலத்தில் லண்டனில் நடன அரங்கேற்றம் செய்தவர்களில் அக்காவும் ஒருத்தி. எங்களுக்குத்தெரிந்த மாமாவின் பெண்ணொருத்தி நடன அரங்கேற்றம் வைத்ததைவிட ஆடம்பரமாக வைக்க வேண்டுமென்று அப்பா வங்கிக் கடனும் எடுத்தார். அக்கா அரங்கேற்றம் நடந்தபோது மிகமிக அழகாக இருந்தாள். நடனத்தின் பாரம்பரியம் தெரிந்ததோ இல்லையோ பரதநாட்டிய அரங்கேற்றம் நடந்தது.

அப்பாவும் அம்மாவும் மிகப் பெருமைப் பட்டுக்கொண்டார்கள். தமிழ்ப் பண்பாட்டைத் தாங்கள் தங்கள். குழந்தைகளுக்குப் படிப்பிக்க வேண்டியஅவசியத்தை அப்பா தன் சிநேகிதர்களுடன் 'விஸ்கி' ஊற்றியபடி விளக்கினார். அப்பா இரண்டு, மூன்று கிளாஸ் விஸ்கி எடுத்துக்கொண்டதும் தமிழ்க்கலாச் சாரம் பற்றி மிக ஆவேசமாக பேசினார். சேர்ந்திருந்த மாமாக்கள் சந்தோஷத்துடன் தலை-

www.tamilarangam.net



யாட்டிக்கொண்டனர்.

அம்மா கத்தரிக்காய்க் குழம்பு வைத்து இட்லியும் வடையும் செய்ய, அப்பா எம். எஸ். சுப்புலட்சுமியின் பாடலைப் போட்டுக் கேட்டு க்கொண்டு விஸ்கிப் போத்தல்களைக் காலி செய்வார். எனக்கென்னவோ தமிழ்க் கலாச்சாரம் குழப்பமாகத்தான் தெரிந்தது. அம்மா மேல் வீட்டில் கோயில் வைக்க அப்பா Drink Bar கீழ் வீட்டில் வைத்திருக் கிறார். அக்கா யூனிவர்சிற்றி ஹாஸ்டலில் படிப்புக்காரணமாக நிற்கப்போகிறேன் என்று சொன்ன போது அம்மா தயங்கினாள். அப்பா எத்தனையோ கேள்விகள் கேட்டார். கடைசியில் அக்காதான் வென்றாள். யூனிவர்சிற்றி முடிந்து பெட்டி படுக்கைகளுடன் வீட்டுக்கு வந்த போது அக்கா தன்னுடன் ஒரு வெள்ளையனையும் அழைத்துக் கொண்டுவந்து தன் சிநேகிதன் என்று அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அறிமுகம் செய்து வைத்த போது நான் A Level சோதனைக்கு விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருந்தேன். வீட்டில் பெரிய நாடகம். பரதநாட்டியத்தைவிடப் பெரிய அரங்கேற்றம்.

ரெயின் இன்னொருதரம் நின்றது. என்னை அறியாமல் இடது பக்கத்து ஜன்னலைத் திரும்பிப் பார்த்தேன். எப்போதும்போல 'அவன்' ரெயின் நிற்பதைக்கண்டதும் பேப்பரை மடித்து வைத்துக்கொண்டு ரெயினில் ஏற வந்தான்.

அவன் ஒரு இலங்கையனாக இருக்கலாம். அல்லது இந்தியனாகவோ பாகிஸ்தானியாகவோ இருக்கலாம். என்னைவிட நாலைந்து வயது வித்தி யாசமிருக்கும் என்று நினைக்கிறேன். அவன் லண்டனில் Share & Stock இல் வேலை செய்பவன் என்று நான் நினைத்ததற்கு ஒரு காரணமுண்டு. சிலவேளைகளில் எனக்கு முன்னால் இருக்கும் இருக்கையில் அமர்ந்ததும் தன் சூட்கேசைத் திறந்து பைல்களைப் புரட்டுவான். தற்செயலாக நான் பார்க்க நேரிடும்போது அவன் பைல்கள் stock & share பற்றிய தகவல்களைக் கொண்டிருப்பதை அவதானித்தேன்.

அவன் இன்றும் எனக்கு முன்னால் உட்கார்ந்தான். நான் ஒரு Biology Student என்று அவன் தெரிந்திருப்பான் என்று நினைக்கிறேன். ஏனென்றால் ஒருநாள் ரெயினால் இறங்கியபோது எனது புத்தகங்கள் தவறி விழ அவன் பறந்துபோன சில பேப்பர்களைப் பொறுக்கித்தந்து உதவி செய்தான். நான் Viruses களையும் Bacteriaக்களையும் படித்துக்கொண்டிருப்பதை அவன் கட்டாயம் அவதானித்திருப்பான்.

அவன் முன்னால் உட்கார்ந்ததும் வழக்கம்போல் நான் நிமிர்ந்து பார்த்துவிட்டுக் குனிகிறேன். அதுதான் எங்கள் 'ஹலோ'. அதற்குமேல் ஏதும் பேசுவதற்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

அவன் பெயர் பரமசிவமாகவோ, ரஹீமாகவோ, சமரக்கொடியாகவோ இருக்கலாம். எனது பெயர் வனிதா என்பது அவனுக்குத் தெரியாமலேயே இருக்கலாம். 'Miss' மயில்வாகனம் என்று சொல்லி அலுத்துவிட்டேன். வனிதாவுடன் நிற்பது மனதுக்குச் சுகமாயிருக்கிறது.

இப்போது ரெயின் லண்டனுக்குள்ளால் போய்க்கொண்டிருக்கிறது. உடைந்த கட்டிடங்கள், உடைபடும் கட்டிடங்கள், வானளாவும் கோபுரங்கள், வாழத் தெரியாத - முடியா மனிதர்கள்; நான் Freud ஐ மூடிவைத்துவிட்டு ஜன்னலால் வெளியில் பார்க்கிறேன். வீட்டை விட்டுப்போன அக்காவைத் தேடுகிறேன். எனது அக்கா இங்கேதான் எங்கேயோ தன் வெள்ளைக்கார 'போய் பிரண்டுடன்' சீவிக்கிறாள். அக்கா கெட்டிக்காரி. எந்தச் சூழ்நிலையிலும் வாழ்ந்து கொள்வாள். அக்காவை ஏன் பெற்றோர்கள் விளங்கவில்லை?

அம்மாதான் துடிக்கிறாள். அப்பா தன் அறையில் புகுந்து படுத்திருக்க தெரிந்த மாமாக்கள் வந்து ஏதோ 'செத்த வீடு' நடந்ததுபோல் துக்கம் விசாரிக்கிறார்கள். இவர்களில் பலர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்கள். "அந்தப் பிள்ளை (அதாவது அக்கா) இப்படிச் செய்திருக்கக் கூடாது." வைத்தியநாதன் மாமா தன் ஊதிய வயிற்றைத் தடவிக்கொண்டு அம்மாவிடம் சொன்னார். இவர் ஒருகாலத்தில் தான் காதலித்த சிங்கள செக்ரெட்டரியை கைவிட்டு விட்டு மாமி சீதாலட்சுமியை சீதனத்துக்காகச் செய்துகொண்டவர் என்று அம்மாவும் மஞ்சுளா மாமியும் வடைக்கு உழுந்து அரைத்த போது அலட்டிக்கொண்டார்கள்.

**முன் பின் தெரியாதவனுடன் Concert க்குப் போகக்கூடியவளாக வா நான் தெரிகிறேன்?**

"என்னதான் இருந்தாலும் எங்கள் கலாச்சாரத்துக்கு நாங்கள் கௌரவம் கொடுக்கவேண்டும்"-இன்னொரு மாமி ஒப்பாரி வைத்துக்கொண்டார். அவள் மூன்றாம் கிளாஸ் விஸ்கி போக முதல் வாய் திறந்து நான் கண்டதில்லை. ஒரு சாதாரண சம்பாஷணைக்கு மூன்று விஸ்கி எடுப்பவள் வாழ்க்கையின் பிரச்னைகளை தீர்க்க எவ்வளவு விஸ்கி எடுப்பாள்?

அக்கா கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக அவளின் Boy Friend உடன் தொடர்பு வைத்திருக்கிறாள். அவனைத் தமிழ்க்கலாச்சாரத்துக்காக 'தியாகம்' செய்துவிட்டு முன்பின் தெரியாதஇன்னொருத்தனைத்தாலிக்கயிற்றால்பிணைத்துக்கொண்டுகோயிலுக்கும் சந்தன குங்குமத்துக்கும் அவள் மனச்சாட்சியை அழித்துக்கொள்ளவா சொல்கிறாள்? தமிழ்க்கலாச்சாரம்என்பது பொய்மையின் மறு பெயரா?

"எக்ஸ்கியூஸ் மீ"

முன்னாலிருந்தவன் முதல் தரமாக என்னைப்பார்த்துக் கதைக்கிறான். நிமிர்ந்து பார்க்கிறேன். அக்காவைப்பற்றி இவனிடம் சொல்லி அழவேண்டும் போல் இருக்கிறது.

அவன் கண்கள் அழகானவை. தலைமயிர் சுருண்டு நேர்த்தியாய் வாரப் பட்டு, முகம் செழுமையாய்ச் சவரம் செய்யப்பட்டு.... நான் அவனை அளவிடுவதை அவன் தர்மசங்கடத்துடன் தாங்கிக்கொண்டான். அவன் கையில் 'Whats on' இருந்தது. Bethovan Piano Concert இல் என் பார்வையைப் பதித்துக் கொண்டேன். அவன் என்ன சொல்ல வந்தானோ தெரியாது. நான் அவன் சொல்வதைக் கேட்பதற்குத் தயாராய் இருப்பதாகக் காட்டிக் கொண்டேன்.

"கொன்சேர்ட்டுக்குப் போக இரண்டு ரிக்கட் வாங்கினேன். தங்கச்சிக்கு வர முடியாதாம். எனக்குத்தனியாகப் போக விருப்பமில்லை....." அவன் தயங்கினான். என்னை வாழ்க்கை முழுக்கத் தெரிந்தவன் போல் அவன் பேசினான். கையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரண்டு ரிக்கட்டுகள் இருந்தன.

அவன் என்ன சொல்கிறான்? முன் பின் தெரியாத என்னைத் தன்னுடன் Bethovan Piano Concertக்கு வரச் சொல்கிறானா?

வருடக்கணக்காக அக்கா பழகிய தன் அன்பனைக் கல்யாணம் செய்துவைக்காமல் அம்மாவும் அப்பாவும் நாடகம் அரங்கேற்றுகிறார்கள். இவனுடன் நான் இசைவிழா பார்க்கப் போனால் அம்மா இட்லிக்குப் பதில் ஏதும் விஷத்தை விழுங்கிவிட மாட்டாளா?

நான் அவனைப் பார்த்தேன்.

"ரிக்கட் வீணாகிவிடும்....." அவன் மென்று விழுங்கினான்.

முன் பின் தெரியாதவனுடன் Concertக்குப் போகக்கூடியவளாகவா நான் தெரிகிறேன்? எங்களை யாரென்று இருவருக்கும் தெரியாது. இந்த ரெயினில் ஒவ்வொரு நாள் காலையிலும் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் என்பதைத் தவிர வேறென்ன தெரியும்?

"நீங்கள்....." அவன் இன்னும் தயங்குகிறான். அவனுக்குப் பெயர் என்னவாக இருக்கலாம்? எனது அப்பாவின் பெயர் மயில்வாகனம். அந்தப் பெயர் இல்லாமல் வேறேதாகவும் இருக்கட்டுமே!

"உங்களுக்குத் தேவையானால் இதைப் பாவியுங்கள். அவன் ஒருபடியாகச் சொல்லி முடித்துவிட்டான். ஒரு சில நிமிட நேரத்தில் எனது மனதில் நடந்த நாடகத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி.

என்னவெல்லாம் எண்ணிவிட்டேன்? அவன் "எக்ஸ்கியூஸ் மீ" சொன்ன நேரத்திலிருந்து இந்த விநாடிவரை அவனை எத்தனை கதாபாத்திரங்களாக்கி என் மனதில் அரங்கேற்றிவிட்டேன்? இவனிடம் எனது அக்காவைப்பற்றி நிறையச் சொல்லவேண்டும்போல் இருக்கிறது.

"தாங்ஸ், எனக்கு நிறையப் படிக்கக் கிடக்கிறது." நான் உண்மையான காரணத்தைச் சொல்கிறேன். என் மனதில் அம்மா, அப்பா, அக்கா, அவள் Boy Friend எல்லாரையும் விட Bacteriaவும் Viruses உம் முன் நிற்கின்றன. எனது படிப்பு சிந்தனையை அழுத்துகிறது. அக்காவுக்காக அம்மா, அப்பா நடத்தும் நாடக அரங்கேற்றத்தை நான் மனதிலிருந்து அகற்றவேண்டும். வாழ்க்கை ஒவ்வொருநிமிடமும் மாறிக்கொண்டிருக்கிறது. அதற்கேற்ப நான் என்னை மாற்றிக் கொள்ளவேண்டும். ரெயின் நின்றுவிட்டது. நாங்கள் அவசரப்பட்டு இறங்கிக் கொண்டோம். நான் ஒரு நாளைக்கு அவன் பெயரைத் தெரிந்துகொள்வேன்.

# கனவுகளுக்கு வாழ்த்துக்கள்

கனவுகளுக்கு
வாழ்த்துக்கள்.

உறவுகள் தொலைவுகொண்டு
பல்வேறு புவிப்பரப்பில்
அசைவுகொள
வண்டல் மனத்தில்
ஸ்தூலமாய் உறவுகள்
கனவில் துலங்கும்.

ஒரு வசந்தகால வனப்பாய்
மகிழ்வும் நிறைவுமாய்
புலரும் அக்காலைகள்.

இந்த மகிழ்வை
இங்கெவர் எமக்கு அளித்தல்
கூடும்

கனவுகளே மலர்க
உறவினில் வளர்க.

# யன்னல்

இன்னமும் எத்தனை நாட்கள்
யன்னல் ஓரமும்,
வீதியில் தேடிடும் விழிகளும்.

புகார்மூட்டத்துள்
பொலிவிழந்த குளிர்கால
மரங்கள்.
விரைவு கொள்ளும்
மனிதர்களும்,வாகனங்களும்.

இருப்பின் வெறுப்பில்
மாற்றமுற
மண்ணின் மணத்தில்
தவிக்கும் மனம்.

எத்தனை மாதங்கள்
இன்னமும் கடிதமில.

மு. புஷ்பராஜன்.


*** Planning To Purchase Business ?**
*** Outstanding Tax Problems ??**

*For* FREE *initial discussion:*

081-514 4270 (24 HOUR ANSWERING)

*Book-keeping *Accounting *Auditing
*Payroll *Tax planning *Secretarial
*Projections/ Cash flow *Limited Companies Formed *Advice on Computers

**Fast, Efficient and Excellent Service**
at
**Competitive Rates...**

VINNEY VIGNES
CERTIFIED ACCOUNTANTS & REGISTERED AUDITORS




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரிட்டனில் வாழ விரும்பாத பிரிட்டிஷார்

## பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் கனவாகிவிட்டது

பிரிட்டிஷ் மக்களில் ஏறத் தாழ சரிபாதிப்பேர் பிரிட்ட னுக்கு வெளியே வாழவே விரும்புகிறார்கள். வேறுநாடுகளுக்கு குடிபெயர்ந்து, அங்கே குடியேற விரும்புகிறார்கள். அதிர்ச்சிதான்! ஆனால் உண்மை!

எத்தனையோ மூன்றாவது உலக நாடுகளைச் சார்ந்த மக்கள் இங்கே பிரிட்டனுக்கு வந்து, கடவுச்சீட்டை நீட்டி,"நிரந்தரமாக இங்கே வாழ, இவர்கள் அனுமதி அடித்துத்தரமாட்டார் களா," என்று ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளூர் பிரிட்டிஷ் குடிமக்களில் சரி பாதிப்பேர் என்ன சொல்கிறார்கள்? "இங்கே இருக்கவே பிடிக்கவில்லை. வேறுஎங்காவது போய்க் குடியேறிவிட்டால் தேவலை" என்று முகம் சுளித்துக் கூறுகிறார்கள்.

பிரிட்டனின் எஸெக்ஸ் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் , ஒரு மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தினார். ஒரு வாரகாலத்தில் நாட்டின் 100 மாவட்டங்களில், 1030 பேரைச் சந்தித்து, கருத்துக் கேட்டார். பேராசிரியர் அந்தனி கிங், அரசியல் நிபுணர். ஆகவே, நாட்டின் 49சதவிகித மக்கள் வெளிநாட்டுக்குக் குடிபெயர விரும்புகிறார்கள் என்று அவர் விபரம் வெளியிட்டதும், நாடே ஒரு கணம் அதிர்ந்தது!

இது எதனை உணர்த்துகிறது? பேராசிரியர் அந்தனி கிங், மேலும் துருவி ஆராய்ந்தார். " இந்த நாட்டில், நீங்கள் பெருமைப்படக் கூடியதாக, இன்று எதைச் சுட்டிக் காட்டுவீர்கள்?" என்று ஒரு கேள்வியை அவர் கேட்டார். "எதையுமே சிந்தித்துப் பார்க்க முடியவில்லை"- என்று 39 வீதத்தினர் பதிலளித்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்ற அந்தப் பெரிய அன்றைய நிகழ்வு, இன்று வெறும் கனவாகிவிட்டது என்பது பலருடைய துயரம். இனி உலகின் மிகப் பெரிய வர்த்தக நாடாக, வர்த்தக வழிகாட்டியாக விளங்கிய பிரிட்டன், இன்று நொண்டி-நொண்டி, பின்னால் வந்து கொண்டிருப்பதாக, பலரும் கருதுகிறார்கள்.

"எப்படியோ ஒருவாறு தேறி, வர்த்தக முன்னேற்றம் பெறக்கூடிய வாய்ப்பு பிரிட்டனுக்கு இருப்பதாகக் கருதுகிறீர்களா"என்று இன்னொரு கேள்வி. இதற்கும் எல்லோருமே பதிலாக உதட்டைப் பிதுக்குகிறார்கள். "ஜெர்மனிக்கோ, ஜப்பானுக்கோ அருகில் போகும் அருகதை கூட நம்நாட்டுக்கு இல்லையே" என்று அயர்வோடு கூறுகிறார்கள்.!

இனி, நாட்டிலே, குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன. விளக்குவைத்தபின் வீதியிலே இறங்குவது ஒருபுறம் இருக்கட்டும். பகல் வேளையில் கூட, தனித்த இடத்தில் ஒருவர் தனியாக நட மாடும் போது- காடையர்களின் கைவரிசைக்கு இலக்காகும் ஆபத்து மலிந்து விட்டதாகவும் மக்கள் அஞ்சுகிறார்கள். இப்படியான நிலையிலே நாடு என்ற தேர்- செவ்வையான தடத்திலே ஓடவில்லை என்றே பலரும் கூறுகிறார்கள். போதாக்குறைக்கு அரச குடும்பத்திலே இடம் பெறும் உள் வீட்டு விவகாரங்கள், வீதி சிரிக்க வெளியே வந்திருப்பதுகூட, பல பிரிட்டிஷ் குடிமக்களுக்கு ஆயாசத்தைத் தந்திருக்கிறது. இப்படியான கட்டத்திலே தான்,1948 இல் இருந்து, ஆண்டு தோறும் கேட்கப்பட்டுவரும் ஒரு கேள்வி, கருத்துக் கணிப்புக் கேள்வி பொது மக்கள் முன்னிலையில் வைக்கப்பட்டது. "எந்தவிதமான கட்டுப்பாடோ தனிப்பட்ட கரைச்சலோ இல்லாத நிலையில், இந்த நாட்டை விட்டு வெளியேறி வேறு நாட்டில் குடியேறிவாழ விரும்புவீர்களா?" என்பது தான் கேள்வி! 49 சதவீதத்தினர், ஆமென்றே கூறியிருக்கிறார்கள். இந்த விழுக்காடு, இதற்கு முந்திய அனைத்து விழுக்காடுகளையும் தூக்கி எறிந்து விட்டது! 1948 இலே, 40 விழுக்காடு; 1955ல் 30க்கு குறைவு; 1964இல் இருபத்தியேழு மட்டும்; 1973 இலே அது 35 விழுக்காடாக அதிகரித்து, இன்று, வெறுப்பின் உச்சக்கட்டமாக 49 விழுக்காட்டைத் தொட்டு நிற்கிறது.

பொருளாதாரப் பிரச்னை; பின்னடைவு; வேலையில்லாதோர் தொகை மூன்று மில்லியனைக் கடந்துவிட்ட இயலாநிலை! விரைவில் மீட்சியைப் பெறமுடியாது என்று அயர்ந்துவிட்ட விரக்தி! இவைகூட, மக்களின் மனத் தளர்வுக்கு ஓரளவு காரணம், என்று துணிந்து கூறலாம்.

இதற்காக, தங்கள் நாட்டை அருவருப்போடு பிரிட்டிஷ் மக்கள் பார்க்கிறார்கள் என்பதல்ல! பிரிட்டிஷ் சாம்ராஜ்மும், அது தோற்றுவித்த நாகரிகமும், உலகுக்கு வழங்கிய பங்களிப்பை, மக்கள் பெருமையோடு நினைவு கூருகிறார்கள். இனி, ராணுவம் என்று வந்தால், உலகமுழுவதிலும், தொழினுட்பத்திறனும், சிறந்த பயிற்சியும் பெற்ற ராணுவம் பிரிட்டிஷ் ராணுவமே என்று அவர்கள் கருதுகிறார்கள். பிரிட்டனின் வீடுகள் கூட முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட, இப்போது வசதிகளும் கதகதப்பம் கொண்டு விளங்குவதை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

பிரிட்டிஷ் பெண்களின் ஆடை அலங்காரம் புதுப்புனைவு பெறுவதையும், உணவு கூடங்கள் தரம் உயர்வதையும், உலகின் சிறந்த நாடக அரங்கங்கள் பிரிட்டனிலேயே இருப்பதையும், அவர்கள் பெருமையோடு கூறிக்கொள்கிறார்கள். இனி, சகிப்புத்தன்மை நிறைந்த ஒரு நாடாக பிரிட்டன் விளங்குவதும், மக்களுக்குத் தனியான தலைநிமிர்வைத் தருகிறது!

ஆனாலும், ஏமாற்றம் முன் எப்போதையும் விட, மிதந்து நிற்கிறது. பிரிட்டிஷ் சட்டம் நேர்மையானது என்ற நம்பிக்கை இப்போது- 36 வீதத்தினருக்கே இருக்கிறது. நாடாளுமன்றம் நல்லது செய்யும் என்று இன்று நம்புகிறவர்கள் 30 வீதத்தினர் மட்டுமே.

இவற்றையெல்லாம் ஆய்ந்து, பேராசிரியர் அந்தனிகிங் கருத்துத் தெரிவித்த போது, இன்று இந்த நாட்டுக்கு மிக அவசியமாகத் தேவையானது, ஒரு நம்பகமான அரசியல் தலைமையே என்று தெரிவிக்கிறார். நாடு என்றதேரை நிச்சயமாக முன்னே நகர்த்தலாம், என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டினால், அவர்கள் தேறுதல் பெறுவார்கள்; ஆற்று வெள்ளத்தில் முக்குளித்துத் திணறும் ஒருவன், ஒரு சிறு குச்சியைக்கூட, பற்றுக்கோடாகப் பற்றுவது போல நம்பகமான ஓர் அரசியல் தலைமை வந்தால், மக்களிடம் தேறல் உணர்வு மீண்டும் ஊறத் துவங்கிவிடும் என்றும், பேராசிரியர் கிங் நம்பிக்கை தெரி விக்கிறார்.

- கரகல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்கள் பார்வைக்கு பக்கிங்ஹாம் மாளிகை

தர்ஷினி

பக்கிங்ஹாம் அரச மாளிகையின் சில பகுதிகள் பொது மக்கள் பார்வைக்காக திறந்துவிடப் படவிருக்கின்றன. இங்கிலாந்தின் பாரம்பரிய அரச மகத்துவங்களுடன் காட்சிதரும் இம்மாளிகையின் வெளிப்புற தோற்றத்தை மட்டுமே கண்டு பரவசப்பட்டு, பெருமூச்சு விட்ட பிரிட்டிஷ் மக்களும் உலக உல்லாசப் பயணிகளும் 8 பவுண்களுக்கு, அநுமதிக்கப் பட்ட பகுதிகளைப் பார்வையிடலாம்.

கடந்த சில காலமாக இங்கிலாந்தின் முடி தரித்த அரகுலத்தில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் சில அசாதாரண நிகழ்வுகள் முடிக்குரிய அரசாட்சியினையும், அரசகுல வம்சத்தின்தாத்பரியங்களையும் பல்வேறு விதங்களில் தாக்கிக் கொண்டிருக்கின்றன. அரசாட்சியில் இருந்துவந்த ஒவ்வொரு கம்பீரமும் ஆட்டம் கண்டு போகக்கூடிய வகையில்- சில "நடக்கக் கூடாத" வரலாற்று நிகழ்வுகள், இடம் பெற்றுக் கொண்டிருப்பது அரசாட்சியின் மகோன்னதத்துக்கு இழுக்கையே தேடிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. உலகம் விழிகளை உயர்த்தி வியப்புடனும், கண்டன விமர்சனங்களுடனும் நோக்கும் நிலைக்கு அரச வம்சத்தினர் ஆளாகியுள்ளனர். இந்நிலையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் அரிய பல புராதன கலைக்கருவூலங்களையும், கலைப் பொக்கிஷங்களையும் கொண்டதுமான மகாராணியின் 'வின்சர்காசில்' திடீரெனத் தீப்பற்றி எரிந்து பாரிய அழிவை ஏற்படுத்தியது. இது இங்கிலாந்தின் வரலாற்றில் ஏற்பட்ட ஓர் அவல நிகழ்வாகும்.

ஈடுசெய்ய முடியாத அரும்பொருட்கள் நாசம் அடைந்ததோடு மட்டுமல்லாது அதன் வரலாற்றுக் கோலமும் காலகாலமாய்க் கட்டிக் காத்து வந்த அந்தக் கலைமாடத்தின் கனமும் நலிந்து போனதில் ஏற்பட்ட அகப் பாதிப்புக்களே அதிகம். அத்துடன் எலிசபெத் மகாராணியின் ஆட்சியில் ஒரு கரும் புள்ளியாக இருக்க முனையும் இந்த தீ பற்றிய சம்பவத்தை ஓரளவேனும் துடைத்துவிடுவதற்காகத்தான் ஆண்டாண்டு காலமாக அரச டாம்பீகங்களுடனும் தனித் தன்மைகளுடனும் திகழும் பக்கிங்ஹாம் அரண்மனை கதவுகளைப் பொதுமக்களுக்காகத் திறந்துவிடுவதென எலிசபெத் மகாராணி அறிவித்தார். எந்தவொரு சாதாரண குடிமகனும் கனவில் கூடக் கண்டிருக்க முடியாத அரச மாளிகையை 8 பவுண்களுக்கு வலம் வந்து பார்க்க இன்று மகாராணி வாய்ப்பு அளித்துள்ளமை வரலாற்றில் ஏற்பட்ட ஒரு முக்கிய திருப்பமே. எரிந்து போன வின்சர் காசிலின் புனரமைப்புக்கான பணத்தை மகாராணி தனதுஅரண்மனையை மூலதனமாக வைத்துப் பெறவிழைந்தது சிறிது வித்தியாசமான சம்பவம் தான்.

மே மாத முற்பகுதியில் எலிஸபெத் மகாராணியின் இவ்வறிவித்தலையடுத்து ஒரு வாரத்திலேயே 1995ஆம் ஆண்டு வரைக்கான முற்பதிவு ரிக்கட்டுக்கள் தீர்ந்து போயின. அதிருஷ்டவசமாக, 10 சதவிகித ரிக்கட்டுக்களே முற்பதிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மீதி ரிக்கட்டுக்களை தினமும் பிரிட்டனின் மற்றொரு பாரம்பரிய முறையான கியூவில் நின்று பெற்றுக்கொள்ளலாம். வழக்கமாக, ஒவ்வோராண்டும் அரச குடும்பத்தினர் ஸ்கொட்லாந்து பலமோரல் கோட்டையில் தங்கும் ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் பக்கிங்ஹாம் மாளிகைக்கு பார்வையாளர்கள் அநுமதிக்கப்படுவர்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் 20 லட்சம் பார்வை யாளர்களிடமிருந்து கிடைக்கும் பணம் வின்சர் காசில் புனரமைப்புக்கு உத்தேசமிடப்பட்ட 40 மில்லியன் பவுண்களில் கணிசமானபங்கினை மகாராணிக்கு அளிக்கும்.

ஜோர்ஜ் மன்னரினால் 1761ல் வாங்கப்பட்ட இந்த பக்கிங்ஹாம் கட்டடம் அடுத்த ஜோர்ஜ் மன்னரி னால் 1825ல் அரச மாளிகையாக வடிவமைக்கப்பட்டது. ஜோன் நாஷ் என்னும் பிரபல கட்டட வரைபடக் கலைஞர் அரசமாளிகையின் முக்கிய கூடங்களை வடிவமைத்துக் கொடுத்தார். அறைகளின் அலங்காரம் மிகப்பெரியமாடி உத்தரம் என்பனவற்றை அழகுற அமைத்துக் கொடுத்ததில் ஏற்பட்ட செலவு 1828ம் ஆண்டிலேயே 3900 பவுண்கள். அரச மாளிகையின் ஓவியக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ள அரச பரம்பரையினரின் வம்சாவழி ஓவியங்களின் எண்ணிக்கை மாத்திரம் ஏழாயிரத்திற்கு மேல். இத்தொகை நஷனல் கலரியில் வைக்கப்பட்டுள்ள ஓவியங்களைவிட மூன்று மடங்கு அதிகமாகும். உலகிலேயே பாரிய தனிப்பட்ட கலைக்களஞ்சியம் இதுவேயாகும்.

இதுவரைகாலமும் யாருமே பார்த்திருக்காத - 1663 இல் வரையப்பட்ட Anthony Van Dyck இன் பிரபல ஓவியமான "குதிரைமேல் முதலாவது சாள்ஸ்" என்ற ஓவியம் உட்பட அரசமாளிகையின் அந்தரங்கத்தில் மறைக்கப்பட்டிருந்த அரிய பொக்கிஷங்கள் பல 'அம்பலத்துக்கு' வரவிருக்கின்றன.

மாளிகையின் பிரதான வாயிலூடு செல்லும் மக்கள், பளிங்கு மண்டபம், பாதுகாப்பாளர் மண்டபம், கலைக்கூடங்கள், பச்சை, நீல, வெள்ளை வரவேற்பு மண்டபங்கள், விருந்து மண்டபம், இசைக்கூடம், அரியணை மண்டபம் உட்பட மேலும் சில பகுதிகளையும் பூங்காவையும் பார்வையிடலாம். அத்துடன், டயானாவும், போர்கியும் மணப்பெண்களாக நின்று திருமணதின முத்தங்களைப் பறக்கவிட்ட மாளிகையின் வட உத்தரத்தையும் பார்வையிடும் வாய்ப்பு கிட்டுகிறது. மொத்தத்தில், பக்கிங்ஹாம் மாளிகையின் 600 அறைகளில் 19 அறைகள் பார்வைக்காக விடப்படுகின்றன. இவையே மக்களின் ஆர்வத்துக்குப் போதுமானவையாக இருக்கின்றன.

'றோயல் பமிலி', 'றோயல் பலஸ்' போன்ற விடயங்கள் சாதாரண மக்களின் தரத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களாக இருந்தகாலம்மாறி, இன்று 8 பவுண்களுக்கு அரசமாளிகைக்குள் நுழையக்கூடிய வசதியை மக்கள் பெறுவது ஒரு வரலாற்றத் திருப்பம் எனக் கொள்ளலாம். எரிந்துபோன வின்சர் கோட்டையைப் புனரமைப்பதற்கு வேறுவழிகளில் பணம் திரட்டுவது இயலாதது தானா? என்றகேள்வி இதன் பின்னணியில் எழுகிறது. அண்மைக்காலத்தில் அரச குடும்பத்தில் ஏற்பட்ட பிணக்குகளினால் உண்டான புழுதிமண்டலத்தைத் துடைப்பதற்கு இம் முன்மாதிரி நிகழ்வு ஏற்பாடாயிற்றா? என்றும்கூட கேட்கத் தோன்றுகிறது.

அரச மாளிகைக்குள்-அரசகுடும்பத்துக்குள் 'என்னவோ இருக்கின்றது' என்று நினைப்பவர்களுக்கு "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, வந்துபாருங்கள்" என்று கூறுவதான அரசியாரின் மதிநுட்பம் இதுவேன்றுகூடக் கொள்ளலாம்.

எது எப்படியிருப்பினும், மாளிகையும், மண்குடிசையும் ஒன்றாக சந்திக்குமோர் வரலாற்று நிகழ்வு நடைபெறுவது இக்கால கட்டத்தில் 'உலகஅரங்கில் நடைபெறும் 'சாதாரணவிடயம் தான்' என்று எண்ணினாலும் ஆச்சரியப்படக்கூடியதல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இருபது ஆண்டுகளுக்கு மேலாக லண்டனிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த Spare Rib பத்திரிகை நின்றுவிட்டது.

இந்தியாவில் Manushi போன்ற பத்திரிகைக்கு ஆதர்ஷமான பத்திரிகை.

இந்தப் பத்திரிகை நின்றுபோனது குறித்து நிறைய விவாதங்கள்.

Spare Rib தொடக்க காலத்தில் ஆங்கில நடுத்தரவர்க்கத்தின் gentle women பத்திரிகை. அதன் போக்கில் அது வந்தடைந்த இடம் தீவிர பெண்ணிலைவாதம்.

சமபாலுறவும் மூன்றாம் உலக விடுதலைப் போராட்டப் பாங்கும் அதன் அக்கறைகள் ஆயின.

நிறவெறிப் போராட்டம் அதன் ஆசிரியர் குழுவுக்குள்ளும் தொடர்ந்தது.

ஒன்றுபட்ட பெண்நிலைவாத இயக்கம் இல்லை என்பதைத்தான் Spare Rib இன் மரணம் நிரூபிக்கிறது என்கிறது EVERY WOMAN பத்திரிகை. தீவிர பெண்நிலைவாதம் தான் Spare Rib பத்திரிகையை ஆண்களுக்கெதிரான பத்திரிகையாக ஆக்கியது என்கிறது GUARDIAN கட்டுரையும், அமெரிக்க MS பத்திரிகையும்.

அதன் இறுதிநாட்களில் Spare Rib முழுக்கவும் அரசியல் ரீதியான பெண்நிலைவாதப் பத்திரிகை ஆகியது.

இதை ஆங்கில நடுத்தரவர்க்கம் மட்டுமல்ல எந்த தேச வர்க்கமும் ஏற்காதுதானே?

கடைசி இதழ்களில் பணியாற்றிய பெரும்பாலான ஆசிரியர்குழு உறுப்பினர்கள் கறுப்பு நிறத்தவர்.

........................

மடோன்னாவின் EROTICA புத்தகம் பற்றி நிறையப்பேசப்பட்டது. அமெரிக்க தெருக்களின் பின்னணியில் சம்போகக்காட்சிகளை படம்பிடித்துக் காட்டப்பட்ட புத்தகம் இது. 5 பவுண்டுகள் விலை. அயர்லாந்து இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது.

இதன் பிரதியொன்று வைத்திருந்தார் என்பதற்காக குஷ்வந்த் சிங் வீடு முற்றுகையிடப்பட்டு வேட்டையாடப்பட்டார் என்பது செய்தி.

Demistifing Sex தான் தனது நோக்கம் என்கிறார் மடோன்னா.

பெண்விடுதலைப் பதிப்பகமான லண்டன் VIRAGOவைச் சேர்ந்தவர் 'அவ்வாறென்றால் இப்புத்தகம் 5-6 பவுன்களில் மலிவுப் பதிப்பல்லவா வந்திருக்க வேண்டும்? மடோனாவின் நோக்கம் விளம்பரம்; காசு சேர்ப்பது. மற்றதெல்லாம் கதை' என்கிறார்.

மடோன்னாவின் IMMACULATE COLLECTION பார்த்தேன். அழகான படப்பிடிப்பும் அழகான மனித உணர்வும் இதில் உண்டு.

மடோன்னா ஆற்றல்மிக்கவர். அவரிடம் அழகும் உண்டு. அசிங்கமும் உண்டு. MATERIAL GIRL பாட்டைக் கேளுங்கள். அது அழகு. லத்தீன் அமெரிக்க TANGO நடனப் பாடல் அழகு. தந்தைக்கும் மகவுக்கும் உறவைச் சொல்லும் பாடல் அழகு. மடோன்னா பற்றிய சர்ச்சை தொடரும் சர்ச்சைதான்.

........................

சுபமங்களா' என்றொரு பத்திரிகை. கருநாடகமான பெயர்தான்.

ஏற்கனவே மங்கையர்மலர் மாதிரி அம்மாமிகளின் பத்திரிகையாக நிலைபெற்றிருந்தது.

கோமல் சுவாமிநாதன் அதை எடுத்தார். பாலச்சந்தர் கோமலின் 'தண்ணீர் தண்ணீர்' நாடகத்தைப் படமெடுத்தார். படம் அற்புதம். சுபமங்களாவும் கோமலின் ஆசிரியத்துவத்தில் அற்புதம்.

கோமல் சினிமா இயக்குநரும் ஆவார். 'அனல்காற்று', 'இந்தியக்கனவு' அவர் படங்கள்.

இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் ஈடுபாட்டுடன் செயல்படுபவர். மார்க்ஸீச ஈடுபாடுடையவர்.

புதிய நாடக விழிப்புணர்வை விழைபவர்.

நல்ல சமாச்சாரங்களை விரும்புவர்கள் சுபமங்களா பத்திரிகையை வாசியுங்கள்.

........................

ஐரோப்பாவில் நிறைய தமிழ்ப் பத்திரிகைகள், மாதசஞ்சிகைகள் வருகின்றன. சில வற்றைப் பார்க்கவும் முடிகிறது.

அனுப்பிவைத்தால் அவற்றைப்பற்றியும் ஜன்னலில் கொஞ்சம் பேசிப்பார்க்கலாம்.

-செந்தமிழன்

## "ஓ...வண்டிக்காரா"

ஈழத்தில் மெல்லிசைப் பாடல்கள் தொடர்பான பிரக்ஞைபூர்வமான பரிசோதனைகள் எழுபதுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அதன் ஆரம்பத்திலிருந்து உழைத்து வரும் மெல்லிசைச் கலைஞர்களில் மா.சத்தியமூர்த்தியும் முக்கியமானவர். வளமான சாஸ்திரீய சங்கீதமான கர்நாடக சங்கீத மரபும், செழுமைமிக்க நாட்டார் இசைமரபும் எம்மிடையே இருந்தாலும், பொதுவாக,'மெல்லிசை' என்ற வடிவம் சற்று 'ஒதுக்கப்பட்ட' ஒன்றாகவே கர்நாடக இசைக் கலைஞர் மத்தியில் கணிக்கப்படுவது கவலைதருவதே. இருந்தும் கர்நாடக இசை அறிவுடைய திரு சத்தியமூர்த்தி தொடர்ந்தும் மெல்லிசைத் துறையில் உழைத்து வருகிறார்.

மெல்லிசைப் பாடல்களில் வார்த்தைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சமூகப் பிரக்ஞையுடன் கவிஞன் சொல்லவரும் செய்தி இங்கு முக்கியம் பெறுகிறது. பாடலின் வார்த்தை உணர்த்தவரும் செய்தியை ரசிகனுக்கு சுவையாக, ஆர்வமூட்டும் முறையிற் சொல்கிற சூழல் இசையில் ஏற்படுத்தப்படவேண்டும். நல்ல குரல் வளமுள்ள சத்தியமூர்த்தி இவற்றை உணர்ந்து செயல்படுவதை மெல்லிசை ஆர்வலர்கள் அறிவர்.

அண்மையில், இலங்கை வானொலியில் சத்திய மூர்த்தி பாடிய பாடல்கள் அடங்கிய ஒலிநாடா ஒன்று, 'அகதி' பத்திரிகையின் ஏற்பாட்டில் லண்டனில் வெளியிடப்பட்டது. "ஓ...வண்டிக்காரா" என்ற தலைப்பிலான அந்த ஒலிநாடாவில் ஈழத்துக் கவிஞர்கள் நீலாவணன், சில்லையூர் செல்வராசன், வீரமணி ஐயர், அக்கரைப் பாக்கியன் ஆகியோர் எழுதிய பாடல்களுக்கு கண்ணன்- நேசம், மோகன்- ரங்கன், முத்துசாமி ஆகியோர் இசையமைத்துள்ளனர். ஒரு பாடலை கோகிலா தங்கராசாவுடன் இணைந்து பாடியுள்ளார். இந்த ஒலிநாடா மறைந்த, ஈழத்தின் புகழ்பெற்ற இசை அமைப்பாளர் ஆர். முத்துசாமிக்கு காணிக்கை.

க. பாலேந்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# WINGS WORLDWIDE TRAVEL

**77, HOE STREET WALTHAMSTOW, LONDON E17 4SA**

**BEST FARES ON ALL SCHEDULE AND CHARTER FLIGHTS TO ANY DESTINATION OF YOUR CHOICE**

| Rtn. Fares | | | | |
|---|---|---|---|---|
| | COLOMBO | £370 | SINGAPORE | £380 |
| | MADRAS | £420 | BANGKOK | £350 |
| | TORONTO | £199 | SYD / MEL | £530 |

RESERVATIONS
TICKETINGS
TRAVEL - INSURANCES
HOTELS
CAR - HIRE
&
FLY - DRIVE

***Cheapest Return Fares To Colombo By Air Lanka!***


**CALL US FOR DETAILS ON**

**081 - 521 6216**
**081 - 521 6456**

ONE CALL WILL SAVE YOUR MONEY AND TIME

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Greenles Travels

-Worldwide Travel Experts-

★ Supreme Value
★ Superior Service
★ Reliability
★ Caring Friendliness

We offer cheap fares on almost every airline to
USA - CANADA - EUROPE - FAR EAST
SRI LANKA - MADRAS - BOMBAY - PAKISTAN

For any booking Contact:
David Leach
Tel: 081-795 1816

# RAJA & CO
SOLICITORS

295 Balham High Road, Tooting Bec, London SW17
Tel: 081-682 2585  Fax: 081-682 2575

Raja Thavarajah LL.B

**Fixed Fee (Residential & Commercial Properties)**
**&**
**A full range of legal services available:**
**Conveyancing, Immigration, Landlord & tenants disputes,**
**Criminal Court and Police Station work undertaken.**
**Legal Aid available.**

Branch at:
338 Hoe Street, Walthamstow, London E17
Tel: 081-503 6311  Fax: 081-503 7523


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விஜயம் செய்யுங்கள்!

குளிரூட்டப்பட்ட எமது நிறுவனம்
உங்கள் மனதுக்கும் இதமூட்டும்.



எல்லா விதமான
இலங்கை, இந்திய உணவுப் பொருள்கள்

பத்திரிகை,

சஞ்சிகைகள்
Video, Audio கஸட்டுகள்,

CD க்கள்.

ஒவ்வொரு மாதமும்
£20 க்குமேல் பொருள்கள் வாங்கும்
அதிருஷ்டசாலி ஒருவருக்கு
பாரிஸ் போய்வர
விமானச் சீட்டு ஒன்று
இலவசம்!

**Ruby's**
52 High Street, Southall, Middx.
Tel: 081-813 9663

# Ruby's


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்